# மன்னா

## நம் மன மாற்றத்தின் அருளடையாளச் சின்னமாகத் தவக்காலம் வழங்கப்படுகிறது

# பணத்தின்மீது வளரும் மோகம், பிறரன்பை அழித்துவிடுகிறது!

### செபம், பிறரன்புச் செயல்கள், உண்ணா நோன்பு ஆகியவற்றின் வழியே உலகின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணமுடியும்

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி



"நெறிகேடு பெருகுவதால் பலருடைய அன்பு தணிந்து போகும்'' (மத்தேயு24:12). என்று நற்செய்தியாளர் மத்தேயு பதிவு செய்துள்ள இயேசுவின் சொற்களை மையமாக வைத்து, இவ்வாண்டுக்குரிய தவக்காலச் செய்தியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார். இம்மாதம் 14ம் திகதி, சிறப்பிக்கப்படும் திருநீற்றுப் புதனன்று துவங்கும் தவக்காலத்திற்கென, செவ்வாயன்று செய்தி வெளியிட்ட திருத்தந்தை, நம் மன மாற்றத்தின் அருளடையாளச் சின்னமாக, தவக்காலம் வழங்கப்படுகிறது என்று இச்செய்தியை துவக்கியுள்ளார்.

தன் இறுதி நேரம் நெருங்கி வருவதை உணர்ந் கூறிய வார்த்தைகளை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இறைமக்கள் பலர் தற்காலிக இன்பங்களில் தங்களையே இழந்து, அடிமையாகி, தனிமையில் சிறைப்பட்டுள்ளனர் என்பதை எடுத்துரைத்துள்ளார்.

போலி இறைவாக்கினர்கள் துன்பங்களுக்கு எளிதான தீர்வுகளை முன்வைத்து, இளையோரை போதைப் பொருள்களுக்கு அடிமையாக்குவதுடன் பயன்படுத்தி தூக்கியெறியும் உறவுகளையும், நேர்மையற்ற இலாபத்தை ஊக்குவிப்பதையும் தன் தவக்கால செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பணத்தின்மீது வளரும் மோகம், பிறரன்பை அழித்து விடுகிறது என்பதையும் வலியுறுத்தியுள்ள திருத்தந்தை, இத்தவக்காலத்தில் செபம், பிறரன்பு செயல்கள், மற்றும் உண்ணா நோன்பு ஆகியவற்றின் வழியே, உலகின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும் என்று இச்செய்தியில் கூறியுள்ளார்.

## வவுனியா பெரியகோமரசன்குளம் கல்வாரித் திருத்தல தவக்கால வழிபாடுகள்






மன்னார் மறைமாவட்டத்தின் வவுனியா மறைக்கோட்டத்தில் அமைந்துள்ள பெரிய கோமரசன்குளம் கல்வாரித் திருத்தலத்தின் தவக்கால வழிபாடுகள் இவ்வாண்டும் சிறப்பாக இடம்பெறுவதற்குிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வவுனியா மறைக்கோட்ட முதல்வரும் கோமரசன்குளம் பங்குத்தந்தையும், கல்வாரித் திருத்தலப் பரிபாலகருமான அருட்திரு. இ. அகஸ்ரின் புஸ்பராஜ் அடிகளார் இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொண்டுள்ளார். இந்த வழிபாட்டு ஒழுங்குகளின் வரிவான விபரங்களை 3ஆம் பக்கத்தில் காணலாம்.

**மன்னார் மறைமாவட்ட குடும்பநல பொதுநிலையினர் ஆணைக்குழுவின்**
**கீழ் உள்ள அனைத்துப் பணிக்குழுக்களின் பொதுநிலையினருக்கும்**
**ஏனைய இறைமக்களுக்குமான**


## தவக்கால ஞானவொடுக்கம் - 2018

**விபரம் 2ஆம் பக்கத்தில்**

## நானாட்டான் பங்கில் ஆரோக்கிய அன்னைக்குப் புதிய ஆலயம்







புதிதாகக் கட்டப்பட்ட நானாட்டான் பங்கு ஆலயமான புனித அடைக்கல மாதா ஆலயத்தின் திறப்பு விழா கடந்த பெப்ரவரி 5ஆம் திகதி இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## தவக்காலம்

### அருளின் காலம் .... மனமாற்றத்தின் காலம்....!



எதிர்வரும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி விபூதிப் புதனுடன் தவக்காலத்தை ஆரம்பிக்கின்றோம். இத்தவக்காலம் அருளின் காலம், மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்ந்து ஆன்மீகப் பாதையில் வழிநடப்போம்.

### மன்னா வாசகர்களே! மன்னா பணத்தை விரைவாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்!

பங்குகளில் நேரடியாகவும், பிற இடங்களில் தபால் மூலமாகவும் மன்னாவைப் பெறும் அன்புக்குரிய மன்னா வாசகர்களே, மன்னா பத்திரிகைக்கான பணத்தை விரைவாகச் செலுத்து எம்மோடு ஒத்துழையுங்கள்!

### மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 37 ஆண்டுகள் நிறைவு விழா

## தோட்டவெளி மறைசாட்சியர் அன்னை ஆலயத்தில் சிறப்புத் திருப்பலி

- புதிய நினைவுத் தூபி திறந்துவைக்கப்பட்டது!
- புதிய மன்னார் ஆயருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது!
- மறைசாட்சியர் கல்லறையில் செபம் ஏறெடுக்கப்பட்டது.
- புதிய திருப்பலி நூல் அறிமுகப்படுத்தப்பட்டது!















மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 37 ஆண்டுகள் நிறைவுவிழாத் திருப்பலி கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு தோட்டவெளி ஆலய நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான, அழகிய மறைசாட்சியர் அன்னை நினைவுத் தூபியை மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோஆண்டகை அவர்கள் திறந்து வைத்தார். நினைவுப் படிகக் கல்லை குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளாா திறந்துவைத்தார். அதனைத் தொடர்ந்து ஆயர் அவர்கள் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் தோட்டவெளி புனித யோசவ்வாஸ் பாடசாலை மாணவர்களின் மேற்கத்தைய இசை முழக்கத்துடனும், ஊர்ப்பெரியவர்களின் பாரம்பரியக் கவிப் பாடலுடனும் ஊர்வலமாக ஆலயம் நோக்கி அழைத்து வரப்பட்டார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# மன்னா
## மனப்பொழிவு
### பதிப்பாசிரியர் பகர்வது

## நோன்பிருப்போம்!

*தவக்காலத்தை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். தவக்காலம் அருளின் காலம் எனவும், மனமாற்றத்தின் காலம் எனவும் திருச்சபைத்தாய் நமக்குப் படிப்பிக்கின்றாள். கடவுளோடும் மனிதரோடும் ஒப்புரவாகி உறவைப் புதுப்பித்துக்கொள்ளும் உன்னத காலமாக இத்தவக்காலம் நமக்குத் தரப்பட்டிருக்கின்றது.*

*தவக்காலத்தில் பல்வேறு பக்தி முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றுள் உண்ணா நோன்பிருப்பதும் முக்கியமான ஒன்று. இந்த நோன்பிருத்தலைக் குறித்து இங்கு நாம் சிந்திப்போம்.*

*நோன்பு என்பது உணவை மறுத்தல் ஆகும். காலம் காலமாகவே மதம், மொழி, கலாசாரம் கடந்து மனித இனம் முழுவதும் நோன்பிருக்கும் பழக்கம் பரவியுள்ளது. நோன்பிருத்தல் பல வழிகளில் மனிதருக்கு பலன் அளிக்கிறது.*

### பல்வேறு பார்வைகளில் நோன்பின் சிறப்பு

*நோன்பின் சிறப்பை, அவசியத்தைப் பல்வேறு பார்வைகளில் நோக்க முடியும். **மருத்துவப் பார்வையில்** நோன்பு இருத்தல் பரிந்துரைக்கப்படுகிறது. வாரத்தில் ஒருநாள் உணவை மறுப்பது உடலுக்கு நலம் தருகின்றது. ஓயாமல் உழைக்கின்ற உடலின் உள் உறுப்புகளுக்கு இந்த நோன்பு ஓய்வைத் தருகின்றது.*

***உளவியல் பார்வையில்** உணவை மறுப்பது மனக்கட்டுப்பாட்டை வளர்க்க உதவுகிறது. நம் உணவுகளின்மீதும், செயற்பாடுகளின்மீதும் மனதுக்கு கட்டுப்பாடு தேவையெனில் அதை வளர்க்க பல முயற்சிகள் தேவை. அவற்றுள் ஒன்றுதான் நோன்பு. இந்த நவீன காலத்தில் இளையோர் மனக்கட்டுப்பாடுன்றி மனம் போன போக்கில் வாழ்கின்றனர். குறிப்பாக மனதில் தோன்றும் ஆசைகளை உடனே அடைந்திட வேண்டும் என்னும் வேட்கை இன்றைய இளைஞரிடையே அதிகரித்து வருகின்றது. அதை மாற்றி வாழ்வை ஒழுங்கமைவாக உருவாக்க நோன்பு பெரிதும் உதவுகின்றது.*

### ஆன்மீகப் பார்வையில் நோன்பு

***ஆன்மீகப் பார்வையில் நோக்கும்போது** நோன்பினால் குறைந்தது மூன்று ஆன்மீக நலன்கள் விளைவதாக ஆன்மீகவாதிகள் கூறுகின்றனர். முதலாவது **ஆணவம் அடங்குகின்றது.** ஏழு தலையான பாவங்களுள் ஒன்று ஆணவம். ஆணவம் நிறைந்த இதயம் இறைவனோடு உறவுகொள்ள முடியாது. தாழ்வுற்று நெருங்கிய உள்ளமே இறைவனுக்கு ஏற்புடையது. உடல் ஒறுத்தலின் வழியாகக் குறிப்பாக உணவை ஒறுக்கும்போது, நம் ஆணவம் அடங்குகின்றது. தாழ்ச்சியும் அமைதியும் இதயத்தில் குடிகொள்கின்றன. இரண்டாவது **மனம் மேலே எழும்புகின்றது.** உடல் ஒறுத்தலால் ஆணவம் குறைந்தவுடன் மனம் இறைவனை நோக்கி மேலே எழும்புகின்றது. எனவேதான் நோன்பிருந்து செபிக்கும்போது அந்தச் செபம் வலிமை நிறைந்ததாய் மாறுகின்றது. மூன்றாவது **நற்பலன்கள், புண்ணியங்கள் விளைகின்றன.** பிற மனிதனின் பொருட்டு நாம் சில துன்பத்தை ஏற்க முன்வரும்போது அது ஒரு நற்செயலாக, நற்பலனாக மாறுகின்றது. இறைவன் அந்நற்செயலுக்கு நிச்சயம் கைமாறு அருள்வார்.*

### நோன்பிருக்கும் வேளையில்

*உண்ணா நோன்பிருக்கும் வேளையில் நம் புலன்களை அடக்குவது எளிதாகின்றது. அவ்வேளையில் பாவ நாட்டங்கள், பாவச் சிந்தனைகள் நம்மைவிட்டுத் தூர விலகி நிற்கின்றன. இதற்கு இன்னும் வலுச்சேர்க்கும் வகையில் உண்ணா நோன்பிருக்கும் வேளையில் இறைவார்த்தையை வாசிப்பது மிகவும் நன்மை பயக்கும். உடலும் உள்ளமும் அமைதியில் இருக்கும் இவ்வேளையில் இறைவார்தையை வாசித்து தியானிப்பது நம்மை இன்னும் அதிகமதிகமாக இறைவனருகில் கொண்டுபோய்ச் சேர்க்கும்.*

### நோன்பும் பகிர்வும்

*நோன்பிருத்தலோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது பகிர்தலாகும். உண்ணா நோன்பிருப்பதனால் நாம் சேமிக்கும் உணவையோ அதற்கான பணத்தையோ இல்லாத ஏழைகளுடன் பகிர்ந்துகொள்வது முக்கியமாகும். அப்படியல்லாமல் ஒரு நேரம் அல்லது ஒரு நாள் உணவைத் தவிர்த்துவிட்டு மறுநேரம் அல்லது மறுநாள் தவிர்த்ததையும் சேர்த்து உண்ணும் நிலைப்பாடு எந்தவிதத்திலும் பயன்விளைவிக்காது.*

*இன்றைய அதீத ஊடகப் பாவனையினால், சமூக வலைத்தளங்களின் ஊடுருவலால் நமது மனம் பல்வேறு வகையில் அலைக்கழிக்கப்பட்டுள்ளது. எனவே இந்தத் தவக்காலத்தில் நமது பல்வேறு பக்தி முயற்சிகளோடு உண்ணா நோன்பையும் கடைப்பிடிப்போம். உள்ளார்ந்த அமைதியை அனுபவிப்போம்.*

***மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை***
***அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்***
***மன்னா பதிப்பாசிரியர்***

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வார நிகழ்வுகள்

## வவுனியாவில்





உலகளாவிய ரீதியில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் உலகக் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம் இவ்வாண்டும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்த வாரத்தை முன்னிட்டு வவுனியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் வவுனியா கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத்தினால் கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி வவுனியா நகரில் உள்ள அங்கிலிக்கன் தேவாலயத்தில் கிறிஸ்தவ ஒன்றிப்பு செபவழிபாடு நடாத்தப்பட்டது. மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. இ. அகஸ்ரின் உட்பட பல கத்தோலிக்க, அங்கிலிக்கன், மெதடிஸ்த இறைபணியாளர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் பங்கெடுத்தனர்.

“ஆண்டவரே உமது வலக்கை வலிமையில் மாண்புற்றது.” (வி.ப.15:16) என்ற வார்த்தையே இவ்வாண்டுக்கான கருப்பொருளாகத் தரப்பட்டிருந்தது. இந்த ஒன்றிப்பு வழிபாட்டின்போது அருட்திரு. தமிழ் நேசன் மறையுரையாற்றினார். வவுனியா கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத் தலைவரும் வவுனியாப் பங்குத்தந்தையுமான அருட்திரு. சத்தியராஜ் இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். இந்த அமைப்பின் செயலாளர் மெதடிஸ்த திருச்சபை அருட்பணியாளர் செல்வரஞ்சன் நன்றியுரை வழங்கினார். தேனீர் விருந்துபசாரத்துடன் இந்நிகழ்வு இனிதே நிறவுபெற்றது.

## முருங்கனில்





உலகக் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரச் சிறப்பு நிகழ்வுகள் கடந்த பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு ஒன்றிப்புப் பவனி முருங்கன் மெதடிஸ்த ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி கிறிஸ்து அரசர் ஆலயத்தை வந்தடைந்தது.

மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் திருச்சபைக் கொடியை ஏற்றிவைத்து அந்த நாளின் நிகழ்வுகளை ஆரம்பித்துவைத்தார். கத்தோலிக்க மற்றும் மெதடிஸ்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

மன்னார் ஆயர், மன்னார் மறைமாவட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன், மன்னார் மெதடிஸ்த திருச்சபையின் போதகர் அருட்திரு. ஜெகதாஸ் ஆகியோர் இந்நிகழ்வின்போது உரையாற்றினர்.

மன்னார் கிறிஸ்தவ திருச்சபைகளின் ஒன்றிய இணைத் தலைவர்களான முருங்கன் மறைக்கோட்ட முதல்வரும் கற்கடந்தகுளம் பங்குத்தந்தையுமான அருட்பணியாளர் எஸ். மாக்கஸ் அடிகளாரும், மெதடிஸ்த திருச்சபையின் முருங்கன் சேகர முகாமைக்குரு அருட்பணியாளர் ரவி முருகுப்பிள்ளை அவர்களும் இந்த நிகழ்வைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். முருங்கன் பங்குத்தந்தை அருட்பணி. றொக்சன் குரூஸ் அடிகளார் இந்நிகழ்வுக்கான முழுமையான அனுசரணையையும் ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தார். இந்த ஒன்றியத்தின் செயலாளர் திரு. தேவராசா அவர்களின் நன்றி உரையுடனும் ஆயர் அவர்களின் ஆசீருடனும் இந்நிகழ்வு இனிதே நிறைவடைந்தது.

# மன்னார் மறைமாவட்டம்

## திருவழிபாட்டு நாட்காட்டி - 2018

### பெப்ரவரி

01. காணிக்கை மாதா திருவிழா - மன்னார், பாலைக்குழி (காத்தான்குளம்), சாம்பல்தோட்டம், துள்ளுகுடியிருப்பு
- புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயம் - படகுதுறை (இலுப்பைக்கடவை)
- தூய செங்கோல் மாதா திருவிழா - முத்தரிப்புத்துறை

04. இலங்கை மாதா பெருவிழா
- அம்பிட்டியா தேசிய குருத்துவக் கல்லூரி விழா
- தூய செங்கோல் மாதா ஆலயம் - கற்குழி

09. புனித வனத்துச் சின்னப்பர் - 7ம் கட்டை (பம்பைமடு)

11. தூய லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைக்குத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை, மரக்காரம்பளை இறம்பைக்குளம், கீளியன்குடியிருப்பு, குஞ்சுக்குளம் (தேக்கம்)
- புனித மரியாள் - சௌத்பார்
- மேதகு பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் ஆயர் - ஆயர் அபிசேகம் (2012)

17. தூய லூர்து அன்னை திருவிழா - மாந்தை

22. புனித இராயப்பர் - கத்தாளம்பிட்டி

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

# கட்டுக்கரை குளத்திற்கு நீரை விடுவியுங்கள்


## ஜனாதிபதிக்கு கடிதம்

நாச்சியாதீவில் இருந்து 10 ஆயிரம் ஏக்கர் அடி நீரை விடுத்துத் தருமாறு கோரி கட்டுக்கரைகுள திட்ட முகாமைத்துவக்குழு சார்பாக, 10 வாய்க்கால் அமைப்புகள் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளன. தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தினை கட்டுக்கரை குள திட்ட முகாமைத்துவக் குழுசார்பாக 10 வாய்க்கால் அமைப்புகள் இணைந்து கையொப்பமிட்டு வெள்ளிக்கிழமை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளன.

இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: கட்டுக்கரை குளத்தின்கீழ் தற்போது 7 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் சுமார் 30 ஆயிரம் ஏக்கர் விவசாயச் செய்கையில் ஈடுபட்டுள்ளன. தற்போது 10 பிரதான வாய்க்காலுக்குக்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்களுக்கு நீர் வழங்கமுடியாத நிலை ஏற்பாட்டுள்ளது. குறிப்பாக அடைக்கலமோட்டை, பெரிய உடைப்பு, சின்ன உடைப்பு ஆகிய மூன்று வாய்க்கால்களுக்குக்கீழ் சொற்ப அளவு நீரோ பாயக்கூடிய நிலை உள்ளது.

சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு மட்டும் நீர் தற்போது பாய்ச்சக்கூடிய நிலை காணப்படுகின்றது.

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# குருத்துவம் என்பது பதவியல்ல அது இறை அழைத்தலாகும்



“குருத்துவம் என்பது பட்டமோ, பதவியோ அல்ல. அது இறை அழைத்தலாகும். குருத்துவத்தை வெற்றியின் பாதையில் கொண்டுசெல்வதற்கு உதவுவது, அக்குரு இறைவனோடு கொண்டுள்ள உறவு. அவரிடத்தில் நிலைத்திருத்தலேயன்றி இக்குருவின் திறமையோ, கல்வித்தகமைகளோ, குடும்பப் பின்னணியோ அல்ல” இவ்வாறு காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

காலி மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு தியாக்கோன்மாரை தேவத்தை இலங்கா மாதா பசிலிக்காவில் குருக்களாகத் திருநிலைப்படுத்தும் திருச்சடங்கை நிறைவேற்றி மறையுரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

**தவக்காலம் :**

**ஆண்டவரோடும் அயலவரோடும் ஒப்புரவாகி, உறவைப் புதுப்பித்துக் கொள்ளும் அருமையான காலம்!**

## வவுனியா பெரியகோமரசன்குளம் கல்வாரித் திருத்தல தவக்கால வழிபாட்டு ஒழுங்குமுறைகள் - 2018

“நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன்” (எசே. 36:26)

1. **திங்கள் முதல் வியாழன் வரை**
   காலை 11.30 மணிக்குத் திருப்பலி
2. **வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்**
   காலை 10.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம்
   காலை 10.30 மணிக்கு சிலுவைப்பாதை
   பி.ப 12.00 மணிக்குத் திருப்பலி
   மாலை 3.00 மணிக்கு திருமணித்தியாலயம் நற்கருணை
3. **2ஆம் வெள்ளி (23.02.2018)**
   காலை 10.00 மணிக்கு உயிர்த்த ஆண்டவர் குழுமத்தின் சிறப்பு வழிபாடு
   பி.ப 12.00 மணிக்குத் திருப்பலி
4. **4ஆம் வெள்ளி பாதயாத்திரை (09.03.2018)**
   காலை 5.00 மணிக்கு நற்கருணை வழிபாடு, தூய அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம், வவுனியா.
   காலை 5.30 மணி மேற்படி ஆலயத்தில் இருந்து பாதயாத்திரை ஆரம்பம்.
   காலை 10.00 மணிக்குச் சிலுவைப்பாதை.
   காலை 11.00 மணிக்கு ஆயர் தலைமையில் திருப்பலி
5. **5ஆம் வெள்ளி குணமாக்கும் வழிபாடு (16.3.2018)**
   காலை 9.00 – பி.ப 3.00 மணிவரை
6. **பாடசாலை மாணவர்களுக்கான தியானம் (17.03.2018 சனிக்கிழமை)**
   காலை 9.00 – பி.ப 1.00 மணிவரை தியானம்
7. **குடும்பங்களுக்கான தியானம் (18.03.2018 ஞாயிற்றுக் கிழமை)**
   காலை 10.00 – பி.ப 2.00 மணிவரை
8. **6ஆம் வெள்ளி வழிபாடுகள் (23.03.2018)**
   காலை 8.00 மணிக்கு நற்கருணை எழுந்தேற்றம்
   மாலை 3.00 மணி நற்கருணை ஆசீர், சிலுவைப்பாதை
9. **பரிசுத்த வார வழிபாடுகள்**
   குருத்தோலை ஞாயிறு (25.03.2018)
   காலை 11.00 மணிக்குத் திருப்பலி
   புனித வியாழன் (29.03.2018) மாலை 3.00 மணி வரை
   புனித வெள்ளி (30.03.2018) மாலை 3.00 மணி வரை
   ஆசந்தி வழிபாடு பி.ப 8.00 மணி
   புனித சனி வழிபாடு (31.03.2018)
   காலை 10.00 மணி - இயேசுவின் இறுதி வார்த்தைகள் தியானம்.
   பி.ப 7.00 மணிக்கு - பாஸ்கா திருவிழிப்பு வழிபாடு
   உயிர்ப்பு ஞாயிறு (01.04.2018) திருப்பலி காலை 10.00 மணி

**குறிப்பு:**
தினமும் பாவசங்கீர்த்தனம் இடம்பெறும்.
மெழுகுதிரி பவனி, தவக்கால செபமாலைத் தியானம் என்பன இடம்பெறும். முன்கூட்டிய அறிவித்தலுடன் குறைந்த விலையில் உணவுவசதி செய்து கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு**:- அருட்பணி. இ. அகஸ்ரின் - 0773454250
**விபரங்களுக்கு** :- Facebook – CALVARY SHRINE
Whats App - CALVARY SHRINE
Viber - CALVARY SHRINE

**பரிபாலகர், கல்வாரித் திருத்தலம்,**
**பெரிய கோமரசன்குளம், வவுனியா.**

## கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத் திருவிழா

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்தத் திருவிழாவும் தவக்கால யாத்திரையும் எதிர்வரும் 23.02.2018 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 24.02.2018 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை மற்றும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை இணைந்து நடத்தும் திருநாள் கூட்டுத் திருப்பலியுடன் நிறைவுபெறும்.

கடல்வழிப் போக்குவரத்து 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை குறிகட்டுவான் நெடுந்தீவு இறங்குதுறையிலிருந்து நடைபெறும். யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 23ஆம் திகதி காலை 3.30 மணியிலிருந்து இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பத்தாயிரத்திற்கும்



மேற்பட்ட பக்தர்கள் இத்திருவிழாத் திருப்பலியில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னார் மறைமாவட்டக் குடும்பநலப் பொதுநிலையினர் ஆணைக்குழுவின்கீழ் உள்ள அனைத்துப் பணிக்குழுக்களின் பொதுநிலையினருக்கும், ஏனைய இறைமக்களுக்குமான நற்செய்திக்கூட்டம் மற்றும் குணமாக்கல் வழிபாடு ஆகியவற்றை உள்ளடக்கிய தவக்கால ஞானவொடுக்கம் – 2018

**வவுனியா வேப்பங்குளம் கியூரியா:**
14.02.2018 புதன், மாலை 5.00 - 7.00 மணி வரை.
**இடம்:** வேப்பங்குளம் - தூய சூசையப்பர் ஆலயம்
விபூதிப்புதன் திருப்பலியுடன் நற்செய்திக் கூட்டமும் குணமாக்கல் வழிபாடும்.

**முருங்கன் கியூரியா:**
15.02.2018 வியாழன் காலை 9.00 மணி.
**இடம் :** குஞ்சுக்குளம் ஆலயம்

**பேசாலைக் கியூரியா:**
15.02.2018 வியாழன் மாலை 5.00 மணி - 7.00 மணிவரை
**இடம்:** பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம்

**தேவன்பிட்டிக் கியூரியா:**
16.02.2018 1ஆம் வெள்ளி மாலை 5.00 - 7.00 மணி
**இடம்:** அந்தோனியார்புரம் - புனித அந்தோனியார் ஆலயம்

**தலைமன்னார் கியூரியா:**
17.02.2018 சனி மாலை 5.00 - 7.00 மணி
**இடம்:** தலைமன்னார் - புனித லோறன்சியார் ஆலயம்

**மன்னார் கொமிசியம்:**
18.02.2018 ஞாயிறு மாலை 5.00 - 7.00மணி
**இடம்:** மன்னார் குடும்பநலப் பொதுநிலையினர் வளாகம்

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட நாட்களில் காலை 9.00 - 12.00 மணி வரை குடும்ப பொதுநிலையினர் நடுநிலையத்தில் தனிப்பட்ட குடும்பங்களைச் சந்திப்பதும் ஆசீர்வதிப்பதும் இடம்பெறும். எனவே குடும்ப ஆசீர்வாதம் பெறவேண்டிய குடும்பங்கள் நேரகாலத்தோடு எமது அலுவலகத்தில் பதிவுசெய்து கொள்ளவும். பதிவுக்கேற்ப வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

**- மறைமாவட்ட இயக்குனர், மறைமாவட்ட குடும்பநல ஆணைக்குழு, தாழ்வுபாடு வீதி, மன்னார்.**

**தொடர்புகளுக்கு:** அருட்பணி. S.K. தேவராஜா, இயக்குனர் 071-3283294, 076-7283294. திரு. லோறன்ஸ் குரூஸ், மரியாயின்சேனை, கொமிசிய தலைவர் 071-0987129.

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

## கனடா ரொறன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகத்திலிருந்து ஒரு புதிய அருட்பணியாளர்

கனடா ரொறன்ரோ தமிழ்க் கத்தோலிக்க சமூகத்தில் இருந்து யாழ்ப்பாணம் சில்லாலையைச் சேர்ந்த ரொஷான் கபிரியேல் அந்தோனிப்பிள்ளை O.F.M.(Cap) அவர்கள் கடந்த டிசம்பர் 9ஆம் திகதி அமெரிக்காவில் கப்புச்சின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தின் பிட்ஸ்பேக் நகரில் உள்ள பிரான்சிஸ்கன் சபையின் கப்புச்சின் தலைமைப் பேராலயத்தில் பேராயர் டேவிட் சூபிக் அவர்களால் இவர் பிரான்சிஸ்கன் சபைக் O.F.M. (Cap) குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் யாழ். மறைமாவட்டத்தின் சில்லாலைப் பங்கைச் சேர்ந்த நீக்கிலாப் பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களதும், அச்சுவேலிப் பங்கின் இவோன் (மகிழ்வதி) திருச்செல்வம் அவர்களதும் இளைய புதல்வன் ஆவார்.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் ஓய்வுபெற்ற குருக்களுக்கான வதிவிடம்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் ஓய்வுபெற்ற குருக்களுக்காக தேவத்தையில் வதிவிடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வதிவிடமானது புனர்நிர்மானம் செய்யப்பட்டு அனைத்து வசதிகளுடன் காணப்படுகின்றது.

இவ்வதிவிடம் ஜனவரி 29ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மேதகு மல்கம் ரஞ்சித் ஆண்டகையினால் திறந்துவைக்கப்பட்டது. துணை ஆயர் மேதகு மெக்வல் சில்வா ஆண்டகை, ஓய்வுபெற்ற ஆயர்களான மேதகு ஆயர் நீக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகை, மேதகு ஆயர் ஒஸ்வல் கோமிஸ் ஆண்டகை மற்றும் மறைமாவட்டக் குருக்கள் முன்னிலையில் இந்த வதிவிடம் ஆசீர்வதிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்டது.

## மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட புனித மறைசாட்சியர் அன்னையின் கெபி திறப்பு விழா

மன்னார் மறைசாட்சிகள் சமூகநலன் அமைப்பின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட புனித மறைசாட்சியர் அன்னையின் கெபித் திறப்பு விழா கடந்த 27.01.2018 அன்று தோட்டவெளியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 37வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி தோட்டவெளியில் இடம்பெற்ற திருவிழாத் திருப்பலியின்போதே இந்தக் கெபி திறந்துவைக்கப்பட்டது. மன்னார் மறைசாட்சிகளை நினைவுகூர்ந்து தோட்டவெளி நுழைவாயிலில் அமைக்கப்பட்ட இந்தப் பிரமாண்டமான அழகிய கெபியை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை திறந்துவைத்தார்.

நிகழ்வின்போது முதலில் மாலையிட்டு ஆயர் அவர்கள் வரவேற்கப்பட்டு கெபிக்கு அழைத்துவரப்பட்டார். ஆயர் அவர்கள் வரும்பொழுது திரு. சந்தியோகு (அமிர்தம்) அமைப்புத் தலைவர் தலைமையிலான குழு வரவேற்புக் கவி பாடியது. பின்னர் அமைப்பின் ஆய்வாளர் திரு. எஸ். அந்தோனிப்பிச்சை அவர்கள் விழாவில் கலந்துகொண்டோரை வரவேற்று நன்றிகூறினார். இந்தக் கெபி அமைவதற்கு உறுதுணையாக இருந்த பலரையும் நினைவுகூர்ந்து நன்றியும் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து மேதகு ஆயர் அவர்கள் ரிபன் வெட்டி புதிய கெபியைத் திரைநீக்கம் செய்து ஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அவர்களும் திரைநீக்கம் செய்யும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்.

இந்தக் கெபியை கட்டிமுடிக்க தோட்டவெளி பங்குத்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளார் முழு ஒத்துழைப்பு வழங்கினார். மேலும் இக்கெபியைக் கட்டுவதற்கு மன்னார் மறைசாட்சிகளின் வழித்தோன்றல்களாகிய தமிழ்நாடு காரங்காடு கிராமம் செங்கோல் அன்னை ஆலயத்தைச் சேர்ந்த குருக்கள், கிராம மக்கள் மற்றும் அக்கிராமத்தின் தொழிலதிபர் டென்சிங் ஆகியோர் அதிக பொருளுதவி வழங்கினார்கள். இவர்கள் அனைவரையும் நன்றியோடு நினைக்கின்றோம்.



கடந்த 15.07.2017 அன்று நடைபெற்ற மன்னார் மறைசாட்சிகள் நினைவு விழாவில் காரங்காடு கிராமக் குருக்கள் மற்றும் தொழிலதிபர் டென்சிங் ஆகியோர் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அப்பொழுது மேதகு ஆயர் அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையில் இக்கெபிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தகுந்த விடயமாகும்.

தகவல் : எஸ். அந்தோனிபிச்சை M.A. MPhil
ஸ்தாபகர், ஆய்வாளர், தொடர்பாளர், மன்னார் மறைசாட்சிகள் சமூகநல அமைப்பு, தோட்டவெளி, மன்னார் மாவட்டம்.

பொதுநிலையினர் ஆண்டுச் சிறப்புக் கட்டுரைகள்

# பொதுநிலையினரின் இயல்பும் பண்புகளும்

**பொதுநிலையினர் யார்?**

திருச்சபையில் இரண்டே நிலைகள்தான் உள்ளன. ஒன்று குருகுல நிலை, மற்றொன்று பொதுநிலை. பொதுநிலையினரின் இறையியலுக்கான அடிப்படையை பின்வருமாறு திருச்சங்கம் வெளியிட்டுள்ளது; "பொதுநிலையினர் என்ற சொல் குருகுலத்தாரும் திருச்சபையின் இசைவுபெற்ற துறவற நிலையினரும் நீங்கலாக ஏனைய கிறிஸ்தவ விசுவாசிகள் எல்லோரையும் குறிக்கும். இவர்கள் திருமுழுக்கின் மூலம் கிறிஸ்துவோடு ஒருடலாக்கப்பெற்று இறைமக்களாக உருப்பெறுகின்றனர்" (திருச்சபை, எண்.31).

இரண்டாம் வத்திக்கான் சங்கம் இதைப்பற்றி மேலும் தெளிவுப்படுத்துகையில், குருகுலம், பொதுநிலை எனும் பிரிவு எதிர்க்கட்சிகளைத் திருச்சபையில் ஏற்படுத்துவதல்ல. மாறாக திருச்சபையான மறைவுடலில் ஒற்றுமையையும் உரிமையையும் பேணி வளர்ப்பதற்காகவே என்கிறது.

இவ்விரு நிலையினரும் அடிப்படையில் கிறிஸ்தவர்கள் என்றும் அதுவே அவர்களுக்கு இரட்சணியம் அளிக்கவல்லது என்றும் வத்திக்கான் சங்கம் நினைவுபடுத்துகிறது.

2ஆம் வத்திக்கான் சங்கம் பொதுநிலையினரின் வரைவிலக்கனத்தை வகுத்துக்கொடுக்கவில்லை. ஆனால் அதற்குரிய அம்சங்களை 'திருச்சபை', 'இன்றைய உலகில் திருச்சபை', 'பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்', 'திருச்சபையின் மறைபரப்புப் பணி' போன்ற ஏடுகளில் பரவலாக அதேவேளை தெளிவாகக் கொடுக்கின்றது. அவைகளில் நான்கு முக்கியமானவற்றை இங்கு காண்போம்.

- பொதுநிலையினர் புதிய இறைமக்கள் என்பதன் காரணமாகக் கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு, அரச பணிகளின் பங்காளிகளாக இயங்குகின்றனர்.
- பொதுநிலையினர் உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும், உலகத்தில் ஈடுபட்டிருப்பவர்களாகவும், உலகத்தின் பொறுப்பு உடையவர்களாகவும் செயல்பட வேண்டும்.
- பொதுநிலையினர் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக உண்மையான அருங்கொடைகளைப் பெற்றவர்கள்.
- பொதுநிலையினர் திருச்சபையில் உரிமையும், கடமையும் கொண்ட முழுமையான அங்கத்தவர்கள்.

**பொதுநிலையினரின் கடமைகளும் உரிமைகளும்**

01. அனைத்துக் கிறிஸ்துவின் விசுவாசிகளிடையே நிலவும் அடிப்படைச் சமத்துவம்.
02. திருச்சபையின் ஐக்கியத்தில் நிலைத்திருந்து, அனைத்துலகத் திருச்சபையிலும் மறைமாவட்டத்திலும் தங்களுக்குரிய பொறுப்பை நிறைவேற்றும் கடமை.
03. புனித வாழ்வு வாழ்ந்து, திருச்சபையின் வளர்ச்சிக்காகவும், புனிதத்திற்காகவும் உழைக்கவேண்டிய கடமை.
04. நற்செய்தி எல்லா மக்களையும் எட்டும்படி செய்யும் கடமை.
05. திருமேய்ப்பர்களுக்குக் கீழ்படிந்து, திருச்சபையின் நலனுக்குரிய காரியங்களில் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறும் உரிமையும் கடமையும்.
06. திருமேய்ப்பர்களிடமிருந்து ஆன்மீகச் செல்வங்களைப் பெறும் உரிமை.
07. தங்களுடைய வழிபாட்டு ரீதியில் இறைவனை வழிபடும் உரிமை.



08. அறப்பணிகளுக்காகவும், சமயப்பணிகளுக்காகவும் சங்கங்கள் அமைத்துக் கூட்டங்கள் நடத்தும் உரிமை.
09. மறைதூதுப் பணியை ஊக்குவித்து ஆதரிக்கும் உரிமை.
10. கிறிஸ்தவக் கல்வி பெறும் உரிமை.
11. திருச்சபையின் ஆசிரியத்திற்குப் பிரமாணிக்கமாயிருந்து இறையியல் ஆராய்ச்சி செய்யும் சுதந்திரம்.
12. தங்களது வாழ்க்கைநிலையை எவ்வித வற்புறுத்தலுக்கும் உள்ளாகாமல் தேர்ந்துகொள்ளும் உரிமை.
13. ஒவ்வொருவருக்கும் தங்கள் நற்பெயரையும், அந்தரங்கத் தன்மையையும் காத்துக்கொள்ளும் உரிமை.
14. தகுதிவாய்ந்த திருச்சபை அரங்கத்தில் சட்ட முறைப்படி, தங்கள் உரிமைகளுக்காகப் போராடி அவைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை. சட்டத்திற்கு இசைந்த வகையில் தீர்வு பெறவும் சட்டத்திற்கு முரணான வகையில் தண்டனை பெறாதிருக்கவும் உரிமை.
15. இறைவழிபாடு, மறைதூதுப் பணி, அறப்பணி நடத்தவும் திருப்பணியாளர்களை ஆதரிக்கவும்வேண்டிய பொருளுதவிகளை அளிக்கவும் கடமை. சமூக நீதியை ஊக்குவித்து, ஏழைகளுக்குத் தங்கள் வருவாயிலிருந்து உதவி வழங்கும் கடமை.
16. தங்களுடைய உரிமைகளைச் செயல்படுத்தும்பொழுது, திருச்சபையின் பொதுநலனையும், மற்றவர்கள்பால் தங்களுக்குள்ள கடமையையும், கிறிஸ்தவ விசுவாசிகள் கருத்திற்கொள்ள வேண்டும். பொது நலனுக்காகக் கிறிஸ்தவ விசுவாசிகளுக்குரிய உரிமைகளை ஒழுங்குபடுத்த திருச்சபை அதிகாரிகளுக்கு உரிமை உண்டு.
17. தங்கள் ஆன்மீகத்தைத் தாம் வாழும் சூழலில் நாளாந்தம் தங்கள் கடமைகளைப் புரிவதன் வழியாக வளர்த்துக்கொள்ளல்.

**கிறிஸ்துவின் முப்பெரும் பணிகளில் பொதுநிலையினர் பங்கு**

2ஆம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகின்றது; "திருச்சபையில் பல்வகை அலுவல்கள் இருப்பினும், அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பணி ஒன்றே. தம் பெயராலும் வல்லமையாலும் போதித்து, புனிதமாக்கி, ஆளும் அலுவலைக் கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் கொடுத்தார். ஆனால், கிறிஸ்துவின் குருத்துவ, இறைவாக்கு உரைக்கும், அரச அலுவல்களிலே பொதுநிலையினரும் பங்குபெறுவார்கள். எனவே இறைவனின் பணியைத் திருச்சபையிலும் உலகிலும் அவர்களே ஆற்றுகின்றனர்." (பொதுநிலையினரின் மறைதூதுப்பணி, எண். 2)

இயேசுக்கிறிஸ்து குருவாக இருந்து மக்களைப் புனிதப்படுத்துகிறார். ஆசிரியராக இருந்து மக்களுக்குப் போதிக்கிறார். அரசராக இருந்து மக்களை ஆளுகிறார். இம்முப்பெரும் பணிகளில் திருமேய்ப்பர்கள் மட்டுமல்ல, பொதுநிலையினரும் தங்களுக்கே உரித்தான வகையில் பங்குபெறுகின்றனர் என்பதைத் திருச்சங்கம் மிகத்தெளிவாக எடுத்துரைகின்றது.

**பொதுநிலையினரின் முப்பணிகள் பின்வருமாறு:**

**01. பொதுநிலையினரின் புனிதப்படுத்தும் பணி**

1. அருளடையாளங்களை வழங்குதல் 2. வாசகப்பணி, திருப்பீடப்பணி 3. திவ்விய நற்கருணை ஸ்தாபகம் 4. திருப்புகழ் மாலை.

**02. போதிக்கும் பணி**

1. போதித்தல் 2. மறைக்கல்வி புகட்டுதல் 3. மறைத்தூதுப் பணி செய்தல் 4. இறையியல் பயில வாய்ப்பு.

**03. ஆளும் பணி**

1. சட்டத்துறை 2. நீதித்துறை 3. நிர்வாகத்துறை 4.சேவை

**பொதுநிலையினருக்கே உரித்தான பணி**

"உலகைச் சார்ந்திருக்கும் பண்பு பொதுநிலையினருக்கு உரியதும் தனிப்பட்ட வகையில் அவர்களைச் சார்ந்ததுமாகும். உலகக் காரியங்களில் ஈடுபட்டு உழைக்குங்கால் அவைகளை இறைவனின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் இறைவனின் அரசை அமைக்கத்தேடுவது தங்களின் தனிப்பட்ட அழைப்பால் பொதுநிலையினரைச் சார்ந்தது".

"நற்செய்தியைப் பரப்பவும் மனிதரைப் புனிதப்படுத்தவும், நற்செய்தி உணர்வால் உலகியல் அமைப்பை ஊடுருவி நிறைவுபடுத்தவும் அவர்கள் உழைக்கும்போது, உண்மையாகவே அப்போஸ்தலப் பணியை ஆற்றுகின்றனர். உலகின் நடுவில், அலுவல்களிடையே வாழ்வது பொதுநிலையினருக்கே உரித்தானதொன்று" (பொதுநிலையினரின் மறைதூதுப் பணி. எண் 2)

ஒவ்வொருவருடைய நிலைக்கேற்ப, உலகியல் அமைப்பை நற்செய்தி உணர்வால் ஊடுருவி நிறைவுசெய்யும் சிறப்புக் கடமையைப் பொதுநிலையினர் கொண்டுள்ளனர். இவ்வாறு, குறிப்பாக இவ்வுலகக் காரியங்களையும் அலுவல்களையும் நடத்துவதன் மூலம் அவர்கள் கிறிஸ்துவுக்கு சான்றுபகர வேண்டியவர்களாகின்றனர்."

**முடிவுரை**

பொதுநிலையினர் திருச்சபையின் பணியில் கொண்டுள்ள தனிப்பட்ட பங்கை பங்குக்குரு ஏற்றுக்கொண்டு ஊக்கமளிக்க வேண்டும். மத நோக்கத்துடன் செயல்படும் பொதுநிலையினர் சங்கங்களைப் பேணி வளர்க்க வேண்டும்.

பொதுநிலையினரின் பணிகளைப் பொறுத்தமட்டில் குருக்களின் கடமைகள் மூன்று:

1. பொதுநிலையினரின் பணிகளைக் குருகுலத்தார் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதாவது அவர்களை மதித்தல் வேண்டும்.
2. பொதுநிலையினரின் பணிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும். அதாவது அவைகளை மேல்நிலைக்கு உயர்த்த வேண்டும்.
3. பொதுநிலையினரின் பணிகளைப் பேணிக்காக்க வேண்டும்.

பொதுநிலையினரும் தங்களது புதிய பொறுப்பை உணர்ந்து திருமேய்ப்பர்களுக்கு உரிய மரியாதை கொடுத்து, அவர்களுடன் மீட்புப்பணியில் ஒத்துழைக்க வேண்டும். அதை விடுத்து, திருமேய்ப்பர்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்க வேண்டும், எதற்கெடுத்தாலும் அவர்களைக் குறை கூறிக்கொண்டே இருக்க வேண்டுமென்ற போட்டி மனநிலையை அகற்றி, ஆக்கப்பூர்வமாகத் தங்கள் பணிகளை நிறைவேற்ற பொதுநிலையினர் பயிற்சிபெற வேண்டும்.

# பொதுநிலையினரின் அழைப்பும், பணியும்

அருட்சகோதரர் செ. தோபியாஸ் (CMSF)

ஆண்டவர் இயேசுவில் திருமுழுக்கினால் ஒன்றிணைக்கப்பட்டுள்ள மக்களிடம் ஏற்றத்தாழ்வு இருக்க முடியாது; இருக்கவும் கூடாது என்று அறுதியிட்டு உறுதியாக முழங்குகின்றார் புனித பவுல் (எபே 4:5, கலா 3:27-28, கொலோ 3:11). எனவேதான் 2ஆம் வத்திக்கான் சங்கம், "கிறிஸ்துவில் அடைந்த மறுபிறப்பினால் பிறக்கும் மாண்பு அதன் உறுப்பினர் யாவருக்கும் பொதுவானது" (திருச்சபை, எண். 32) என்கின்றது.

கடவுளின் திருச்சபைக்குள் அனைவரும் இணைந்து செயற்பட அதிலும் முக்கியமாகப் பொதுநிலையினர் ஏற்றம்பெறச் செய்திட கிறிஸ்துவையே தலையாகவும் நாம் அனைவரும் அந்த உடலின் உறுப்புகளாகவும் இருக்கின்றோம் (1கொரி 12:12). இறைமக்களாகிய இத்திருக்கூட்டம் முழுவதுமே தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரச குருத்துவத் திருக்கூட்டம் இறைவனுக்குச் சொந்தமான மக்கள் என்று புனித பேதுரு ஆணித்தரமாகக் கூறியுள்ளார் (பேதுரு 2:9).

இறைமக்களாகிய பொதுநிலையினரின் மாண்பையும், பணியையும் சீர்தூக்கி நிலைநிறுத்துவதே இவ்வாண்டின் சிறப்பாகும். திருச்சபையில் பொதுநிலையினர், துறவியர், திருநிலையினர் என்று மூன்று நிலைகள் இருந்தாலும் அனைவரும் இறைமக்கள் என்பதே பொதுவான நிலை. எனவே 99 சதவீதம் உள்ள பொதுநிலையினரே துறவிகளையும், திருநிலையினரையும் வழங்குகின்றனர் என்பதே உண்மை. ஆகையால் பொதுநிலையினர் இன்றி இறைமக்கள் கூட்டம் இல்லை, திருச்சபையும் இல்லை.

"உலகு சார்ந்த பணிகளில் ஈடுபட்டு உழைக்குங்கால், அவற்றைக் கடவுளின் திட்டப்படி நெறிப்படுத்துவதன் மூலம் கடவுளின் ஆட்சியை அமைக்கத் தேடுவது தங்களின் தனிப்பட்ட அழைப்பாகப் பொதுநிலையினரைச் சார்ந்தது". "நீங்கள் தூயவராவதே கடவுளுடைய திருவுளம்" (1 தெச 4:3).

தூய்மைநிலை அனைவருக்கும் உரித்தாகும். இத்தூய்மைநிலைக்கு அப்பால் திருமுழுக்கினால் அனைவரும் பெற்றுள்ள அருள்நிறை வாழ்வு அடைய அனைவரும் அழைப்புப் பெற்றுள்ளனர் (தி.எண் 32). இத்தூய்மை நிலையை வாழ்வில் காத்து, அதனை நிறைவு செய்யவேண்டும்.



"திருச்சபை திருஆட்சியாளரோடுகூட எங்கு உண்மையாகவே பொதுநிலையினர் உடனிருந்து உழைக்கவில்லையோ. அங்கு திருச்சபை உண்மையாகவே நிறுவப்படவும் இல்லை, மனிதர் நடுவே கிறிஸ்துவின் நிறை அடையாளமாகத் துலங்கவும் இல்லை" (திருச்சபையின் நற்செய்திப் பணி. எண். 21) என்ற சங்கத்தின் அறிவுரையை ஏற்று பொதுநிலையினர் திருச்சபையிலும் உலகிலும் நிறைவேற்றும் பணிகளைத் திருநிலையினர் அங்கீகரித்து மேம்படுத்த வேண்டும். பொதுநிலையினரும் விழிப்புணர்வு பெற்று திருநிலையினருடன் இணைந்து செயற்பட முன்வர வேண்டும்.

திருச்சபையில் தூய வாழ்வில் நிலைபெற்று அதன் மாண்பிலும், பணியிலும் சம உரிமை பெற்ற பொதுநிலையினர் திருச்சபையின் அடித்தளமாக விளங்குவதே திருச்சபையின் வளமான வளர்ச்சியாகும். இயேசு தொடங்கிவைத்த இறையாட்சியின் அடையாளமாகவும் அதைச் செயற்படுத்தும் கருவியாகவும் விளங்கும் இறைமக்கள் பொதுநிலையினர் என்பதை நினைவிற்கொண்டு தூய ஆவியாரின் தூண்டுதலோடும், துணையோடும் புதுப்புதுத் திருப்பணிகளை உருவாக்கி அறிமுகப்படுத்தி, பரவலாக்கி பொதுநிலையினரை ஆற்றுப்படுத்துவது காலத்தின் கட்டளை. ஆனால் தலத்திருச்சபை இதைச் சவாலாக ஏற்றுச் செயற்படத் தயாராக இருப்பதாகத் தெரியவில்லை. சில பங்குகளில் தன்னார்வப் பணியை செய்துவரும் தொண்டர்கள் இருப்பதும் பாராட்டத்தக்கது.

"பொருத்தமானவர் என்று கண்டறியப்பட்டுள்ள பொதுநிலையினர் சட்டவிதிப்படி ஆற்றக்கூடிய திருச்சபை அலுவல்களையும், பணிகளையும் தங்கள் திருமேய்ப்பனிடமிருந்து ஏற்றுக்கொள்வதற்கான தகுதி பெற்றுள்ளார்கள்" (திருச்சபைச் சட்டம் 228-1).

தொடக்கக்காலக் கிறிஸ்தவர்கள் பொதுநிலையினர் இல்லங்களில் ஒன்றுகூடி வந்தார்கள். வீட்டில் கூடும் திருச்சபையை வலுப்படுத்தினார்கள். அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுவதிலும் இறை வேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (தி.ப.2:42). இதை மாதிரியாகக்கொண்ட அடிப்படைக் கிறிஸ்தவ சமூகங்கள் மூலம் இலத்தின் அமெரிக்கத் திருச்சபையில் ஏற்பட்ட எழுச்சியால் பெரிதும் ஈர்க்கப்பெற்று அன்பியங்கள் தோன்றி இன்று எமது தாய்த்திருச்சபையில் அன்பியங்கள் மலர்ந்துள்ளன. இறைமக்களின் இயல்பான பங்கேற்கும் அன்பியங்கள் கிறிஸ்தவத்தின் அடித்தளமாக அமைவதே சமூக மாற்றத்துக்கான தேவையாகும். கிறிஸ்தவ வாழ்வின் சிந்தனை, செயல்பாடுகளைத் தூண்டிவிடும் மையங்களாக அவை இயங்குவது அவசியம்.

பங்கு என்பது இல்லத்திருச்சபைகளின் ஒன்றியம் அல்லது நம்பிக்கைச் சமூகங்களாக விளங்கும் அன்பியங்களின் சங்கமம் எனலாம். (பொதுநிலையினர் அழைப்பும் அருள்பணியும்: 19) இது செயற்படாமல் இருப்பதற்கு பங்குத்தந்தையின் அதிகாரப் போக்கும், பங்குத்தளங்களில் உள்ள மரபு அடிப்படையிலான ஆதிக்க அமைப்புக்களின் செல்வாக்கும் ஒருவகையில் காரணம் ஆகும். இந்நிலையைப் புரட்டிப்போட அன்பியம் பெரிதும் துணைபுரியும்.

திருச்சபையில் பொதுநிலையினர் இரண்டாந்தர நிலையை அடைந்ததற்கு முக்கிய காரணம் அவர்களது அறியாமையே. அவர்களை வெளி உலகுக்குக் கொண்டுவந்து ஆளாக்கிவிடுவதற்கு, முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களாக அவர்களை உருவாக்குவதற்கு ஒரே வழி அந்த அறியாமை என்னும் இருளை நீக்குவதே ஆகும். ஆதலில் அவர்களை "அவையத்து முந்தியிருப்பச் செய்வது திருஆட்சியாளர்களின் கடமை. இல்லையென்றால் "பங்கேற்புத் திருச்சபை" என்பது கானல் நீராக மறைந்துவிடும்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத் திருவிழா



மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத் திருவிழா கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய நாளில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களுக்குப் பேராலயச் சமூகம் சிறப்பான வரவேற்பையும் வழங்கியிருந்தது.

அன்று காலை மன்னார் வைத்தியசாலைச் சுற்றுவட்டத்தில் இருந்து ஆயர் அவர்களும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ. விக்ரர் சோசை அவர்களும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயப் பங்குச் சமூகத்தால் வரவேற்கப்பட்டு பேராலயம்வரை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை வாத்திய இசைக்குழுவும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை வாத்திய இசைக்குழுவும் இப்பவனியில் பங்கேற்று ஆயரின் வரவேற்புக்கு மெருகூட்டின. இந்த வரவேற்புப் பவனி புனித செபஸ்தியார் பேராலயத்தை வந்தடைந்ததும் ஆயர் பண்பாட்டு முறைப்படி வரவேற்கப்பட்டார். தொடர்ந்து திருவிழாத் திருப்பலியை ஆயர் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். பேராலயப் பங்குத்தந்தை அருட்திரு. பெப்பி சோசை மற்றும் உதவிப் பங்குத்தந்தை அருட்திரு. கிளையன் ஆகியோர் பங்குமக்களின் ஒத்துழைப்போடு இவ்விழாவைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# சிறிய குருமடத்தில் பொங்கல் பண்பாட்டுத் திருப்பலி



எதிர்கால அருட்பணியாளர்களை உருவாக்கும் பணி மையமான மன்னார் மடுமாதா சிறிய குருமடத்தில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. தாம் சார்ந்திருக்கும் கலாசாரப் பண்பாட்டுக் கோலங்களை வழிபாட்டிலும், நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் பயன்படுத்தலாம் என்ற இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பெருந்தன்மையான அறிவுறுத்தலை மனதிற்கொண்டு, பொங்கல் விழாத் திருப்பலி பண்பாட்டு அம்சங்களோடு இடம்பெற்றது. மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய இயக்குனர் அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் பண்பாட்டுத் திருப்பலியை நிறைவேற்றினார். சிறிய குருமட மாணவர்களும் சிறிய குருமட அதிபர் அ. ஞானப்பிரகாசம் அடிகளாரும் இணைந்து அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

# வேப்பங்குளம் பங்கில் பொங்கல் விழா



வவுனியா மறைக்கோட்டத்தில் உள்ள வேப்பங்குளம் புனித சூசையப்பர் பங்கில் பொங்கல் விழா சிறப்புத் திருப்பலியோடு இடம்பெற்றது. வண்ணக் கோலங்களாகக் காட்சியளித்த இவ்விழாவில் பங்கு மக்களும் இளைஞர்களும் பங்கேற்று அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாகச் செயற்படுத்தியிருந்தனர். பங்கு மக்கள் இவ்விழாவில் கலந்து இறைவனுக்கு நன்றி கூறினர்.

வேப்பங்குளம் பங்குத்தந்தை அருட்திரு. அ. லக்ஸ்ரன் டீ சில்வா அடிகளார் சிறப்பாகவும், அர்த்தம் நிறைந்த விதத்திலும் அனைத்து நிகழ்வுகளையும் ஆயத்தம் செய்திருந்தார். அருட்பணி. றமேஸ் அ.ம.தி அடிகளாரும் இந்நிகழ்வில் கலந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார். பொங்கல் விழாவைச் சிறப்பிக்கும் வகையில் பண்பாட்டு அம்சங்களோடு திருப்பலி இடம்பெற்றது.

# மன்னார் ஆயர் அன்பியப் பணியாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார்



மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்கள் கடந்த 10.01.2018 அன்று புதன் கிழமை மன்னார் மறைமாவட்ட அன்பியத் தொடர்பகத்திற்குச் சென்று மறைமாவட்டப் பங்கிலிருந்து வந்திருந்த அன்பியப் பணியாளர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தார். முதன்முதலாக அன்பியத் தொடர்பகத்திற்கு வருகைதந்த ஆயர் அவர்களை அன்பியப் பணியாளர்கள் மன்னார் வைத்தியசாலை – விளையாட்டு மைதான பிரதான வீதியில் வைத்து வரவேற்றனர். மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை, சாந்திபுரம் பங்குத்தந்தை அருட்திரு. யூட் ஞானறாஜ் குருஸ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இறுதியில் ஆயர் அவர்களின் ஆசியுரையுடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவுற்றன. அன்பியப் பணிகளுக்கான மறைமாவட்ட இயக்குனர் அருட்திரு. ஆரோக்கியம் அடிகளார் இந்நிகழ்வைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

(தகவல் : செயளாளர்: திரு. பெ. ஞானப்பிரகாசம்)

# கட்டைக்காடு பங்குத் திருவிழா



கட்டைக்காடு பங்குமக்கள் கடந்த 20.01.2018 அன்று சனிக்கிழமை தங்கள் பாதுகாவலராம் புனித செபஸ்தியாரின் திருவிழாவை ஆன்மீகச் செழுமையோடு கொண்டாடி மகிழ்ந்தனர். காலை 7.15 மணிக்குத் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்பணி. ப. பி. டெஸ்மன் குலாஸ் அடிகளாரின் வழிகாட்டுதலோடு, ஆலய அருட்பணிப் பேரவை, பங்கு மக்கள் இணைந்து இத்திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், வடமாகாண சுகாதார அமைச்சர், அரச அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள், இறைமக்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். திருப்பலி முடிவில் தூய செபஸ்தியாரின் திருச்சுருவப் பவனியும் ஆசீரும் இடம்பெற்றது.

# பள்ளிமுனையில் மேய்ப்புப்பணித் திட்டமிடல்



பள்ளிமுனைப் பங்கில் மேய்ப்புப் பணித்திட்டமிடலுக்கான ஒன்றுகூடல் கடந்த ஜனவரி மாதம் 16ஆம் திகதி மாலை 6.00 மணியளவில் இடம்பெற்றது. பள்ளிமுனை புனித லூசியா பங்கில் உள்ள பணிக்குழுக்களின் உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தியாக்கோன் அருட்சகோதர் பஸ்ரியனின் இறைவழிபாட்டைத் தொடர்ந்து பங்குத்தந்தை அருட்பணி. செ. ஸ்ரீபன்றாஜ் அவர்கள் ஒன்றுகூடலின் நோக்கம், மறைமாவட்டத்தின் அருட்பணி இலக்கு ஆகியவற்றைத் தெளிவாக எடுத்துக்கூறினார். அதனைத் தொடர்ந்து திட்டங்களை வகுக்கும் பொருட்டு ஆலோசனை ஊக்குவிப்பு உரை வழங்கப்பட்டது. தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற்றது. இந்த ஒன்றுகூடலில் கலந்துகொண்டோரிடம் தத்தமது குழுக்களின் திட்டங்களைத் தனித்தனியாக முன்வைக்குமாறு கேட்கப்பட்டது. பின்னர் இறையாசிரோடு இந்த ஒன்றுகூடல் நிறைவுக்கு வந்தது.

# வங்காலைப் பங்கில் உறுதிப்பூசுதல்



வங்காலைப் பங்கில் கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பங்கின் சிறார்களுக்கு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இந்த அருட்சாதனத்தை வழங்கிவைத்தார்.

தமது பங்கிற்கு முதன் முதலாக வருகைதந்த ஆயர் அவர்களை வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. ஜெயபாலன், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. றொசான், ஆலய அருட்பணிப் பேரவையினர், பங்கு மக்கள் எனப் பல்வேறு தரப்பினர் பிரதான நுழைவாயிலில் வைத்து சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து உறுதிப்பூசுதல் அருட்சாதனத் திருப்பலி இடம்பெற்றது. திருப்பலியின் நிறைவில் புதிய ஆயருக்கான வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து ஆயர் ஆலய அருட்பணிப் பேரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். அத்தோடு உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெற்ற பிள்ளைகளையும் சந்தித்து உரையாடினார்.

பொதுநிலையினர் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# பொதுநிலையினரின் அருள்பணி

மேதகு எஸ். சூசை மாணிக்கம் ஆண்டகை,
சிவகங்கை மறைமாவட்டம், இந்தியா

உலகுசார் பண்பு கொண்ட உயரிய பணிக்காக பொதுநிலையினரைத் தயாரித்து, தூய ஆவியாரின் வரங்களாலும், கொடைகளாலும், கனிகளாலும் அவர்களை ஆற்றல்படுத்தி, சான்று வாழ்க்கை வாழ்ந்திட அவர்களை உலகின் நடுவே அனுப்பிவைப்பதே உறுதிப்பூசுதல் என்னும் திருவருட்சாதனத்தின் நோக்கம்.

“திருச்சபையின் நிறைவாழ்வுப் பணியில் பங்குபெறுவது பொதுநிலையினரின் திருத்தூதுப்பணியாகும். இந்தத் திருத்தூதுப் பணியை ஆற்றுவதற்கே திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் ஆகியவற்றின் மூலம் அனைவரும் ஆண்டவரால் அதிகாரபூர்வமாக அனுப்பப்பெற்றிருக்கின்றனர்”.

## உறுதிப்பூசுதல் என்றால் என்ன?

இக்கேள்விக்குத் திருமறைச்சுவடி பின்வருமாறு விடை பகர்கின்றது; “தூய ஆவியாராலும் அவருடைய கொடைகளாலும் நம்மை நிரப்பி, திருச்சபையின் பணிகளில் கடமை உணர்வோடு ஈடுபட நமக்கு ஆற்றலைத் தருகின்ற அருட்சாதனமே உறுதிப்பூசுதல் ஆகும்”.

தூய ஆவியார் நமக்கு எவ்வாறு உதவுகிறார்? என்னும் மற்றுமொரு கேள்விக்குக் கொடுக்கப்படும் பதில், “நம்பிக்கையில் நாம் உறுதியாக நிலைத்திருக்கவும், கடவுள்மேல் நிறைவான அன்புகொண்டு வாழவும் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக விளங்கவும் தம் கொடைகளை வழங்கி உதவுகின்றார்”.

“தூய ஆவி உங்களிடம் வரும்போது, நீங்கள் கடவுளது வல்லமையைப்பெற்று, ஜெருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடை எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள்”. தூய ஆவியாரின் நற்செய்தி, அல்லது தூய ஆவியாரின் பணிகள் எனப் பொருத்தமாக பெயர்பெறும் திருத்தூதர் பணிகள் என்னும் நூல் இம்மையக்கருத்தின் செயல் வடிவமாகி விளங்குகின்றது.

சான்று வாழ்க்கை என்பது - கிறிஸ்தவ மதிப்பீடுகளின்படி வாழ்வதாகும். இவற்றையே தூய ஆவியின் கனிகள் என்கின்றோம். “தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னையம், நம்பிக்கை, கனிவு தன்னடக்கம் என்பவை ஆகும்” (கலா: 5:22). எனவே ஊனியல்பின் செயல்களை விட்டொழித்துத் தூய ஆவியார் காட்டும் நெறியில் நடந்து பழக வேண்டும் (கலா 5:16-26).

“இந்த உலகப் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக உங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்” (உரோ 12:2).

தூய ஆவியின் கனிகளுள் தலைசிறந்தது அன்பே (1கொரி: 12:31,13:13). இதனால்தான் “இவை அனைத்திற்கும் மேலாக அன்பையே கொண்டிருங்கள்” (கொலோ:03:14) என்றும், “அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக!” (எபே:03:17) என்றும் பவுல் கூறுகின்றார். இவ்வாறு அன்பை விதைத்து, அன்புப் பண்பாட்டை அறுவடை செய்யப் பொதுநிலையினர் அழைக்கப்படுகின்றார்கள்.

## பொதுநிலையினரும் திருப்பணிகளும்

“திருச்சபை ஒரு உறவு ஒன்றிப்பாய் விளங்குகின்ற காரணத்தால் அதன் எல்லா மட்டங்களிலும் பங்கேற்பும் கூட்டுப்பொறுப்பும் இருக்க வேண்டும்”. இது 2-ஆம் வத்திக்கான் சங்கத்தின் 20 ஆண்டு நிறைவையொட்டி 1985இல் கூடிய ஆயர் மன்ற சிறப்பு அமர்வின் இறுதி அறிக்கையில் இடம்பெறும் கூற்று.

தொடக்ககாலத் திருச்சபை எண்ணிக்கையில் பெருகப் பெருக, திருப்பணியாளர்களின் எண்ணிக்கையும் திருப்பணிகளின் எண்ணிக்கையும் பெருகலாயின. திருத்தூதர், திருத்தொண்டர், இறைவாக்கினர், போதகர், மூப்பர் (1கொரி 12:4-11, 28-30) (உரோ 12:6-8) (எபே 4:11) என எண்ணற்ற பணியாளர்கள் திருச்சபைக்கு வளமூட்டி வலுச்சேர்த்தார்கள். எவ்வகை வேற்றுமையும், பாகுபாடும், ஏற்றத்தாழ்வுகளும் பாராட்டாமல் உடன் உழைப்பாளர்கள் என்னும் உயரிய சிந்தனையோடு ஒருங்கிணைந்து செயற்பட்டு வந்தார்கள். இவர்கள் எல்லோரும் பொதுநிலையினரே. இவர்களுள் பெண்களும் அடங்குவர்.

கால, இடத் தேவைகளுக்கு ஏற்பத் திருவழிபாடு, சமூகப்பணி ஆகிய துறைகளில் புதிய பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள் (திரு6:1-7). முதல் நூற்றாண்டின் இறுதியில் ஆயர், அருட்பணியாளர், திருத்தொண்டர் எனும் மூன்று நிலைகளும் தோன்றின. துணைத்திருநிலைகள் என்று அழைக்கப்பெற்ற வாயில் காப்போர், இறைவாக்குப் பணியாளர், பேய் ஓட்டுவோர், வழிபாட்டுத் துணைவர், துணைத்தொண்டர் ஆகிய பணியாளர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள்.

2ஆம்,3ஆம் நூற்றாண்டுகளில் இத்திருப்பணிகள் பொதுநிலையினரிடம் இருந்து எடுக்கப்பட்டு, குருப்பட்டத்திற்கு ஒருவரைத் தயாரிக்கும் திருப்பட்டங்களாக மாற்றப்பட்டன. தேவையையும் பொருளையும் இழந்துவிட்ட காலகட்டத்திலும் இவை தொடர்ந்து சிறு பட்டங்களாகக் கொடுக்கப்பட்டு வந்தன.

எனவே திருத்தந்தை 6ஆம் பவுல் இறைவாக்குப்பணியாளர், வழிபாட்டுத் துணைவர் நீங்கலாக மற்றத்திருப்பணிகளை முடிவுக்குக் கொண்டுவந்தார். அதேவேளை இவற்றை பொதுநிலையினரின் திருப்பணிகளாகவும் மாற்றினார்.

மேலும் காலத்தின் அறிகுறிகளைத் துருவி ஆராய்ந்து அந்தந்த இடத்தேவைக்கு ஏற்றவாறு புதிய பணிகளை உருவாக்கிட அனுமதியும் அதிகாரமும் தலத் திருச்சபைகளுக்கு வழங்கினார்.

திருமணம் முடிந்த ஆண்களுக்கு நிரந்தரத் திருத்தொண்டர் நிலைவேண்டி விடுவிக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. எங்களுக்கும் குருப்பட்டம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி அவனியெங்கும் அணிதிரளும் பெண்களின் ஏக்கக்




குரல் இன்னும் ஓங்கி ஒலித்துக்கொண்டே இருக்கின்றது. நாளும் வலுத்துக்கொண்டே வருகின்றது!

பொது நிலையினருக்குத் திருப்பணிகள் வழங்குவது அவர்களைத் திருநிலையினர் ஆக்கும் முயற்சி ஆகாது. திருப்பணிகளை ஆற்றுவதால் பொதுநிலையினரும் தங்களைச் சிறு அருட்பணியாளர்கள் என எண்ணுவது தவறு. தூய ஆவியாரின் தூண்டுதலோடும் புதுப்புது திருப்பணிகளை உருவாக்கி, அறிமுகப்படுத்தி பரவலாக்கி, பொதுநிலையினருக்கு அருட்பணி உதவியாளர், நிதிப்பணியாளர் ஆகிய திருப்பணிகள் வழங்கப்படுகின்றன. மேலும் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கலாம். ஆனால் மேற்கண்ட திருப்பணிகளை பயன்படுத்துவதற்கு போதுமான வாய்ப்புக்கள் பொதுநிலையினருக்கு அளிக்கப்படுவது இல்லை. இவற்றை உள்வாங்கிக்கொள்ள திருச்சபையின் பங்கேற்பு அமைப்புக்கள் இல்லை. அவர்களின் பணியையும் பங்களிப்பையும் முறையாகச் செய்யப் போதிய செயல்திட்டங்கள் இல்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே பொதுநிலையினரின் ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தி, தலைமைப் பண்பை செயல்படுத்தி அவர்களுக்கு உரிய பங்களிப்பைச் செய்யத் தேவையான பணிகளும் பணித்தளங்களும் உருவாக்கப்படுவது உடனடித்தேவை.

“பொருத்தமானவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ள பொதுநிலையினர் சட்ட விதி அமைப்புக்களுக்கு ஏற்பத் தாங்கள் ஆற்றக்கூடிய திருச்சபை அலுவல்களையும் பணிகளையும் தங்கள் திருமேய்ப்பர்களிடம் இருந்து ஏற்றுக்கொள்வதற்கான தகுதி பெற்றுள்ளார்கள்” (திருச்சபை சட்டம் 228-1)

## பங்கேற்புத் திருச்சபை

தலத்திருச்சபையாக மறைமாவட்டத்தினுடைய உயிரணுவாய் விளங்கும் பங்கினுடைய வளர்ச்சியை அளக்கின்ற அளவுகோல் எது? அவற்றின் நிறுவன பலமோ, நிதிவளமோ அல்லது: மாறாக மனித வளங்கள், அவற்றை ஒருங்கிணைத்து, புத்துயிர் ஊட்டி, ஆற்றுப்படுத்தி, வளர்த்தெடுக்கும் அமைப்புக்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

ஆண்டவர் இயேசு ஜெருசலேம் மையத்தையும் நகர்ப்புறங்களையும் விட்டுவிட்டு பாலஸ்தீன் நாட்டின் விளிம்புகளுக்குச் சென்றார். தமது பணியைக் கலிலேயாவில்தான் செய்தார். அதேபோல் மேட்டுக்குடி மக்களை ஓரம் கட்டிவிட்டு, விளிம்பு நிலை மாந்தரான ஏழை எளியோரை நாடிச்சென்று அவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார்: இறையாட்சியைத் தொடங்கி வைத்தார்.

அவரது வாழ்வில் பயணிக்க வேண்டியது திருச்சபையின் கடமையாகும். ஆகவே விளிம்பை நோக்கி நகர்வு இன்றைய உடனடித்தேவை. சங்கம் கூறுவதுபோல், “தம் அறிவு, தகுதி, மேன்மைக்கு ஏற்ப திருச்சபையின் நலனைச் சார்ந்தவற்றில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களுக்கு உரிமை உண்டு. சில வேளைகளில் அது அவர்களது கடமையாகிறது. இந்த அலுவல் இதற்கென்றே திருச்சபையால் அமைக்கப்பெற்ற அமைப்புக்களின் மூலம் தேவைகளுக்கு ஏற்ப நிறைவேற்றப்படலாம்” (திருச்சபை 37).

எனவே திருச்சபையின் செயற்பாடுகளில் பார்வையாளர்களாக, அல்லது அருட்பணியாளர்களால் பயன்பெறுபவர்களாக அல்லது தேவைப்பட்டால், தேவைப்படும்போது அவர்களுக்கு உதவுபவர்களாக மட்டும் இருக்கும் பெருவாரியான பொதுநிலையினரைத் திருச்சபையின் அல்லது சமுதாயத்தில் பல்வேறு பணிகளில் பங்கேற்பவர்களாக மாற்றுவதற்கு தேவையான பல அமைப்புக்களை உருவாக்குவது உடனடித்தேவை,

### 1. அன்பியம்:

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இல்லங்களில் ஒன்றுகூடி வந்தார்கள்: வீட்டில் கூடும் திருச்சபையை வலுப்படுத்தினார்கள். “அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (தி.ப. 2:42).

இதை மாதிரியாகக்கொண்டு, அடிப்படைக் கிறிஸ்தவச் சமூகங்கள் மூலம் இலத்தீன் அமெரிக்கத் திருச்சபையில் ஏற்பட்ட எழுச்சியால் பெரிதும் ஈர்க்கப்பெற்று, அன்பியங்கள் தோன்றி, இன்று இந்திய தமிழக, மறைமாவட்டமளவில் சிறப்பாகப் பணி புரியத் தொடங்கியுள்ளன. இறைமக்களின் இயல்பான, சிறப்பான பங்கேற்புக்கு அன்பியங்கள் அடித்தளமாக அமைவதோடு, சமூக மாற்றத்திற்கான சிந்தனை, செயற்பாடுகளைத் தூண்டிவிடும் மையங்களாகவும் இயங்குவது அவசியம்.

### 2. அருட்பணிப் பேரவை

தலத்திருச்சபை எனப்படும் மறைமாவட்டத்தின் உயிரணுவாக விளங்குவது பங்கு ஆகும். பங்கு என்பது இல்லத்திருச்சபையின் ஒன்றியம் அல்லது நம்பிக்கைச் சமூகங்களாக விளங்கும் அன்பியங்களின் சங்கமம் எனலாம். (பொதுநிலையினரின் அழைப்பும், அருட்பணியும், 19), பங்கு மக்களை ஒருங்கிணைத்துச் செயல்பட அருட்பணிப் பேரவை என்னும் பங்குப்பேரவை அவசியம். இது பல ஆண்டுகளுக்கு முன்னரே பரிந்துரைக்கப்பட்ட அமைப்பு என்றாலும், பல இடங்களில் இன்னும் தோற்றுவிக்கப்படவில்லை அல்லது முறையாகச் செயற்படவில்லை. இதற்கு முக்கிய காரணம் பங்குத்தந்தையரின் அதிகாரப்போக்கும், பங்குத்தளங்களில் உள்ள மரபு அடிப்படையிலான ஆதிக்க அமைப்புக்களின் செல்வாக்கும் ஆகும்.

இந்நிலையைப் புரட்டிப்போட அன்பியம் பெரிதும் துணை புரியும். பங்குப் பேரவை அமைக்கத் தேவைப்படும் நியமன உறுப்பினர் தவிர மற்றவர்கள் அன்பியங்களில் இருந்து தேர்வு செய்யப்படுவது வரவேற்கத்தக்கது.

இது போன்றே மறைமாவட்டமளவிலும் அருட்பணிப்பேரவை உருவாக்கப்பட வேண்டும். மறைமாவட்டத்திற்கான சட்டதிட்டங்களையும் வழிகாட்டு நெறிகளையும் வடிவமைத்துக்கொடுக்கும் பொறுப்பு இதைச்சேரும்.

### 3. நீதிக் குழு:

நிதி நிர்வாகச் சீர்கேடுகள், இலஞ்ச ஊழல்கள் மலிந்துள்ள இன்றைய உலகில் மறைமாவட்ட, பங்கு நிர்வாகத்தில் மக்களின் நம்பகத்தன்மையை அருட்பணியாளர்கள் பெற்றிருப்பது இன்றியமையாதது. திருச்சபையின் உடமைகள், சொத்துகள், நிதி முதலியவற்றை நிர்வகிப்பதில் பொதுநிலையினரும் பங்கேற்று, ஒளிவு மறைவற்ற, எல்லாரும் அறியக்கூடிய அளவில் கணக்குகள் இருக்க வேண்டும். நிதியை உருவாக்குவது, பெருக்குவது, பாதுகாப்பது மட்டுமின்றி மறைமாவட்ட, பங்கு அருட்பணிகளை முன்னெடுத்து முடக்கிவிடவும் இது வழிவகுக்கும். தலத்திருச்சபை தன்னிறைவு என்னும் இலக்கை அடைய இதுவே தேவை.

### 4. பணிக் குழுக்கள்:

ஒரு மறைமாவட்டத்தைச் சிறப்பாக வழிநடத்த வலுவான நிர்வாகம் தேவை. இதற்கு மறைமாவட்டச் செயலகம், ஆலோசகர் குழாம், குருக்கள் மன்றம் முதலிய அமைப்புக்கள் உள்ளன. நிர்வாகப்பணிதான் இதுவரை முக்கியமானதாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு இணையானது அல்லது இதைவிட முதன்மை வாய்ந்தது உயிரூட்டுதல் (animation) ஆகும்.

இந்த நோக்கத்திற்காகத்தான் 2ஆம் வத்திக்கான் சங்கத்திற்குப் பின்னர் அருட்பணி மையங்கள் தோன்றி வளரலாயின. பலரோடு கலந்துரையாடவும் பல்வேறு பணிகளைச் சீராகத் திட்டமிடவும், சிறப்பாகச் செயல்படுத்தவும், சீரிய முறையில் திறனாய்வு செய்து முன்னெடுக்கவும் பணிக்குழுக்கள் உருவாயின.

தமிழக அளவில் ஏறத்தாழ 15 பணிக்குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. இவை முறையாகச் செயற்பட வேண்டுமென்றால் முதலில் பங்கு அளவில் இவை வேரூன்ற வேண்டும். இவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட மறைமாவட்ட அமைப்புக்களும், அவற்றினின்று மறைமாவட்ட அமைப்புகளும் உருவானால்தான். அருட்பணித்திட்டங்கள் மறைமாவட்டத்தின் கடைக்கோடி வரை சென்றடையும்: மறைமாவட்டம் முழுவதும் அருள்வாழ்வு செழித்தோங்கும்.

### 5. இதர அமைப்புகள்:

தமிழ் நாடு புதுவாழ்வுக் கத்தோலிக்க பேரவை, பொதுநிலையினர் பேரவை, கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கம், கத்தோலிக்க சங்கம் முதலிய அமைப்புக்கள் தமிழக அளவில் பொதுநிலையினரை ஒருங்கிணைத்துச் செயற்பட்டு வருகின்றன. குறிப்பாக அரசியல் விழிப்புணர்வை வழங்கி, கிறிஸ்தவர்களை வாக்கு வங்கியாக, ஆட்சியை தீர்மானிக்கக்கூடிய மாபெரும் சக்தியாக மாற்றி வருகின்றன. வின்சென்ட்டி போல் சபை, மரியாயின் சேனை முதலிய பக்திச் சபைகளையும் பல்வேறு இயக்கங்கள், சங்கங்கள், கூட்டமைப்புக்கள் ஆகியவற்றையும் இறையாட்சி இலக்கின் அடிப்படையில் புதுப்பித்து வலுப்படுத்த வேண்டும்.

இத்தகைய அமைப்புகளை பங்குகள் தோறும் உருவாக்கி, அதன் மேம்பாட்டுக்குத் தேவையாக நீண்டகால, குறுகியகால செயற்பாடுகளைத் திட்டமிடவும், வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை நடைமுறைப்படுத்தவும், திறனாய்வு செய்யவும் கற்றுக்கொண்டால் தலத்திருச்சபை பன்முக வளர்ச்சிபெற்ற பங்கேற்புத் திருச்சபையாக விரைவில் மலரும். இவ் அமைப்புக்கள் முறையாகச் செயற்படும் பொருட்டு மறைமாவட்டம், மறைவட்டம், பங்கு அளவில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

## பொதுநிலையினரே அணியாகுங்கள்

திருச்சபையில் பொதுநிலையினர் இரண்டாந்தர நிலையை அடைவதற்கு முக்கிய காரணம் அவர்களது அறியாமையே, அவர்களை வெளி உலகத்திற்குக் கொண்டுவந்து ஆளாக்கி விடுவதற்கு முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களாக அவர்களை உருவாக்குவதற்கு ஒரே வழி அந்த அறியாமை இருளை நீக்குவதே ஆகும். ஆதலின் பொதுநிலையினரின் பயிற்சிக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை அவையத்து முந்தியிருப்புச் செய்வது திருஆட்சியாளர்களின் கடமை.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இது சிறப்பாக வழங்கப்படுகின்றது எனப்பெருமையும், பெருமிதமும் அடையலாம். பொதுநிலையினர் பணிக்குழு மானில அளவில் பல கட்ட, பன்முக உருவாக்கப் பயிற்சிகளை நடத்தி வருகிறது. அடிப்படை உருவாக்கப் பயிற்சி, முதுநிலை உருவாக்கப்பயிற்சி, திருப்பணியாளர் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி, அஞ்சல் வழி இறையியல் கல்வி முதலியவற்றைச் சிறப்பாக ஏற்பாடு செய்து வருகின்றது. இவற்றை மண்டல மறைமாவட்ட, மறைவட்ட, பங்கு அளவில் நடத்துவது காலத்தின் கட்டாயம். இல்லையென்றால் பங்கேற்புத்திருச்சபை என்பது ஏட்டுச்சுரக்காயாகவே இருந்து விடும். கானல் நீராக மறைந்து விடும். **எனவே பொதுநிலையினரே விழித்தெழுங்கள்!**

# பொருட்செல்வத்தை தேடி அருட்செல்வத்தை இழப்பதா?

– அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் –

### முகவுரை

பொருளாதாரத்தை முதன்மைப்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நுகர்வுக் கலாசாரத்தினால் இன்று பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கம் உலகத்தை ஒரு சந்தையாக மாற்றிவிட்டது. இச்சந்தை மனிதனையே இலக்காகக் கொண்டதினால் அவன் அதில் சிக்குண்டு நுகர்வுக்குத் தேவையான பொருளீட்டுவதிலேயே இரவு பகலாக தன் முழுக்கவனத்தையும் செலுத்தி தன் மகிழ்ச்சியை இழந்து விடுகின்றான்.

### மனிதன் பொருளுக்கு சமமானவனா?

இன்றைய நுகர்வுக் கலாசாரத்தில் மனிதனின் மாண்பு, மகத்துவம் என்பன மழுங்கடிக்கப்பட்டு மனிதன் ஒரு பொருளாகக் கருதப்படுகின்றான். இன்று அரசோ ஏனைய நிறுவனங்களோ பொருளைப் பயன்படுத்துவதுபோலவே மனிதனைப் பயன்படுத்துகின்றன. எவ்வளவுக்கு ஒரு மனிதனைப் பயன்படுத்தமுடியுமோ அவ்வளவுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு அதன்பின்னர் அவனை ஒரு வேண்டாப் பொருளாக வெளியேற்றிவிடுகின்றன. இன்று வயோதிபர் இல்லங்களில் உள்ளவர்களோடு உரையாடினால் இவ்வுண்மை நன்கு புலப்படும்.

### இரு பரிமாணங்கள்:

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பொருள் பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம் அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனங்கள் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையுமே தேடாதுவிடுகிறான். அப்படித் தேடினாலும் சுயதேவைக்கே தேடி அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கின்றான்.

### மனித முன்னேற்றம்:

"பேராசையோடு சொத்தைத்தேடுதல் தனிமனிதனின் தன்னிறைவுக்கும், மனித மாண்புக்கும் பெருந்தடையாக அமையும். "பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான காரணி" என்று 'மனித முன்னேற்றம்' என்னும் கத்தோலிக்க திருஅவையின் திருத்தந்தை 6ஆம் பவுலின் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதைச் சுட்டி நிற்கின்றது.

### அறிவற்ற செல்வன்:

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்க வேண்டும். இதை விளக்க விவிலியத்தில் ஒரு கதை கூறப்படுகிறது. 'செல்வன் ஒருவனின் நிலம் நன்றாக



விளைந்தது. அவன் "நான் என்ன செய்வேன்? என் விளைபொருட்களைச் சேர்த்துவைக்க இடமில்லையே! என் களஞ்சியங்களை இடித்துப் பெரிதாக்கி என் தானியத்தையும் பொருட்களையும் சேர்த்துவைப்பேன். பின்பு, 'என் நெஞ்சமே, உனக்குப் பல்லாண்டுகளுக்கு வேண்டிய பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளன. நீ உண்டு, குடித்து மகிழ்ந்திரு' என்று சொல்வேன்" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். ஆனால், அன்றிரவு கனவில் அவனுக்கு ஒரு குரல் கேட்டது. "அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" பலருடைய வாழ்வில் இப்படிப்பட்ட நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் பார்த்த பின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்றுவிடுகிறது. அதாவது அந்தக் கணத்துடன் நின்றுவிடுகிறது.

### இறுதி வார்த்தைகள்:

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்: "உலக வர்த்தகத்தின் உச்சநிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை, அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும், பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தைமட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்துவிட்டேன் என்பதை உணருகின்றேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்கவேண்டும்". சொத்துக்களின் தொடர்தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்புசெய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன்கூட வருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?"

### இவர் யாரோ?

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை?... காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும். "உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்." இறப்பின்போது இந்த இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா?

இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. மசின்ரொஷ் கணனி, அப்பிள் கணனி, ஐ போன், ஐ பாட், ஐ பொட் என்பவற்றைக் கண்டுபிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜொப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்து செல்லுகின்றன அல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ? இவற்றையே கத்தோலிக்க திரு அவையின் இன்றையதிருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறும்போது: "வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவருமே. இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்" என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

"அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" என்றார் பொய்யா மொழிப்புலவர்.

அதாவது தீதின்றித் தேடுகின்ற பொருள் நமக்கு புண்ணியத்தையும் இன்பத்தையும் தருகிறது. மனத்தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும், வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாச்சாரத்துள் மூழ்கி மடியவேண்டி ஏற்படும்.

### மனித மாண்பு மிக்கவர்களாய் வாழ நாம் எதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்?

- எமது ஆன்மீகக் கொள்கைகளில் தெளிவான உறுதிப்பாடு வேண்டும்.
- நாம் மனித மாண்பை மதிக்கவேண்டும். எமது உடல், அறிவு, ஆன்மா என்பவை புனிதமானவை என்பதை உணர்ந்து அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்கவேண்டும். அதுபோன்று மற்றவர்களையும் மாண்போடு நடத்தவேண்டும்.
- இந்த நுகர்வுக் கலாச்சாரத்தால் நாம் தொலைத்துவிட்ட கொடைகள், ஆசீர்வாதங்களை மீளக் கண்டுபிடிக்கவேண்டும். குறிப்பாக குடும்ப உறவுகளை நன்கு பேணவேண்டும். உறவுகளை உறவுகளாக மதித்து வாழவேண்டும்.

தன்னலமற்ற சேவைக்கு எமக்கு எத்தனையோ எடுகோள்கள் வரலாற்றில் உண்டு. "ஒன்றின் தொடக்கமல்ல, அதன் முடிவே கவனிக்கத்தக்கது" என்று விவிலியம் கூறுகிறது. அதாவது, ஒரு மனிதனின் பிறப்பு அல்ல, அவனது வாழ்வும் அதன் நிறைவுமே முக்கியமானவை.

# இன்றைய திருப்பலியும் இறைமக்களும்

திரு ப.ஞானராஜ், உதவிக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி பணிமனை, மன்னார்.

திருப்பலியானது கத்தோலிக்க விசுவாசிகளுக்கு மறை வாழ்வில் முதன்மையானதாகும். இறைமகன் இயேசுவின் கல்வாரிப்பலியாகும். எமது விசுவாசத்தின் உச்ச வெளிப்பாடாகும். இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த திருப்பலியில் இறைமக்களாகிய நாங்கள் பின்வரும் விடயங்களை சிந்திப்பது காலத்தின் தேவையாகும் எனக் கருதுகின்றேன்.

### திருப்பலியில் சத்தியப்பிரமாணம்

கல்வாரிப்பலியில் நாம் அறிக்கையிடும் மறை உண்மைகளை மீள ஆய்வுசெய்து பார்ப்பது சிறந்ததாகும்.

01. எல்லாம் வல்ல இறைவனிடமும்.... என்ற செபத்தில் என் சிந்தனையாலும் சொல்லாலும் செயலாலும் நான் செய்த பாவத்தை நினைப்புடன் 'என் பாவமே என் பாவமே என் பெரும் பாவமே' என அறிக்கையிடும் சந்தர்ப்பத்தில் நாம் உண்மையை உணருகின்றோமா? இதுவரையில் எப்போதாவது செய்த ஒரு பாவத்தையாவது நினைந்து மனஸ்தாபப்பட்டிருக்கிறோமா? அவ்வாறில்லாமல் பாடமாக்கியதாகவோ அல்லது பழக்கப்பட்டதாகவோ அமைந்துவிட்டதா? நன்கு சிந்திக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். அவ்வாறு உணராமல் சொன்னால் அச்செபம் பயனற்றது.

02. பரலோக மந்திரம் செபத்தில் 'எங்களுக்குத் தீமை செய்தவர்களை நாங்கள் பொறுப்பதுபோல் எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்" என்னும் அறிக்கையிடலில் எமது உண்மையான நிலை என்ன? எங்கள் பாவம் உண்மையில் மன்னிக்கப்பட வாய்ப்புள்ளதா? இந்த நேரத்தில் நாம் எப்போதாவது யாராவது எமக்குச் செய்த ஒரு பாவத்தையாவது நினைந்து மன்னித்துள்ளோமா? இல்லையென்றால் எப்படி எமது பாவம் மன்னிக்கப்படும். நாம் ஏன் இந்த செபத்தை சொல்லவேண்டும்? அவ்வாறு உணராமல் சொன்னால் அச்செபம் பயனற்றது.

03. "ஆண்டவரே தேவரீர் என்னுள்ளத்தில் எழுந்தருள நான் தகுதியற்றவன். ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் ஆன்மா குணமடையும்" என்னும் அறிக்கையிடலில் நாம் உண்மையில் தகுதியற்றவர்கள் என்பதை உணர்ந்து அவரை உட்கொள்ள தயங்குகின்றோமா? எம்மை உரியமுறையில் தாழ்த்தி பயத்துடன் அவரைப்பெறச் செல்கின்றோமா? அல்லது இதுவும் எமக்கு பழக்கப்பட்ட செயல்தானா? அவ்வாறு உணராமல் சொன்னால் அச்செபம் பயனற்றது.



### இசையும் ஓசையும்

இசையும் பாடலும் இறைவனைப்புகழும் கருவிகளாகும். செபிக்கத்தூண்டும் கருவிகளாகும். வழிபாட்டில் பக்தர்களை பயபக்தியுடன் பங்குபெறச் செய்வதாகும். ஆனால் நவீன யுகத்தின் மாற்றத்தால் இன்று இசையும் அதற்கேற்ப பாடல்களும் பக்தர்களுக்கு கவனக்கலைப்பானதாகிற சந்தர்ப்பங்கள் அதிகரித்தே செல்கின்றது. பாடல்களை சகலரும் விளங்கி பாடினால்தான் பக்திப் பரவச நிலையை ஒருவர் அடையலாம். புதிய பாடல்களும் துள்ளல் இசையும் பக்தியை குழப்பினால் அது தேவைதானா? பாடல்கள் யாவும் பாடி அனுபவிக்கப்பட வேண்டும். புதிய பாடல்கள் பாடுவதென்றால் குறிப்பிட்ட சில நாட்களுக்கு அவை பாடப்பட்டு இறை மக்களுக்குத் தெரியப்படுத்தப்படல் வேண்டும். பாடகர் குழாம் மட்டும் பாடுவதால் பயனில்லை.

### காணிக்கைப்பவனி

ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கையை கடவுள் ஏற்றுக்கொண்டார். நாமும் எம்மிடம் உள்ளதை இறைவனுக்குக் கொடுக்கிறோம்; கொடுக்க வேண்டும். ஆனால் காணிக்கைப் பவனி தேவைதானா? அதிக நேரத்தைச் செலவு செய்கிறது. கொண்டாட்ட காலங்களில் 2,3 காணிக்கைப்பாடல்கள்கூட பாடப்படும் அளவிற்கு செல்கிறது. அதைவிட காணிக்கை கொடுக்கச் செல்பவர்களின் அலங்காரக் கோலங்கள் ஏனையவர்களுக்கு நகைப்பை ஏற்படுத்துகின்றது. காணிக்கை கடவுளுக்கு கொடுக்கும் சிந்தனை இருந்தால் அதை காணிக்கை வாங்க வரும் பணியாளர்களின் பையில் போடலாம்தானே. இது வழிபாட்டை குழப்பாதென கருதுகின்றேன். மடுத்திருப்பதியில் காணிக்கைப் பவனி இடம்பெறுவதில்லைதானே!

### கதிரைகளில் அமர்தல்

முதிர்வுத்தன்மையும் இயலாமையும் தவிர்க்க முடியாதது. இவர்களுக்கு கட்டாயம் கதிரை வசதிகள் தேவை. ஆனால் உடுத்திய ஆடை கசங்கும் எனவும் நாங்கள் குடும்பமாக கதிரையில்தான் இருப்போம் என்றவாறு நேரத்திற்கு வந்து கதிரை பிடிப்பதும் பிந்தி வரும் உறவுகளுக்கும் பிடித்து வைத்திருப்பதும் அத்துடன் தங்கள் சிறிய பிள்ளைகளுக்கும் கதிரை கொடுப்பதும் சிந்திக்க வைக்கின்றது.

அருகில் இயலாதவர்கள் இருந்தால்கூட பிள்ளைகளை எழுப்பிவிட்டு அக்கதிரையைக் கொடுக்கத் தயங்குகின்றோம். இதனால் சிறிய பிள்ளைகளுக்கு நல்ல பழக்கத்தை நாம் சொல்லிக்கொடுக்கத் தவறுகின்றோம். அதுமட்டுமல்லாது ஆலயத்திற்கு வந்த நோக்கமும் திசைமாறுகின்றது. இதனால் பயனென்ன? இருந்த கதிரையை அவ்வாறே விட்டுவிட்டும் செல்லுகின்றோம். யார் எடுத்து வைப்பது ...?


ஆகவே இச்செயற்பாடுகள் எம்மைச் சிந்திக்க அழைக்கின்றது. இச்சிந்தனைகள் யாவும் எனது தனிப்பட்ட அவதானிப்புக்களும், சிந்தனைகளுமே. யாரையும் குறிப்பிடவில்லை. இவை பொதுவாக கிறிஸ்மஸ், புத்தாண்டு, ஈஸ்டர் மற்றும் ஆலயத்திருவிழாக்கள் ஆகிய காலங்களில்தான் நடைபெறுகின்றது. நாம் சிந்திக்க வேண்டும்; ஏற்றுக்கொள்ள வேண்டும். எம்மை விட்டுக்கொடுக்க வேண்டும். செயற்பாட்டில் மாற்றம் காண வேண்டும். பொருத்தமான கருத்துக்கள் இருந்தால் சிந்திப்போம். இல்லாவிட்டால் விட்டுவிடுவோம். மனச்சாட்சிக்கும் மனிதருக்கும் நியாயமாக நடந்தால் கடவுளுக்கு உகந்தவர்களாகின்றோம்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
- மன்னா நிர்வாகம்.



# தவக்காலச் சிறப்பிதழ்



# உண்மையா? அது என்ன?

## திருமதி. பீ. கிறிஸ்பி குருஸ் – பேசாலை

"உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி. இதற்காகவே நான் பிறந்தேன். இதற்காகவே உலகுக்கு வந்தேன். உண்மையைச் சார்ந்த அனைவரும் என் குரலுக்குச் செவி சாய்க்கின்றனர். பிலாத்து அவரிடம், 'உண்மையா? அது என்ன?' என்று கேட்டான்" (யோவா 18:37-38). உண்மையென்றால் என்னவென்று தெரியாத ஒரு ஆளுநன் பிலாத்து. அதிகாரத்தோடு மக்களை ஆள்பவன். உண்மை என்றால் என்னவென்று தெரியாமல் அநீதிக்குக் கைகொடுத்திருக்கிறான். அநியாயத் தீர்ப்பிடப்பட்ட இயேசு சிலுவை மரமேறி உண்மைக்குச் சான்று பகர்கின்றார். இதுதான் தவக்காலத்தின் உண்மைச் சிந்தனை.

பிலாத்து கேட்ட அதே கேள்வி இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இதற்குரிய உண்மையான பதிலை உலகத்தால் இன்னும் கூறமுடியவில்லை. அப்படி இந்த உலகம் கூறுமாக இருந்தால் உலகில் பாவம் இராது; எந்தப் பாவத்தை எடுத்துக்கொண்டாலும் அதன் பின்புலத்தில் உண்மைத்தனம் இல்லை. இதுதான் யதார்த்தம்!

ஆதிப்பெற்றோர் கீழ்ப்படிய மறுத்தார்கள். அவர்கள் உண்மையைச் சார்ந்திருக்கவில்லை. ஆகவே கடவுளுடைய குரலுக்குச் செவிசாய்க்கவில்லை. உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் இயேசுவின் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். உண்மை என்றால் என்ன? ஒரே பதில், "கிறிஸ்துவே உண்மை!" (கொலோ. 2:17). ஏனென்றால் அவர் வாக்கு மாறாதவர். பொய்யுரையாத தேவன். இயேசு இந்த உலகிற்கு வந்தது உண்மை. இயேசுவின் வார்த்தை உண்மை. அவரது வாழ்வு உண்மை. அவரது பணி உண்மையை எடுத்துரைப்பது. செய்யப்போவதையே சொன்னார். சொன்னதையே செய்தும் காட்டினார். வாழ்ந்தும் காட்டினார். "நானே நல்ல ஆயன்" என்றார். "உண்மையான திராட்சைச் செடி நானே" என்றார். "வாழ்வு தரும் உணவு நானே" என்றார். "கலங்காதே திகையாதே நானே உன் கடவுள்" என்றார். அதிசயங்களும் அற்புதங்களும் அவரது உண்மைக்குச் சான்றுபகர்கின்றன.

ஆண்டவரின் ஆற்றல்மிகு செயல்கள் நம்பிக்கைக்கு உரியவை. நீதியானவை, நிலையானவை. உண்மையாலும், நீதியாலும் உருவானவை (எபே4:24). உண்மையில் நீங்கள் இயேசுவைப்பற்றிக் கேள்விப்பட்டதும், கற்றறிந்ததும் அவரிடமுள்ள உண்மைக்கேற்பவே இருந்தது (எபே. 4: 21). அவ்வியல்பு உண்மையான நீதியிலும் உண்மையிலும் வெளிப்படும் (எபே. 4:24). ஆகவே நீதியும், நேர்மையும் அவரது அரியணையின் அடித்தளம் என்று வார்த்தை கோடிட்டுக் காட்டுகின்றது. அவரது உண்மைக்கு மறுபெயர் நீதி. நேர்மை அவருக்கு அரைக்கச்சை. உண்மை அவருக்கு இடைக்கச்சை (எசா11:5). "நானே உலகின் ஒளி" என்றார். ஏனெனில் ஒளியே எல்லா நன்மையையும், நீதியையும், உண்மையையும் விளைவிக்கின்றது (எபே. 5:9).

**உண்மையை சார்ந்தவர் கடவுளின் குரலுக்குச் செவிமடுத்தனர்:**

**01.நோவா:-** நேர்மையானவராகவும், குற்றமற்றவராகவும் இருந்தார். வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார். வெள்ளப்பெருக்கின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்.

**02.ஆபிரகாம்:-** "உன் நாட்டிலிருந்தும், உன் இனத்தவரிடமிருந்தும், உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காட்டும் நாட்டிற்குச் செல்" (தொ.நூ 12:1). அழைத்தவர் உண்மையுள்ளவர். நம்பிக்கைக்கு உரியவர். வார்த்தைக்குக் கீழ்படிந்தவர். கடவுள் அதை நீதியாகக் கருதினார்.

**03. மோசே:-** எகிப்தில் அடிமையாக வாழ்ந்த இஸ்ரேயல் மக்களைக் கானான் நாட்டிற்கு வழிநடத்தியவர். கடவுளுக்கு உண்மையானவர். திருச்சட்டம் இவரது கையில்தான் கொடுக்கப்பட்டது.

**04. இறைவாக்கினர்:-** உண்மையைச் சார்ந்து நின்று ஆண்டவரின் குரலுக்கு செவிசாய்த்தார்கள். ஆண்டவரின் கரம் அவர்களோடு இருந்தது.

**05. அன்னை மரியா:-** தந்தையிடம் இருந்து வாழ்த்து வந்தது. கணவனை அறியாத நங்கை! யூத சமூகம் கல்லால் எறிந்து கொல்லும். ஆயினும் தயங்கவில்லை, வார்த்தைக்கு அடிமை என்றார். இன்று எல்லாத் தலைமுறையும் அவரைப் பேறுடையாள் என்று போற்றுகின்றது.

**06. புனிதர்கள்:-** "உண்மையை எடுத்துரைப்பதே எனது பணி" என்ற இயேசுவின் வார்த்தைக்குச் சாட்சியாக வாழ்ந்தார்கள். ஆண்டவர் பார்வையில் விலையேறப்பெற்றவர்கள்.

இயேசுவின் பாடுகள், மரணத்தைத் தியானிக்க மீண்டும் ஒரு தவக்காலம் தரப்பட்டுள்ளது. பாடுகள், மரணத்தை கிறிஸ்தவர்கள் தியானிப்பது உண்மை. நோன்பு, சிலுவைப்பாதை, பாதயாத்திரை, தியானங்கள், பாவசங்கீர்த்தனம் போன்ற பக்தி முயற்சிகள் மூலம் பாவத்துக்குப் பிராயச்சித்தம் தேடிக்கொள்கிறோம். கிறிஸ்தவத்தின் ஆணிவேர், அடித்தளம், உண்மை இயேசுவின் உயிர்ப்பு. இந்த உயிர்ப்பில் நமது வாழ்க்கை பயணிக்கிறதா?

"எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" அது என்ன.... ? இயேசுவின் பாடுகள் மரணத்தைத் தியானிப்பது இயேசுவுக்காக அல்ல. நமக்காக, நமது மீட்புக்காக! நான் உத்தானமாக வேண்டும். நான் நிலைவாழ்வு பெறவேண்டும். பிலாத்துவைப்போல் நாமும் கேள்வி கேட்கக்கூடாது.

உண்மைக்கு எதிர்ப்பதம் பொய். "பொய் சொல்லும் வாய் ஆன்மாவைக் கொல்லும்" என்று இறைவார்த்தை (சா.ஞா.1:11) கூறுகின்றது. அனனியா, சப்ரா பரிசுத்த ஆவிக்கு எதிராகப் பொய் சொன்னார்கள்; அதே இடத்தில் மாண்டனர் (தி.பா). அனைத்துத் தீமைகளுக்கும் மூலகாரணம் பொய். பொய்யுள்ள இடத்தில் அமைதி இல்லை; மகிழ்ச்சி இல்லை; சந்தோசம், சமாதானம் எதுவுமே இல்லை. "பொய்யுரைக்கும் நாவை ஆண்டவர் அருவருக்கின்றார். உண்மையாய் நடக்கின்றவர்களை அவர் அரவணைக்கின்றார்" (நீ.மொழி 12:22). உண்மைக்குக் குரல் கொடுத்தவர் நம் ஆண்டவர். அந்தக் குரலுக்கு நாம் செவிமடுப்போம்.

# நாற்பது நாட்கள்

### தவக்காலம் வெறும் பரிகாரத்திற்காக அல்ல, உள்ளத்தாலும், உடலாலும் தவமிருந்து கொண்டாடப்பட வேண்டிய காலம்.

தவக்காலம் கிறிஸ்தவர்களின் நோன்புக் காலம். எல்லா மதத்திலும் இப்படிப்பட்ட காலங்கள் உண்டு. தவக்காலம் "உனக்காக எல்லாம் உனக்காக" என்று இறைவன் மனிதரிடம் தன்னை ஒப்புவித்த காலம். "எனக்காக எல்லாம் எனக்காக" என்று மனிதன் இறைவனை ஏற்றுக்கொள்கின்ற காலம். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைக் கொண்டாட, தயாரிப்பதற்காக விசுவாசிகளாகிய நமக்குத் திருச்சபை ஏற்படுத்திக் கொடுக்கின்ற காலம்தான் இந்தத் தவக்காலம்.

இந்தப் புனித காலத்தை நாம் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம்? எப்படி நம்மை தயார்படுத்திக்கொள்ளப் போகின்றோம்?

1. செபம், தவத்தில் ஈடுபடுவது.
2. தர்மக் காரியங்களில் நாட்டம் செலுத்துவது.
3. நோன்பிருந்து கடவுளை வழிபடுவது.


ஒரு ஊரில் ஒரு நிகழ்வு நடந்தது. இறந்துபோன ஒரு நாயைப் பார்த்து ஒருவன் அழுதுகொண்டிருந்தான். "ஏன் அழுகிறாய்?" "என் நாய் செத்துப்போய் விட்டது." "எப்படிச் செத்தது?" பசியின் கொடுமையால்." "கையில் என்ன வைத்திருக்கின்றாய்?" "அது என் சாப்பாடு." "அதை ஏன் நாய்க்குப் போடவில்லை?" "எனக்கு திரும்பக் கிடைக்காது." "பிறகு ஏன் அழுகின்றாய்?" "கண்ணீர் சும்மாத்தானே வருகின்றது அதனால்தான்."

இப்படித்தான் நாமும் இருக்கின்றோமா? எனவே தவக்காலம் வெறும் பரிகாரத்திற்காக அல்ல. உள்ளத்தாலும், உடலாலும் தவமிருந்து கொண்டாடப்பட வேண்டிய காலம். எனவே செபித்து, வழிபடுவோம். வழிபட்டு செபிப்போம். அப்போது ஆண்டவரின் உயிர்ப்பு நம் கண்களுக்குத் தெரியவரும்.

**உரையாடல்**

**நபர் 1 :** கடவுளைப் பார்த்திருக்கிறாயா?

**நபர் 2 :** அவர் என்ன சினிமாவா? நான் பார்ப்பதற்கு? அவர் உன் உள்ளத்திலும், என் உள்ளத்திலும் இருக்கின்றார். அனுபவத்தில்தான் அவரை அறியமுடியும்.




# தவக்காலத்தில் மாணவர்களை வழிநடத்துவோம்

தவக்காலம் துக்கம் நிறைந்த காலம் அல்ல; துயரம் நிறைந்த காலமும் அல்ல. அது நம்மை உயிர்த்த இயேசுவிடம் நடத்திச்செல்லும் காலம். உயிர்ப்பின் நிகழ்ச்சிக்கு நம்மை அழைத்துச்செல்லும் காலம். இயேசுவுடன் நாமும் உயிர்த்து மகிமைபெற நம்மைத் தயாரிக்கும் காலம். எனவே தவக்காலத்தின் ஒவ்வொரு நாளிலும், நாம் படிப்படியாக உயிர்த்த கிறிஸ்துவிடம் நெருங்கி வரவேண்டும். நாம் மட்டுமன்று நமது மாணவ, மாணவியரையும் உயிர்த்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியில் பங்குப்பெறத் தயாரிக்க வேண்டும். ஒருசந்தி இருந்தாலும், புலால் (அசைவ) உண்ணாமையும், வாரமொரு நாள் சிலுவைப்பாதை செய்வதும் மட்டும் தவக்காலமாகிவிடாது. கிறிஸ்துவைப் பின்பற்றி வாழ்ந்து, நாமும் அவரைப்போலாக முயற்சி செய்வதே தலைசிறந்த தவக்காலமாகும். நமது மாணவ மாணவியர் இயேசுவுடன் நெருங்கிய தொடர்புகொள்ளவும், அவரைப் பின்பற்றி வாழவும் தவக்காலத்தில் பயிற்சி கொடுக்க வேண்டும். அதற்கு பின்வரும் குறிப்புக்கள் உதவும்:




### 1. இயேசுக்கிறிஸ்துவை நோக்கிச் செல்

இயேசு உயிர்தெழுந்தார்; மகிமை பெற்றார். ஆனால் அதற்காக அவர் தம் வாழ்நாள் முழுவதும் தன்னைத் தயாரித்தார். அவர் செய்த ஒவ்வொரு செயலும் உயிர்ப்பை நோக்கியே இருந்தது. இயேசுவின் உயிர்ப்பில் பங்கெடுத்து மகிழ விரும்பினால் நாமும் அவரைப் பின்பற்றி வாழவேண்டும். நாம் ஒருவரை ஒருவர் அன்பு செய்தால் நாளுக்கு நாள் அவரை நெருங்கிச்செல்ல முற்படுவோம். நமது செபங்களும், செயல்களும், முயற்சிகளும் நம்மை அவரிடம் அவர் அருகில் கொண்டுசெல்வதாக இருக்கட்டும். பாவங்களோ நம்மை கிறிஸ்துவிடமிருந்து புறம்பாக்குகின்றன. அவரிடமிருந்து நம்மைப் பிரிக்கின்றன. நீ கிறிஸ்துவை நாடிச்செல்ல விரும்புகின்றாயா? நற்செயல்களைச் செய். தவக்காலத்தில் அவைகளை இன்னும் அதிகமாகச் செய்.

### 2. கிறிஸ்துவைப்போல் கீழ்படிந்து நட

இயேசு வாழ்க்கை முழுவதும் கீழ்படிந்திருந்தார். அதுவும் சிலுவை மரணம்வரை கீழ்ப்படிந்திருந்தார். குழந்தையாக இருந்தபோது அன்னை மரியாவுக்கும், சூசையப்பருக்கும் கீழ்ப்படிந்திருந்தார். வளர்ந்த பின்பு விண்ணுலக தந்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். தந்தையின் விருப்பத்தைச் செய்வதையே தம் உணவெனக் கொண்டார் (யோவா4:5-34). சிலுவை மரணம்வரை தமக்குக் கீழ்ப்படிந்த தம் மகனை தந்தையாகிய கடவுள் உயிர்ப்பித்தார். அவரை விண்ணுலகம்வரை உயர்த்தினார். இம்மைக்கும், மறுமைக்கும் தலைவராக்கினார். நாமும் பெற்றோருக்கும் பெரியோருக்கும் கீழ்ப்படிய வேண்டும். இறைவனுக்கு அடிபணிந்து ஒழுக வேண்டும். அப்பொழுது நாமும் ஒருநாள் கிறிஸ்துவின் உயிர்ப்பில் பங்குபெறுவோம். விண்ணுலகில் உயர்வடைவோம்.

### 3. அமைதியுடன் செபி

அமைதி நிலவும் உள்ளத்தில் இறைவன் பேசுகின்றார். எலியாஸ், சாமுவேல் மற்றும் பல புனிதர்களிடம் அமைதியில் இறைவன் பேசினார். இயேசு நாள்தோறும் இரவில் அமைதியில் தந்தையிடம் செபித்தார். அவருக்கு எதிராகக் கூறப்பட்ட பொய்க் குற்றங்களுக்கு மௌனம் சாதித்தார். அவர் தோள்மீது சுமத்தப்பட்ட சிலுவையை அமைதியுடன் ஏற்றுக்கொண்டு பாடுகளின் வேதனையை பொறுமையுடன் தாங்கிக்கொண்டார். தவக்காலத்தில் நீயும் அமைதியை நாடு. உள்ளத்தின் அமைதியில் இறைவனைத் தேடு. அவருடன் பேசு, மௌனமாகச் செபி, இறைவனைத் தியானி.

### 4. வார்த்தைகளால் செபி

தவக்காலத்தில் நிறையச் செபம் செய். உன் சொந்த வார்த்தைகளால் செபி. திருப்பாடல்களால் செபி. திருச்சபையின் பல்வேறு செபங்களால் வேண்டு. செபத்தில் நாம் இறைவனைச் சந்திக்கின்றோம். அவருடன் பேசுகின்றோம். உனது செபத்தில் இறைவனை புகழ்ந்து போற்று. அவர் உனக்குச் செய்த நன்மைகளுக்கு எல்லாம் அவரை வாழ்த்து. உனது பாவங்களுக்காக மன்னிப்பைக் கேள். நீ நல்ல பிள்ளையாக இருக்கும் வரத்தைக் கேள். அவரில் நீ வைத்துள்ள நம்பிக்கையை எடுத்துச் சொல். இறைவனின் அன்பில் நம்பிக்கை கொண்டிருப்பதாகக் கூறு. அவரது மன்னிப்பில் நம்பிக்கை உண்டென்று சொல்.

### 5. பிறருக்குப் பணி செய்

இயேசு சென்ற இடமெல்லாம் மக்களுக்குப் பணிபுரிந்தார்; உதவி செய்தார். மக்களின் நன்மையை நாடினார். சீடர்களின் கால்களைக் கழுவினார். "நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்." என்று நம்மிடம் கூறியவர். நாம் பிறரை அன்பு செய்கின்றோம் என்றால் பிறருக்குப் பணி புரிவதால்தான் அது முடியும். பணியின் வழியாகத்தான் நமது அன்பை வெளிப்படுத்துகின்றோம். (பிறருக்காகப் பணிசெய்யக்கூடிய பல வழிகளை ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிக் கூறலாம். தவக்காலத்தின் வகுப்பிலும் அடிக்கடி அதைப்பற்றி நினைவூட்ட வேண்டும்.)

### 6. உனது உள்ளத்தை திற

இயேசு எப்பொழுதும் பிறருக்குத் திறந்த உள்ளம் கொண்டிருந்தார். எப்பொழுதும் பிறரைப்பற்றியே நினைத்துக்கொண்டு இருந்தார். பிறருக்காகவே வாழ்ந்தார். தவக்காலத்தில் நீ அவரை அதிகம் பின்பற்ற விரும்புகிறாய் அல்லவா? எனவே பிறரைப்பற்றியும் நினை. மற்றவர்களுக்கு உன் உள்ளத்தைத் திற. பல்வேறு பகுதிகளில் பசி, பிணி, பஞ்சத்தால் வாடும் மக்களின் கண்ணீர் துடைக்க ஆண்டொன்றுக்கு பன்னிரண்டு கோடி ரூபாய்களைச் சேர்க்கின்றார்கள். தவக்காலத்தில் அவர்கள் செய்யும் பரித்தியாகங்கள் என்னும் பல கற்களால் உருவானதுதான் "மிசெரெயோர்" என்னும் உதவி நிறுவனம். இந்த நிறுவனத்திற்கு வேண்டிய நிதி திரட்டுவதில் ஜேர்மனி நாட்டுப் பள்ளிக்குழந்தைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால், உனது நாட்டில் வாழும், உனது ஊரில் வாழும், உன் அருகில் வாழும், உன்னுடன் வாழும் ஏழை மக்களின் துன்பத்தைப்போக்க ஏதாகிலும் செய்ய வேண்டாமா?

# இயேசுவின் பாதையில்.....
# (சிலுவைப்பாதைச் சிந்தனைகள்)




**முன்னுரை:**

"பறவைகள் பலவிதம், அவை ஒவ்வொன்றும் ஒருவிதம்" என்ற பாடல் ஒன்று உண்டு. அவ்வாறே பாதைகளும், பாடுகளும், பலவிதம் அவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு குறிக்கோளுக்கானவை. ஒரு குழந்தைக்குத் தாய் காட்டும் பாதை அன்புப் பாதை. ஒரு மாணவனுக்கு ஆசிரியர் காட்டும் பாதை கல்விப் பாதை. ஓர் இளைஞனுக்கு மற்றொரு இளைஞன் சுட்டிக்காட்டும் பாதை நட்புப் பாதை. சிறந்த நூல்கள் நமக்குக் காட்டும் பாதை நன்னெறிப் பாதை. சிறந்த தலைவர்கள் காட்டும் பாதை வழிகாட்டும் பாதை. இவ்வாறு நமது வாழ்வில் பல வகையான பாதைகள் உள்ளன. நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தோமென்றால். இவையெல்லாம் நிரந்தரமானவையல்ல என்று தோன்றும். ஆகவே உண்மையான பாதை எது? அதுதான் நமக்காக ஆண்டவர் இயேசு தியாக உள்ளத்துடன் பயணம் செய்த சிலுவைப்பாதை. இயேசு நடந்த சிலுவைப் பயணத்தில் நாமும் இணைந்து கொள்வோமா? புதிய பாதையில் பயணத்தைத் தொடர்வோமா?

## முதல் நிலை

**முதல்வர்:**

அன்பு நிறை இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

**எல்லோரும்:** ஏனெனில் உமது திருச்சிலுவையினால் உலகை மீட்டீர் (இதே போன்று ஒவ்வொரு நிலையிலும் செபிக்கவும்).

### நீதிக்கே ஓர் அநியாயத் தீர்ப்பு

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மாசற்றவரான இயேசுவுக்கு யூதர்கள் சிலுவைச் சாவை தீர்ப்பிட்டனர். அதே தீர்ப்பு இன்றும் தொடர்கிறது. இன்று நீதிமன்றத்தில் அநியாயத் தீர்ப்பு. வேண்டியவனுக்கு ஒரு தீர்ப்பு, வேண்டாதவனுக்கு ஒரு தீர்ப்பு.

**சிந்தனை:** நான் எத்தனைமுறை மற்றவர்களைத் தீர்ப்பிட்டிருக்கிறேன்?

**செபம்:** அன்பு இயேசுவே, தீர்ப்பிடுபவன் தீர்ப்புக்குள்ளாவான் என்று மொழிந்தீரே. நாங்கள் எங்கள் வாழ்வில் பிறரைத் தீர்ப்பிடாது வாழ உமது அருளைத் தாரும். (இதேபோன்று ஒவ்வொரு நிலையிலும் செபிக்கவும்)

## இரண்டாம் நிலை

### சுமைகளைத் தேடி

அனைத்துக் காக்கும் தாய்கூட தன் சேயை சுமை காரணமாக இறக்கிவிடலாம். ஆனால் நம் நல்ல ஆயனாம் இயேசு நம்மை இறக்கிவிடுவதில்லை. நாம் செய்த பாவத்தோடு நம்மைச் சுமக்கிறார். கற்றூணில் கட்டுண்டு, உடல் கிழிய அடிபட்ட இடத்தில் நமக்காகச் சிலுவையை ஏற்றுக்கொள்கிறார்.

**சிந்தனை:** நாமும் பலருடைய வாழ்வில் பல சுமைகளைக் கொடுக்கிறோமா? சிந்திப்போம்.

## மூன்றாம் நிலை

### துன்பங்களால் துவண்டு விழும் மனிதம்

சிலுவையின் பாரம் தாங்க முடியாமல் அல்ல, மனிதரின் இயலாமையையும், வாழ்வின் இயல்பையும், சுட்டிக்காட்ட இயேசு முதல்முறை கீழே விழுந்து கிடக்கிறார். நாமும் இன்று எத்தனை பாவங்களில் பாவநாட்டங்களில் விழுந்து கிடக்கிறோம்.

**சிந்தனை:** ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல; விழுந்தபோதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை. நான் எப்படி இருக்கிறேன் விழுந்து கிடக்கிறேனா? அல்லது எழுந்து நடக்க முயற்சிக்கிறேனா?

## நான்காம் நிலை

### அன்பு நெஞ்சங்களின் சந்திப்பு

தாயன்பு என்பது தன்னிகரற்றது; தாயன்பு உயர்ந்தது; மிகச்சிறந்தது. தவறு செய்த தன் மகனையும் அன்பு செய்து தன் இன்பத்தில் இடம் தருபவள் தாய். அன்பு நெஞ்சங்கள் சந்திப்பு ஒருவர் ஒருவருக்கு ஆறுதலும், தேறுதலும் அளித்தன.

**சிந்தனை**: இன்று நாம் பிறரைச் சந்திக்கும் அந்தச் சந்திப்பு ஆறுதல் தருகிறதா?

## ஐந்தாம் நிலை

### உதவிக்கரம்

இலட்சியவாதிகள் மறைந்தாலும், இலட்சியங்கள் அழிவதில்லை. மீட்பு என்னும் இலட்சியத்தைக் கண்முன் வைத்துப் பயணம் செய்தவர்தான் இயேசு. இங்கே இலட்சியத்தை அடையமுன் உடலளவில் துவண்டுபோகும் இயேசுவுக்குச் சீரேன் நகர் சீமோன் உதவி செய்கிறார்.

**சிந்தனை**: இன்று நாம் நமது சமுதாயத்தில் துவண்டுகிடக்கும் ஏழை எளியவருக்கு உதவிசெய்ய முன்வருகிறோமா?

## ஆறாம் நிலை

### துணிந்த உள்ளம்

வெரோணிக்கம்மாள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள். இன்று நாம் வாழும் இவ்வுலகில் எத்தனையோ இடங்களில் அநியாயங்கள், அக்கிரமங்கள் கொலைகள், வன்முறைகள் மலிந்திருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. இதற்கு காரணம் இல்லாமையே.

**சிந்தனை**: இன்று நடக்கும் அநீதிகளை தட்டிக் கேட்கும் துணிவு நம்மிடம் இருக்கிறதா? ஆபத்தில் இருப்பவருக்கு உதவிசெய்ய முன்வருவோமா?

## ஏழாம் நிலை

### இலக்கு நோக்கிய பயணம்

இயேசு தமது சிலுவைப் பயணத்தில் இரண்டாம் முறை கீழே விழுகிறார். ஆனாலும் அவர் விழுந்து கிடக்கவில்லை.எழுந்து இலக்குநோக்கிப் பயணத்தைத் தொடர்கிறார். இன்று எமது சமுதாயம், சினிமா, போதைப்பொருள், விபச்சாரம், கொலை திருட்டு போன்ற மாயக்கவர்ச்சிகளாலும், பேராசை, பொறாமை, தன்னலம், போன்ற தீய குணங்களினாலும், அடிபட்டு வீழ்ந்து கிடக்கிறது. இந்த நிலையிலேயே வீழ்ந்து கிடப்பது இறைவனுக்கு விருப்பமான செயலா? வீழ்ந்து கிடந்ததில் இருந்து எழுவோம். மாற முயற்சிப்போம்.

**சிந்தனை**: இன்று நடக்கும் அநீதிகளை தட்டிக்கேட்கும் துணிவு நம்மிடம் இருக்கிறதா? ஆபத்தில் இருப்பவருக்கு உதவிசெய்ய முன்வருகின்றோமா?

## எட்டாம் நிலை

### ஆறுதல் மொழிகள்

யூத சமுதாயத்தில் பெண்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டார்கள். அவர்களைக் கீழ்த்தரமாக நினைப்பதும் ஒதுக்கி வைப்பதும் யூத சமுதாயத்தின் வழக்கமாக இருந்தது. இயேசு பெண்களை மதித்ததோடு மட்டுமன்றி பெண்களையும் தம் சீடர்களாக மாற்றினார். எருசலேம் நகர்ப் பெண்கள் இயேசுவுக்கு ஆறுதல் அளித்தனர்.

**சிந்தனை:** வயதான பெற்றோருக்கு நான் ஆறுதல் அளிக்கிறேனா? ஆறுதல் தேடும் பிறருக்கு ஆறுதல் அளிக்கிறேனா?

## ஒன்பதாம் நிலை

### விழுந்து கிடக்கும் பேரன்பு

இயேசு சென்ற பாதை கரடுமுரடானது; மேடு பள்ளம் நிறைந்தது. அது கற்களும் முற்களும் நிறைந்த பாதை. இயேசு தடுமாறி மூன்றாம்முறை கீழே விழுகிறார்.

**சிந்தனை**: இன்று பிள்ளைகள் பெற்றோருக்கு முள்களாக அமைகின்றனர். இன்று பிள்ளைகள் மனம்போகும் போக்கில் வாழ்கின்றனர். பெற்றோர் மனமுடைந்து அவமானத்திற்கு ஆளாகின்றனர். இதனால் குடும்ப வாழ்வு கீழே விழுகிறது.

## பத்தாம் நிலை

### உரிமை பறிபோனது

கடவுளுடைய ஆசியினால் தொடக்கத்தில் ஆதாம் மகிமையை ஆடையாக அணிந்திருந்தான். ஆனால் கடவுளின் கட்டளையை எப்போது அவன் மீறினானோ அப்போதே மகிமையின் ஆடையை இழந்தான். புதிய ஆதாமாகிய கிறிஸ்து மானிடத்தின் மாசுகளைப் போக்கத் தாம் ஆடையின்றி நிர்வாணமாக்கப்படுகிறார்.

**சிந்தனை:** நாமும் மற்றவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்துள்ளோமா? பிறருக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளோமா?

## பதினொராம் நிலை

### இலவசமான ஆணிகள்

ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம். இலவசம் கொடுக்கும் இவ்வுலகம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அரும்செயல்கள் பல செய்தவருக்கு, பார்வையற்றவரைத் தம் கைகளால் தொட்டுக் குணப்படுத்தியவருக்கு மூன்று இலவசங்களைக் கொடுத்தது. இலவசங்கள் பல பேருக்கு நன்மை பயக்கும். ஆனால் இந்த இலவசங்கள் துன்பத்தை கொடுத்தன. அவைதான் ஆணிகள். இயேசுவின் உடல் ஆணிகளால் துளைக்கப்பட்டது.

**சிந்தனை:** பிறரின் புகழைக் கெடுக்கவும், முன்னேற்றத்தைத் தடைசெய்யவும் நாம் செய்யும் திட்டங்கள் அந்த ஆணிகளாகின்றன.

## பன்னிரண்டாம் நிலை

### அளவிட முடியாத பேரன்பு

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் மிகுந்த விளைச்சல் தரும். மெழுகுவர்த்தி தன்னை அழித்தால்தான் ஒளி தரும். சிற்பி கல்லைச் செதுக்கினால்தான் அழகிய சிற்பம் உருவாகும். இவ்வாறு இந்த உலகமே மீட்படைய இயேசு தன்னையே தியாகம் செய்தார். சிலுவையில் நமக்காகப் பலியானார்.

**சிந்தனை**: இன்று நம்மில் ஒரு துளிகூட தியாக மனப்பன்மை இல்லையே! சிறிதளவு நேரத்தையும், உழைப்பையும் பணத்தையும் பிறருக்கு வழங்க முன்வருகிறோமா? சிலுவையில் இயேசு மன்னிக்கும் பாடத்தை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறோமா?

## பதின்மூன்றாம் நிலை

### தாயின் மடியில்

அருள்மிகப் பெற்றவள் அன்னை மரியாள். நான் ஆண்டவரின் அடிமை என்று உரைத்தவர். தம்மையே இறைவனுக்கு அர்ப்பணித்தவள். இறைமகனையே ஈன்றெடுத்த பெருமை மிக்கவள். மானிடத்தை மீட்க நல்வழிப்படுத்த தம் ஒரே மகனையே பலிக்கொடுத்த உன்னத தாய்.

**சிந்தனை**: இன்று எத்தனை அன்னையர்கள் திருச்சபைக்காகத் தங்கள் பிள்ளைகளை அர்ப்பணிக்கின்றனர்?

## பதினான்காம் நிலை

### புத்துயிர் வழங்கிட இயேசு புதைக்கப்படுகிறார்

தலைசாய்க்க இடமில்லாத மாபரன் இயேசுவுக்குக் கல்லறையில் இடம் கொடுத்தார் அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு. மனிதரைப் புனிதராக மாற்ற வந்த புனிதத்தின் உறைவிடம் இங்கு புதைக்கப்படுகிறது. இவை எல்லாம் எதற்காக நாம் மறுவாழ்வு பெற்று வாழவே.

**சிந்தனை:** நம்மிடம் உள்ள பாவங்களைப் புதைப்போமா? நம்மிடம் உள்ள அழுக்காறு, பொறாமை, சினம் பழிவாங்கும் எண்ணம், வீண் பெருமை போன்றவைகளைக் களைந்தெறிவோமா?

## பதினைந்தாம் நிலை

### சிலுவைப் பாதையின் இறுதியில்

அளவில்லா அன்பும் கருணையும் நிறைந்த இறைவா, உமது பேரன்புக்காக நன்றி செலுத்துகின்றோம். உமது ஒரே மகனையே எங்களுடைய மீட்புக்காகக் கையளித்ததற்காக உம்மைப் போற்றுகின்றோம். உம் திருமகனின் கல்வாரிப் பாதையில் பயணித்த நாங்கள் உண்மையான மனமாற்றம் பெற்று, புதிய வாழ்வு வாழவும், சமூக ஈடுபாடு கொண்டு திகழவும் அருள்புரிவீராக ஆமேன்.

திருத்தந்தையின் கருத்துக்களுக்காக /பர./அருள்./திருப்புகழ்





# அதிர்வுகள் .....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 71

## குப்பைகளை நீக்க வழி குப்பைகளை அகற்றுவதுதான் !

# குப்பைகளைக் கொண்டு திரியக் கூடாது

ஜெர்மனி நாடு பிளவுற்று இருந்த காலத்தில் பெர்லின் நகரத்தைக் கிழக்காகவும் மேற்காகவும் பெரிய மதில் சுவர் பிரித்திருந்தது. ஒருநாள் கிழக்கு பெர்லினைச் சேர்ந்த சிலர், ஒரு பெரிய வாகனத்தில் நிறைய குப்பை கூளங்களைக் கொண்டுவந்து மதில் தாண்டி மேற்கு பெர்லின் பக்கம் கொட்டிவிட்டுப் போனார்கள். அவ்வளவு ஆத்திரமும் பகைமையும் குரோதமும் கிழக்கு பெர்லின் நகர மக்கள் மேற்கு பெர்லின் நகர மக்கள்மீது கொண்டிருந்தார்கள்.

இதற்குப் பதிலடி கொடுக்க நினைத்த மேற்கு பெர்லினைச் சேர்ந்த மக்களுள் சிலர் முற்றிலும் வித்தியாசமான பாணியில் செயற்பட்டு இருந்தார்கள். அவர்கள் உணவுப் பண்டங்கள், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மரக்கறிகள் என ஒரு லொறி நிறையப் பொருட்களை ஏற்றி மதில் தாண்டி வந்து கிழக்கு பெர்லின் பக்கம் அழகாக அடுக்கி வைத்துவிட்டுப் போனார்கள். அப்படிச் செய்தவர்கள் அப்பொருள்கள்மீது ஒரு வாசகத்தையும் எழுதி வைத்துவிட்டுப் போனார்கள்: “ஒவ்வொருவரும் தம்மிடம் என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுப்பார்கள் (Each gives what he has)”.



### பானையில் இருப்பதுதான் அகப்பையில்

இதனை ஒருவகையில், “பானையில் இருந்தால்தான் அகப்பையில் வரும்” என்று முன்னோர்கள் கூறிவைத்ததை “பானையில் இருப்பதுதான் அகப்பையில் வரும்” என்று கொஞ்சம் மாற்றிக்கூறுவதன் மூலம் மேற்சொன்ன சம்பவத்தை ஆழச் சிந்திக்கத் தூண்டுவதாக அமையும். ஆக, ஒவ்வொருவரிடமும் என்ன என்ன, எந்த எந்த அளவில் உள்ளதோ; அதனை அந்த அந்த அளவில் கொடுப்பார்கள். அது நன்மையானதாகவும் இருக்கலாம், நன்மைபயக்காதவை ஆகவும் இருக்கலாம்.

உள்ளமாகிய பானையில் இரக்கம் இருந்தால் இரக்கச் செயல்கள் வெளிப்படும். மாறாக அரக்கக் குணங்கள் இருந்தால் அரக்கத்தனங்கள் புறப்படும். அமைதியும் பொறுமையும் குடிகொண்டிருந்தால் அன்பும் கனிவும் பரிவும் வெளிவரும். மாறாக வன்முறையும் பொறாமையும் குடியிருந்தால் வாள்(ய்) வெட்டுக்களும் வாதைகளும் தொடரும். ஒவ்வொருவரும் எவை எவற்றை கொண்டிருக்கிறார்களோ அவை அவற்றைத் தம் செயல்களில் வெளிப்படுத்திக்கொண்டிருப்பார்கள்! இது, மிக இலகுவான ஒரு வாழ்வியல் உண்மை. இதில் வலிந்து புகுத்தவும் ஏதுமில்லை, குறைத்துக் கூறவும் யாதுமில்லை!

### குப்பைப் பிரச்சினை குப்பைகளால்தான்!

குப்பைப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உலகெங்கும் உருவெடுத்து வருவதை அவதானிக்கலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் இது ஒரு பிரச்சினையாகவே கணிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் இதற்கான வழிவகைகளை மிகச்சிறப்பாகக் கையாளுகின்ற காரணத்தினால் ஆகும். உண்மையில், குப்பைப் பிரச்சினையை மிக இலகுவாகத் தீர்த்துவிடலாம்! ஆனால் இக்குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கான காரணம் குப்பைகளால்தான் என்பதை எப்போது குப்பைகள் எண்ணிப் பார்க்கிறார்களோ அப்போது குப்பைப் பிரச்சினைக்கான தீர்வைக் கண்டுபிடித்துவிடலாம்!

குப்பைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாமல் இப்பிரச்சினை தொடர்வதற்குக் காரணம் இரண்டு உள்ளன. ஒன்று, சாதாரண குப்பைகள்; மற்றயது, குப்பையை அரசியல்படுத்தும் குப்பைகள். குப்பைகள் குறித்து ‘ஞானம்’ சஞ்சிகையில் ‘குப்பைகள்’ என்ற தலைப்பில் ஒருதடவை எழுதியிருந்தேன்:

“09க்கு ஒருத்தி! 9.30க்கு ஒருத்தன்! 10க்கு இன்னொருத்தி! 10.30க்கு இன்னொருத்தன்! 11க்கு வேறொருத்தி! 11.30க்கு வேறொருத்தன்! இப்படியே இரவிரவாக ஒருத்திக்குத் தெரியாமல் மற்றொருத்தி! ஒருத்தனுக்கும் தெரியாமல் மற்றொருத்தன்! வீசிவீசி... விடிவதற்குள் நகர வீதிகள் நரகமாகி விடுகின்றன. நகரத்துக் குப்பைகளால்!” என அக்கவிதை வருகிறது.

இவ் அவதானிப்பு எவ்வளவிற்கு உண்மையானது என்பதை நகரத்து மக்கள் யாவரும் அறிவார்கள்! ஏனெனில் நகரங்கள் நாற்றமெடுக்க ஒருவகையில் இவர்கள் காரணமாய் இருக்கின்றார்கள் என்பதை இலேசாக மறந்துபோக முடியாது! மேலும், எதற்கோ தேவைப்படும் எனப் பலவற்றைச் சேர்த்துச் சேர்த்துவைத்து எதற்கும் தேவைப்படாமல் பல ஆண்டுகளின் பின்னர் எறிந்த பல பொருட்கள் இங்கு நினைவுக்கு வரலாம். இன்னும், “பிறகு உண்ணலாம்” என அடுத்தவரோடு பகிராமல் குளிர்சாதனப் பெட்டியில் அடுக்கி அடுக்கி வைத்த பல உணவுப் பொருள்கள் காலாவதியாகிக் கொட்டியதையும் எண்ணிப் பார்க்கலாம்.

### குப்பைகளால் குப்பைக்குப் பலியானோர்

அடுத்து, குப்பையை வைத்து அரசியல் செய்யும் அரசியல்வாதிகளும் இந்நாட்டில் இருக்கத்தான் செய்கிறார்கள். இல்லையெனில் 2017 தமிழ் சிங்கள புத்தாண்டு தினமாகிய சித்திரைத்திங்கள் 14ஆம் திகதி கொலன்னாவை பிரதேசத்தின் மீதொட்டமுல்லையில் உள்ள குப்பைமேடு சரிந்து சுமார் 40 உயிர்கள் காவுகொள்ளப்படாமல் பாதுகாத்திருக்கலாம் அல்லவா! பத்தாண்டுகளுக்கு மேலாக இக்குப்பை மேட்டினால் ஏற்படப்போகும் பேராபத்துக்களை அம்மக்கள் எடுத்துக்கூறி தமது பாதுகாப்புக்காகப் போராடி வந்திருக்கிறார்கள். இருந்தபோதும் ஆட்சியில் இருந்த அரசு அதனை அரசியல்படுத்தி அரக்கத்தனம் கொண்டு அடக்கியது. அதன் விளைவு அம்மக்கள் குப்பைகளால் அநியாயமாகக் குப்பைக்குப் பலியாகி இருக்கிறார்கள்.

### ஐந்து வகைக் குப்பைகள்!

இப்போது குப்பைகளை ஐந்தாக வகைப்படுத்துவதோடு குப்பைகளை இலகுவாகத் தரம் பிரிப்பதற்கு ஒவ்வொரு வகை குப்பைக்கும் ஒவ்வொரு நிறத்தினை குறிப்பிட்டு இருக்கின்றார்கள். 1. மீளவும் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் கழிவுகள் (நீலம்) 2. உக்கும் கழிவுகள் (பச்சை) 3. மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியாத கழிவுகள் (கறுப்பு) 4. உலோக – கண்ணாடிப் பொருள் கழிவுகள் (சிவப்பு) 5. பிளாஸ்ரிக் கழிவுகள் (மஞ்சள்). இவ்வாறு கழிவுகளை பிரித்துச் சேர்த்தெடுப்பது அவற்றை பொருத்தமான முறையில் பயன்படுத்தவும் அப்புறப்படுத்தவும் உதவியாக இருக்கும் என்பதினால் ஆகும்.

இவ்வாறு ஒவ்வொருவகைக் கழிவுக்கும் அந்த அந்த நிறங்களைச் சுட்டும் பாத்திரங்களை அல்லது தொட்டிகளைப் பொது இடங்களில் வைத்திருப்பதை இப்போது காணக்கூடியதாக இருக்கின்றது. இச்செயற்பாடு பல பாடசாலைகளிலும், மருத்துவமனைகளிலும், பொது இடங்களிலும் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது போலத்தான் தெரிகின்றது. எனினும் குப்பைகளை குப்பைத் தொட்டிகளில் - பாத்திரங்களில் சேர்க்கும் பழக்கத்தை பாடசாலைகளில், அலுவலகங்களில் ஆரம்பிப்பது சமூக மட்டத்தில் சூழல் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்கப் பேருதவியாக அமையும்.

### ஐந்து வகையைவிட ஆபத்தான குப்பைகள்!

மேற்சொன்ன வகைப்படுத்தலை விடவும் இன்னுமொரு வகைப்படுத்தலையும் இக்காலத்தில் கவனத்திற்கொள்ளவேண்டி இருக்கின்றது. இந்நோக்கில் குப்பைகளை அடிப்படையில் 02 வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்போல் தோன்றுகிறது. ஒன்று, வெளிக்குப்பை கூளங்கள். இவை, மேற்கூறப்பட்ட குப்பைகளைப்போல வெளியே தெரிகின்றன. அவை பற்றியே மேற்சொன்ன பந்தி விபரிக்கின்றது. இரண்டாவது, மனக் குப்பை கூளங்கள்! இவை அனேகமாக வெளியே தெரிவதில்லை. வெளியில் உள்ள குப்பை கூளங்கள் ஆபத்தானவை. அதன் ஆபத்தினையே கொழும்பு கொலன்னாவை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசமான மீதொட்டமுல்லை மக்கள் கடந்த ஆண்டு தமிழ் சிங்கள புத்தாண்டு அன்று அனுபவித்தார்கள். இதனை நாடு முழுவதும் ஏன் உலகம் முழுவதும் கண்ணுற்றது.

ஆனால், அதனைப்போல் அல்லது அதனைவிட ஆபத்தானது காட்டுச் செடிகொடிபோல் மனிதர்களின் மனங்களில் வளர்ந்து கிடக்கும் குப்பை கூளங்கள் என்பதைப் பலர் அறிவதுமில்லை, உணர்வதுமில்லை! மனக் குப்பை கூளங்களை கொண்டிருப்பவரின் மனமும், சிந்தனையும், செயற்பாடுகளும், வாழ்வும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். அத்துடன் அடுத்திருப்பவர்களின் மனங்களை பல்வேறு வழிகளில் தாக்கி, காயப்படுத்தி, சித்திரவதைப்படுத்தி குற்றுயிராக்குவதையும் காணலாம். மனக்குப்பை கூளங்களின் ஒரு வடிவமே ‘கொசிப்’ (gossip) ஆகும். ஒன்றைக் குறித்தோ அல்லது ஒருவரைக் குறித்தோ உண்மைக்குப் புறம்பானவற்றை அவதூறாகக் கூறுவதையே “கொசிப்” என்ற ஆங்கில வார்த்தை சுட்டிநிற்கின்றது.

### புறம் கூறலைத் தவிர்த்தால் புனிதராகலாம்!

“அவதூறு பேசுதல் மிக அருவருப்பானது. தொடக்கத்தில் இனிப்புத் துண்டு போன்று மகிழ்வூட்டுவதாக இருக்கும். ஆனால் கடைசியில் உள்ளத்தைக் கசப்புணர்வினால் நிரப்பி நஞ்சூட்டிவிடும்!” என திருத்தந்தை பிரான்சிஸ் 2014 மாசித்திங்கள் 16ஆம் நாள் புனித பேதுரு சதுர்க்கத்தில் குழுமிய மக்கள் மத்தியில் குறிப்பிட்டிருக்கின்றார். “அவதூறு பேசுவதை விடாமுயற்சியுடன் தவிர்ப்போம் என்றால் நாம் புனிதர்களாவது உறுதி என நான் நம்புகிறேன்” என மிக ஆணித்தரமாக – மிக ஆழமாக எடுத்துக் கூறியுள்ளார் திருத்தந்தை. “05வது கட்டளை ஊடாகக் ‘கொலை செய்யாதிருப்பாயாக’ என அறிவுறுத்துகிறார் இயேசு. ஒருவருக்குக் கேடுவிளைவிக்கும் உண்மைக்குப் புறம்பான அவதூறான பேச்சு அவரின் பெயரைக் கெடுத்துவிடுகிறது. இதுவும் ஒருவரைக் கொன்றுவிடுகின்றது” என அழுத்திக் கூறுவதன் மூலம் அவதூறு பேசுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் எனவும் வலியுறுத்துகிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அடுத்தவரின் தவறுகளை - குற்றங்களை ஊதிப் பெருப்பித்து புள்ளியாக இருப்பதைப் புழுவாக மாற்றி, பின் புழுவை ஒருவாறாகப் பூச்சியாக்கி, அதன்பின் பெரிய பிரயத்தனம் செய்து, பூச்சியாக மாற்றியதைப் பூதமாக்கிக் காண்பிப்பதில் பலருக்கு மகா சந்தோசம். சிறு புள்ளிகூட இல்லாது. எதை எதையோ எல்லாம் சோடித்து ஒரு பூதத்தை ஆக்கும் ஆற்றல் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். உண்மையில் பூதம் என்பதே சூனியம்தானே!

### வேலை அற்றவர்களின் வேலை!

அடுத்தவருடைய பெயரைக் கெடுப்பது ஒரு பொழுதுபோக்காகக்கூட இன்றைய சூழலில் சிலருக்கு மாறிவிட்டது. இப்படிப்பட்டவர்களின் வாழ்வை, செயற்பாடுகளை ஆராய்ந்து பார்த்தால் இவர்களைப்பற்றி வெளிவராத பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வரும். மேலும் இப்படிப்பட்டவர்கள் அடிப்படையில் உருப்படியாகச் செய்வதற்கென்று ஒன்றும் இல்லாதவர்களாக இருப்பதனால் அடுத்தவர்பற்றி இல்லாத – பொல்லாத கதைகளைக் கட்டவிழ்த்துவிட்டு அவற்றைப்பற்றிக் கதைத்துக்கொண்டு திரிவதைத் தம் இயல்பாகக் கொண்டிருப்பார்கள். ஒருவகையில் இது அவர்களின் இயலாமையின் வெளிப்பாடே! காரணம், தங்களால் சாதிக்க முடியாததை அவன்/ள் சாதிக்கிறான்/ள், தங்களால் செய்யமுடியாததை செய்கிறார்கள்! எப்படி இவர்களால் முடிகிறது என்ற ஒருவகை பொறாமைகூட இவர்களை இவ்வாறான செயற்பாடுகளுக்கு இட்டுச்செல்லக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

### குப்பைக் குணம் யாரிடத்தில்!

சென் துறவிகள் இருவர் ஆறு ஒன்றைக் கடக்க நேரிட்டது. அவர்களில் ஒருவர் வயதானவர், மற்றயவர் இளையவர். இருவரும் ஆற்றைக் கடந்தபோது ஆற்றுவெள்ளம் திடீரென அதிகரித்தது. அப்போது அவர்களோடு ஆற்றைக் கடந்து கொண்டிருந்த ஓர் இளம் பெண் ஒருவர் நடு ஆற்றில் அந்தரித்தபோது அவளைக் காப்பாற்றி அவள் மறுகரை அடைய இளம் துறவி உதவினார். அவ் இளம் பெண்ணும் தன் உயிரைக் காப்பாற்றிய இளம் துறவிக்கு நன்றி தெரிவித்தாள். பின்னர் அவரவர் தத்தம் பயணம் தொடர்ந்தார்கள்.

வழியில் வயதான துறவி, ‘ஒரு துறவி இளம் பெண்ணைத் தொடலாமா?’ என தமக்குள் முணுமுணுத்தபடி சென்றுகொண்டிருந்தார். அவ்விளம் துறவியோ, “ஐயா, நான் அவளை ஆற்றங்கரையிலேயே விட்டுவிட்டேன்! நீங்கள் இன்னுமா அவளை சுமந்துகொண்டு வருகிறீர்கள்?” எனக் கேட்டபோது அவ்வயதான துறவி தன் நிலையுணர்ந்து வெட்கித்துப் போனார்.

### குப்பைகளைக் கொண்டாடுகிறவர்கள்!

உளநலன் பாதிக்கப்பட்ட ஒருவன் பயணப் பொதி ஒன்றில் பல பொருட்களை வைத்திருந்தான். அப்பொதியினுள் இருந்து ஏதோ ஒரு பொருளை எடுப்பதும், கையில் வைத்துப் பார்ப்பதும், அதனை ஏசுவதும், பின் அப்பொருளை பொதியினுள் வைப்பதும் என இச்செயலைத் தொடர்ந்து மீண்டும் மீண்டும் மீண்டும் செய்துகொண்டிருந்தான். இச்செயலைப் பார்த்தவர்கள் உண்மையில் அவன் மனநோயாளி என்பதைப் புரிந்துகொண்டார்கள். உண்மையும் அதுதான். குப்பைகளால் ஏற்படும் எல்லா வகைப்பட்ட குப்பைப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான வழி குப்பைகளை பொது வெளி, மன வெளிகளில் இருந்து அகற்றுவதும் அப்புறப்படுத்துவதும்தான்!

### தீர்த்துவிடவேண்டும், தொடர்ந்தால் ஆபத்து!

ஏதோவொரு காரணத்திற்காகத் தங்களுக்குப் பிடிக்காதவர்களை, தம்மீது வீணாகக் குற்றம் சுமத்தியவர்களை, தமக்கு ஏசியவர்களை, தம் கோபத்திற்கு உள்ளானவர்களைத் தம் நினைவுக்கு வருகிறபோது ஏசித் தீர்த்துவிடுவது ஒருவகையில் நல்லது. காரணம் உடலுக்கு ஒவ்வாதவை வாந்தியாக வெளிவருவதுபோல மனதில் அடைகாக்கக்கூடாத உணர்வுகளான வெறுப்பு, கோபம், பகைமை போன்றவை வெளியேறுவது கட்டாயமானது. அவ்வகையில் உள்ளத்திற்கு ஒவ்வாத, வேண்டாத உணர்வுகள் ஏச்சாக - பேச்சாக -பெரு மூச்சாக - பெரும் சத்தமாக வெளியேற்றுவது உளநலத்திற்கு நன்மைபயக்கலாம்.

ஆனால், அதனை எங்கு, எப்படிச் செய்வது என்பது மிகமிகமுக்கியமானது. உண்மையில், உளநலத்தோடு வாழ்பவர் ஒரு தடவை அல்லது ஓரிரு தடவைகளோடு இப்பேர்ப்பட்ட செயற்பாட்டை நிறுத்திக்கொள்வார். ஆனால் சிலர் மனநலன் பாதிப்புற்றவரைப்போல நினைக்கிற போதெல்லாம் ஏசுபவராக - பேசுபவராக இருப்பாரென்றால் அவரும் மனநலன் பாதிப்புற்ற நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறார் என்பதே அடையாளமாகும். இப்படிப்பட்டவர்களின் செயல் வாந்தியெடுத்ததை மீண்டும் உண்பது போன்ற ஒன்றாகவே மாறிவிடும். இப்பேர்ப்பட்டவர்கள் உளவளத் துணையை நாடுவது அவருக்கும், குறிப்பாக, அவரைச்சுற்றி இருப்பவர்களுக்கும் பெரும் ஆசீர்வாதமாக அமையும்.


## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். - **மன்னா நிர்வாகம்.**

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 52வது சமூகத்தொடர்பு உலக நாள் செய்தி

இறைவன் நமக்காக வகுத்துள்ள திட்டத்தின் ஒரு பகுதி, சமூகத் தொடர்பு என்றும், நாம் உடன்பிறந்தோர் என்ற உணர்வைப் பெறுவதற்கு மிக அடிப்படையான வழி, தொடர்புகள் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த ஜனவரி 24ஆம் திகதி வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் கூறியுள்ளார்.

இவ்வாண்டு சிறப்பிக்கப்படும் 52வது சமூகத்தொடர்பு உலக நாளுக்கென ஜனவரி 24, புதனன்று திருத்தந்தை வெளியிட்டுள்ள செய்தி, "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32) என்ற தலைப்பையும், "பொய்ச் செய்திகளும், அமைதிக்காக இதழியலும்" என்ற உபதலைப்பையும் கொண்டுள்ளது. மிகத்துரிதமாக மாறிவரும் சமூகத்தொடர்புகளும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் "பொய்யான செய்திகளை"ப் பரப்பிவருவதைக் காண்கிறோம் என்று இச்செய்தியின் தொடக்கத்தில் கவலையை வெளியிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், "பொய்ச்செய்திகள்" என்பதைக் குறித்து நான்கு பகுதிகளில் தன் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளார்.

1. "பொய்ச் செய்திகளில்" உள்ள "பொய்மை" என்ன?
2. "பொய்ச் செய்திகளை "எவ்விதம் அடையாளப்படுத்துவது?
3. "உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32)
4. அமைதியே உண்மையான செய்தி என்ற நான்கு பிரிவுகளில் திருத்தந்தை தன் கருத்துக்களைத் தொகுத்து வழங்கியுள்ளார்.

உண்மைச் செய்திகளைப் போலவே வேடமிட்டு வரும் பொய்ச் செய்திகள், மக்களுக்குப் பழக்கமான முற்சார்பு எண்ணங்களைச் சுமந்து வருவதால், அவை மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது என்றும், அதிகாரப்பூர்வமான மறுப்புக்கள் சொல்லப்பட்டாலும், பொய்யான செய்திகள், மக்களிடையே விரைவில் ஊடுருவிச் செல்கின்றன என்றும் திருத்தந்தை தன் கவலையை வெளியிட்டுள்ளார்.

சமுதாயத்தில், புழக்கத்தில் இருக்கும் டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி, இத்தகைய செய்திகளை எவ்வித தயக்கமும் இன்றி, மக்கள் பரப்பிவருவதால் பொய்யான செய்திகளின் வேடம் கலைக்கப்படுவதில்லை என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

பொய்ச்செய்திகளின் வேடத்தைக் கலைப்பது எளிதான செயல் அல்ல என்றாலும், பல கல்விக் கூடங்கள், அத்தகைய பணியைச் செய்து வருகின்றன என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை, உண்மையை உள்ளங்களில் பதிக்கும் கல்வியில் இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்.



உண்மை என்பது ஒருவர் தன் வாழ்வில் தொடர்ந்து தேடிவரும் விடயம் என்பதைத் தன் செய்தியில் வலியுறுத்தும் திருத்தந்தை, பொய் எப்போதும், பிளவுகளையும் மோதல்களையும் உருவாக்கி மக்களைப் பிரிக்கும் என்றும், உண்மை மக்களை ஒருங்கிணைக்கும் என்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

பொய்மையை முறியடிக்க வெறும் செயல்திட்டங்கள் மட்டும் போதாது, மாறாக, உண்மையை நோக்கி மக்களை ஒன்றிணைக்க வேண்டும் என்று கூறியுள்ள திருத்தந்தை, சமூகத்தொடர்புகள் இந்த உண்மையில் மக்களை இணைக்கும் பணியைச் செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்.

இலாபம் ஈட்டும் நோக்கத்துடன் வெறுப்பையும், வன்முறையையும் வளர்க்கும் சொல்லாடலைப் பயன்படுத்தும் இதழியலுக்கு ஒரு மாற்றாக, உண்மையை, அன்பைப் பறைசாற்றும் இதழியலை வளர்ப்பது கிறிஸ்தவ சமூகத்தொடர்புக் கலையின் இலக்கணம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

அமைதியின் கருவியாய் என்னை மாற்றும் என்று அசிசி நகர்ப் புனித பிரான்சிஸ் உருவாக்கிய செபத்தைத் தழுவி, "எங்கே கத்துதல் உள்ளதோ, அங்கு கேட்கும் பழக்கத்தை வளர்ப்போம். எங்கே குழப்பம் நிலவுகிறதோ, அங்கே நல்லிணக்கத்தை உருவாக்குவோம்" என்ற வார்த்தைகளில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 52வது சமூகத்தொடர்பு உலக நாளுக்கென வெளியிட்டுள்ள செய்தியின் இறுதியில் ஒரு செபத்தை வடிவமைத்துள்ளார்.

# கிறிஸ்தவ வாழ்வை இயக்கும் சக்திவாய்ந்த கருவி அன்பு

## திருத்தந்தையின் தவக்காலச் செய்தி குறித்து கர்தினால் பீட்டர் டர்க்சன்



கிறிஸ்தவ வாழ்வை இயக்கும் சக்திவாய்ந்த கருவி அன்பு என்பதையும், தினசரி வாழ்வில் அன்புக்கு எதிராக எழும் தடைகளை அகற்றுவது எவ்விதம் என்பதையும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் தவக்காலச் செய்தியில் கூறியுள்ளார் என்று ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள், கூறினார்.

பெப்ரவரி 14 புதனன்று துவங்கவிருக்கும் தவக்காலத்திற்கெனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எழுதியுள்ள தவக்காலச் செய்தியை பெப்ரவரி 6ஆம் திகதி செய்தியாளர்கள் கூட்டத்தில் வெளியிட்டபோது அவர் இவ்வாறு கூறினார். இன்றைய உலகில் நாம் சந்திக்கும் போலி இறைவாக்கினர்கள் குறித்து திருத்தந்தை விடுத்துள்ள எச்சரிக்கைகளைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டிய கர்தினால் டர்க்சன் அவர்கள், தவக்காலத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்படும் செபம், உண்ணாநோன்பு மற்றும் தர்மச் செயல்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் திருத்தந்தை தன் செய்தியில் கூறியுள்ளார் என்று எடுத்துரைத்தார்.

மனிதர்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகள், போர்களால் மட்டும் உருவாவதில்லை, எங்கெல்லாம் மனித மாண்பு அழிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் வன்முறைகள் தொடர்கின்றன என்பதைத் திருத்தந்தை தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளதை, கருதினால் டர்க்சன் அவர்கள் குறிப்பிட்டார்.

புதிய வழி நற்செய்தி அறிவிப்புப்பணி திருப்பீட அவையின் பிரதிநிதியாக அக்கூட்டத்தில் பங்கேற்ற அருள்பணி Krzysztof Marcjanowicz அவர்கள், "ஆண்டவருக்காக 24 மணி நேரங்கள்" என்ற முயற்சி, உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தவக்காலத்தில் நிகழ்ந்து வருவதைக் குறித்துப் பேசினார்.

# புனித பூமியில்

## திருப்பயணிகளின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிப்பு

எருசலேமுக்கும், புனித பூமியின் ஏனைய புனிதத் தலங்களுக்கும் வரும் திருப்பயணிகளின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்து வருவதாக புனித பூமி கிறிஸ்தவ தகவல் மையம் தெரிவிக்கிறது. 2016ஆம் ஆண்டிலிருந்து திருப்பயணிகளின் எண்ணிக்கை பெரிய அளவில் அதிகரித்து வருவதாகக் கூறும் இம்மையம், இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 770 குழுக்கள் வழியாக 26,000 திருப்பயணிகள் புனித பூமிக்கு வந்துள்ளதாகக் கூறுகிறது.

2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11,000 பேராக இருந்த திருப்பயணிகளின் எண்ணிக்கை, 2017ஆம் ஆண்டில் 16,000 ஆகவும் இவ்வாண்டு ஜனவரியில் 26,000 ஆகவும் உயர்ந்துள்ளது. 2017ஆம் ஆண்டில் 36 இலட்சம் திருப்பயணிகள் வந்துள்ளமை அதற்கு முந்தைய ஆண்டைவிட 23 விழுக்காடும், 2015ஆம் ஆண்டைவிட 29 விழுக்காடும் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு எருசலேம் மற்றும் புனித பூமியின் ஏனைய திருத்தலங்களுக்கும் வந்த திருப்பயணிகளின் எண்ணிக்கையில், அமெரிக்க ஐக்கிய நாட்டின் திருப்பயணிகள் முதலிடத்திலும், இரஷ்யர்கள் இரண்டாம் இடத்திலும், பிரெஞ்சு நாட்டவர், ஜெர்மானியர், பிரித்தானியர், இத்தாலியர் என அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளனர்.

# திருத்தந்தை நற்செய்தியின் நறுமணத்தை நமக்கு வழங்கி வருகின்றார்

## திருத்தந்தைக்கு தியானம் வழங்கும் போர்த்துக்கல் அருட்தந்தை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நற்செய்தியின் நறுமணத்தைப் புதிதாக நமக்கு வழங்கி வருகிறார் என்று அருள்பணி. ஜோசே ரொலன்டினோ மென்டொன்கா (Jose Tolentino Mendonca) அவர்கள் வத்திக்கான் வானொலிக்கு அளித்த பேட்டியொன்றில் கூறியுள்ளார்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் வத்திக்கான் அதிகாரிகளும் பெப்ரவரி 18ஆம் திகதி முதல் 23ஆம் திகதி முடிய மேற்கொள்ளவிருக்கும் ஆண்டுத்தியானத்தை வழிநடத்த இவ்வாண்டு பணிக்கப்பட்டிருக்கும் அருள்பணி. மென்டொன்கா அவர்கள், திருத்தந்தையின் தலைமைப்பணி தூய ஆவியாரால் வழிநடத்தப்படுவதை நாம் எளிதில் உணரலாம் என்று தன் பேட்டியில் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு தான் வழிநடத்தும் தியானம், 'கிறிஸ்துவின் தாகம்' என்ற தலைப்பில் நடைபெறும் என்று கூறிய அவர் உலக வாழ்வில், அன்பு, உறவு, மாண்பு என்ற பலவற்றைத்




தேடித் தாகம் கொள்ளும் மனிதர்கள், இறைவன்மீதும், அயலவர்மீதும் தாகம்கொள்ள வேண்டும் என்று தன் பேட்டியில் குறிப்பிட்டார். விவிலிய ஆசிரியராக, கவிதைகள் எழுதுபவராகப் பணியாற்றும் போர்த்துக்கீசிய அருள்பணியாளராகிய இவர் லிஸ்பன் நகரிலுள்ள போர்த்துக்கீசிய கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் உதவி அதிபராகப் பணியாற்றிவருகிறார்.

# புனிதர்களின் பாதையில்

## புனித ஜெரோம் எமிலியானி

*(கைவிடப்பட்டோரின் பாதுகாவலர்)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

புகழ்பெற்ற வெனிஸ் நகரில் ஏஞ்சலோ எமிலியானி மற்றும் எலோநோரே மரோசெனி தம்பதியினரின் அருந்தவப்புதல்வராக 1481இல் பிறந்தவர் ஜெரோம் எமிலியானி. துடிப்புமிக்க இளைஞராகத் தமது 15ஆம் வயதில் இராணுவத்தில் சேர்ந்தார். வெனிஸ் நகரின் கட்டளைத்தளபதியாக உயர்ந்தார். தமது சக்தி, திறமை மட்டுமே போதும், கடவுள் தனக்கு அப்பாற்பட்டவர்தான் என்று வாழ்ந்து வந்தார்.

யாரும் எதிர்பாராத சூழலில் வெனிஸ் முற்றுகையிடப்பட்டது. மக்களைப்போலவே இராணுவ வீரர்களும் எதிர்த்து நிற்க முடியாமல் ஓட்டம் பிடித்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுள் ஜெரோமும் ஒருவர். தளபதியாக பலரைக் கைது செய்தவர் இன்று கையில் விலங்குகளுடன் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்த காலங்களில் தமது கடந்தகால வாழ்வு, தமது மனநிலை அனைத்தையும் அலசி ஆராய்ந்தார். தாம் செய்த தவறுகளை எண்ணிப்பார்த்தார். இறைவனைவிட்டு தாம் தொலைதூரம் வந்துவிட்டதை உணர்ந்தார். மனம் தெளிந்தவராகச் சிறையிலேயே ஒறுத்தல் முயற்சிகளுடன் இறைவனின் அருள்வேண்டிச் செபிக்க ஆரம்பித்தார்.

ஒருநாள் செபித்துக்கொண்டிருந்தபோது, அன்னை மரியா நேரில் வந்து கதவுகளைத் திறந்துவிட அற்புதமான புதுமையாக, சிறையிலிருந்து வெளியே வந்தார். வந்தவர் நேரே அருகில் இருந்த அன்னை மரியா ஆலயத்திற்குச் சென்றார். தன்னைப் பிணைத்திருந்த சங்கிலிகளை ஆலயத்தில் வைத்துவிட்டு, சிறையில் இருந்தபோது நேர்ந்துகொண்ட நேர்ச்சையைச் செலுத்தி நன்றிச் செயல்கள் வழியாக இறைவனின் அன்பை எல்லோருக்கும் வெளிப்படுத்தினார். குருத்துவப் பயிற்சிபெற்று 1518ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். மருத்துவமனைகளையும் ஏழைகளின் குடிசைகளையும் தமது வசிப்பிடமாக்கிக்கொண்டு அவர்களுக்காகப் பணியாற்றினார்.

இந்நிலையில், 1528இல் எங்கும் பிளேக் என்னும் தொற்று நோய் பரவி எண்ணற்றோர் இறக்க ஆரம்பித்தார்கள். நோயுற்றவர்களுடன் ஜெரோம் தன்னை இணைத்துக்கொண்டார். இவரின் கால்கள் படாத இடமே இல்லை என்னும் அளவுக்கு எங்கும் சென்று அவர்களுக்காகப் பணியாற்றினார்.


அதிலும் குறிப்பாக ஆதரவற்றவர்கள்மீது சிறப்புக் கவனம் செலுத்தினார். மருந்து கொடுப்பது, ஆறுதலாகப் பேசுவது, நோயில்பூசுதல் கொடுப்பது, ஒப்புரவு அளிப்பது, இறந்தவர்களை அடக்கம் செய்வது என்று மனிதநேயப் பணியாளராக வாழ்ந்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

## கவிஞர் செபமாலை மொத்தம் போல் கவிதைகள்




### நித்தியத்தின் தவப்பாதை நெறி

உடலெடுத்த மனிதரெல்லாம் உறுதி வாக்கு
ஒளிபெறவே உள்ளத்தில் உணர்வு வேண்டும்
திடமுள்ள விசுவாசச் செயலி னாற்றல்
சிந்தனைக்குத் தீர்க்கமுள்ள தேவ நேசம்
இடம்பெறவே நம்பிக்கை எழும்ப வேண்டும்
இதயத்தில் மெய்ஞ்ஞான எழுச்சி கொள்ள
அடக்கமுள்ள அமைதிநிலை அன்பு வாச
அருள்பெறவே ஒப்புரவாய் ஒடுங்கல் நன்றே.

வேண்டுமெமக் கிறையன்பு விருத்தி கொள்ள
விசுவாச நிலைக்களத்தில் மிகுந்தபக்தி
ஆண்டருள ஆன்மாவில் அடக்க முள்ள
அகங்கார எண்ணமற்ற அமைதி யின்பம்
மாண்டாலும் வானுலகில் வாழ்வு மேவ
மனக்கோவில் குடிகொண்ட மறையோன் யேசு
நீண்டதவம் மேற்கொண்டார் நேர்மை என்றால்
நித்தியத்தின் தவப்பாதை நெறியைக் காண்போம்


அன்பொளியே விளங்குதற்காய் அருந்த வத்தால்
அருள் பெறவே வனமேகி அடைந்தா ரன்றே
இன்றுதவம் எம்முளத்தில் இருத்தி நன்றாய்
இதயமலர் ஒளிபெறவே இலக்கு வைத்தே
தன்னுயிர்போல் மற்றவரைத் தாழ்ச்சி யோடே
தயவன்பு கொள்ளுதலுந் தவமே அன்றோ
என்னுடலை ஒறுத்தலுமே இன்பமன்றோ
இதில் நன்மை நிறையவுண்டே இறைவனுண்டோ

### அமைதி எமக்கு வந்திடுமோ?




சிந்தை யடக்கிச் சிலநிமிடந்
தியான நிலையி லமர்ந்திருந்தே
எந்தை பரனின் இறைமகனார்
இனிய யுருவத் திருவுருவை
அந்தி சந்தி மனக்கண்முன்
அழியா திருத்தி யுச்சரித்தால்
சொந்த மாகக் கலந்திடுவோம்
தூயோர் நிலையை அடைந்திடுவோம்

நெஞ்சம் இருளாய் நிறைந்திருக்க
நினைவே வினைகள் தொடர்ந்திருக்க
வஞ்சம் பதுங்கி வலைபோட
வாயும் முகமும் வேஷமிட
பஞ்சாய் பறக்கும் பருவமதை
பாழும் நினைவில் அலையவிட்டால்
அஞ்சா இன்பங் கிடைத்திடுமோ?
அமைதி எமக்கு வந்திடுமோ?




உள்ளக் கோவில் குடியிருக்கும்
உயிராந் தெய்வ யேசுவுடன்
கள்ளங் கபட நினைவகற்றிக்
கருத்தி லிருத்தி யுறவாட
முள்ளின் முனைகள் பதிந்த முகம்
முழுதுங் குருதி படிந்தவுடல்
எள்ளி நகைக்கும் எம்வாழ்வும்
எடுத்துக் காட்டி மொழியாதோ?



ஞான ஒளியே பிறந்துவிட்டால்
நமக்குள் அமைதி நிலைத்துவிடும்
வான இறைவன் குடியிருப்பான்
வாழ்வின் செயலிற் கலந்திடுவான்
தான தரும முயற்சியெல்லாம்
தவத்தின் செபத்தால் நிறைவாகும்
மோன உளத்தில் இறையாவி
மொழிவாள் என்றே மொழிந்தாரே

# கொஞ்சம் சிரிங்க



பக்கத்து வீட்டுக்காரன் காய்ச்சலல இருக்கான்னு பாக்கப்போனேன்......
“என்னையா.... உடம்பு இப்படி கொதிக்குது?” ன்னு கேட்டா
“நெருப்புடா......” “கபாலிடா....” ங்குறான்.
நான், “சாவுடா....”ன்னு சொல்லிட்டு வந்துட்டன்.

..................................

**மோகன் :** உங்கள் மனைவி, ஏன் எப்போதும் கோபமாகவே இருக்கிறாங்க?
**சோமு:** கோபத்தில்கூட நீ அழகா இருக்கிறாய் என்று ஒரு நாள் தெரியாமல் சொல்லிட்டேன் அதுதான்.
**மோகன்:** ???

..................................

ஒரு வயதானவர் சலூனுக்குச் சென்றார். அவர் தலையில் உள்ள 8 முடியைப் பார்த்த சலூன்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. ‘முடியை எண்ணனுமா?’ வெட்டனுமா,’ என்று கேட்டார். அதற்கு அந்த வயதானவர், ‘எட்டு முடிக்கும் கலர் (டை) அடிக்கனும்’’ என்றார்.

..................................

**நீதிபதி:** பட்டப் பகலல ஏன் திருடினாய்?
**திருடன்:** தொழில்னு வந்துட்டா ராத்திரி, பகல்னு பார்க்க முடியுமா... எஜமான்!

**கணவன்:** கலண்டரில என்ன பார்க்கிறாய்?
**மனைவி:** பல்லி விழும் பலன்.
**கணவன்:** கொண்டா, நான் பார்க்குறேன், அது சரி, பல்லி எங்க விழுந்தது?
**மனைவி:** நீங்க சாப்பிட்ட சாம்பாறில..

..................................

**நீதிபதி:** பார்த்தா அப்பாவியா தெரியிறாய்?
நீயா பிக்பொக்கெட்? நம்பவே முடியலையே?
**குற்றவாளி:** உங்களை மாதிரித்தாங்க எல்லோரும் ஏமாந்துடறாங்க...
**நீதிபதி:** ???

..................................

**மகன்:** அம்மா, உன்னை நினைச்சா எனக்கு ரொம்ப அழுகையா வருகுது.
**தாய்:** ஏனப்பா... என்னாச்சு?
**மகன்:** ஒரு நாள் தெரியாமல் மெகா சீரியல் பார்த்திட்டேன். அதைப் பார்த்ததால தற்கொலை செய்திடலாம்னு தோணிச்சு. ஆனா நீ தினமும் பார்க்கிறியே....?

# மன்னா விளம்பரப் பலகை

எதுவும் இல்லாதபோது சமாளிக்கும் திறமையும்... எல்லாம் உள்ளபோது நீ நடந்துகொள்ளும் முறையும்... வெற்றியைத் தீர்மானிக்கிறது...!

நீ தலைக்கனத்தைச் சுமந்தால், என்றோ ஓர்நாள் தன்மானத்தை நீ இழக்க நேரிடும்.

........................

இடர்ப்பாடுகள் ஒருவனுக்கு உண்மையான நண்பர்களை எடுத்துக்காட்டும்!

........................

இன்பம் வரும்போது அதைப்பற்றிச் சிந்தனை செய்யாதே.. அது போகும்போது அதைப்பற்றிச் சிந்தனை செய்!!

........................

போராடித் தோற்றுப்பார்; ஜெயித்தவனும் உன்னை மறக்கமாட்டான்.

பேசிப்பயனில்லை என்னும்போது மௌனம் சிறந்தது, பேசுவதிலே அர்த்தம் இல்லை என்னும்போது பிரிவும் சிறந்தது.

வாழ்க்கையில் எல்லாம் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்காதே..! சில விஷயங்கள் கிடைக்காமல் இருப்பதே வாழ்க்கைக்கு நல்லது..!!

........................

‘இல்லை’ என்று ஒருபோதும் சொல்லாதே. ‘என்னால் இயலாது’ என்று ஒருநாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன்.

........................

கோழையும் முட்டாளுமே இது என் விதி என்பான்... ஆற்றல் மிக்கவனோ ‘என் விதியை நானே வகுப்பேன்’ என்று கூறுவான்.

கொடுக்கும் சக்தி உள்ள மட்டும் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். அது ஆயிரம் மடங்காகப் பெருகி உங்களிடமே திரும்பிவரும்.

# மருத்துவக் குறிப்புக்கள்



☞ இரவில் மூக்கடைப்புக்கு மின்விசிறியின் நேர் கீழே படுக்க வேண்டாம். சற்று உயரமான தலையணையைப் பயன்படுத்தவும். மல்லாந்து படுக்கும்போது மூக்கடைப்பு அதிகமாகும். பக்கவாட்டில் படுக்கவும். காலையில் பல் தேய்க்கும்போது நாக்கு வழித்து விட்டு, மூன்று முறை மூக்கைச் சிந்தவும், சுவாசப் பாதையைச் சுத்தப்படுத்த நமது முன்னோர் காட்டிய வழி இது.

☞ வெண்டைக்காயை உணவில் அடிக்கடி சேர்த்துவந்தால், நரம்புகள் வலிமை பெறும். மூளையின் இயக்கத்தைச் செம்மைப்படுத்துவதுடன் நல்ல ஞாபகசக்தியையும் உண்டாக்கும்.

☞ சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீரில்விட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் சாப்பிடுவதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.

☞ வெள்ளைப் பூசணிக்காயை பூந்துருவலாகத் துருவி, உப்பு சேர்த்து இஞ்சி, பச்சை மிளகாய், கொத்தமல்லி, கருவேப்பிலை, கடுகு, தாளித்து தயிரில் கலந்து தயிர்ப்பச்சடியாகச் சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் ரத்தக்கொதிப்பு, கொலஸ்ட்ரால் தலைச்சுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.

☞ கை சுளுக்கு உள்ளவர்கள் நீரில் மிளகுத் தூளும், கற்பூரத்தையும் போட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைத் துணியில் நனைத்துச் சுளுக்கு உள்ள இடத்தின்மீது போடுங்கள், அல்லது டர்ப்பன்டைன் எண்ணெயைத் தடவினாலும் சுளுக்கு விட்டுவிடும்.

☞ அறுகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும், உலர் திராட்சைப் பழத்தை வெதுவெதுப்பான தண்ணீரில் அரை மணி நேரம் ஊறவைத்து காலையில் அருந்தினால் மாதவிடாய்க் கோளாறுகள், இதயநோய் தீரும்.

☞ புடலங்காயின் இலைச்சாறு, காலையில் குழந்தைகளுக்குத் தருவதால் கக்குவான், இருமல் குணமாகும். மலச்சிக்கல் நீங்கும்.


☞ புடலங்காய் சமைத்து உண்பதால் தேவையில்லாத உடல் பருமன் குறையும்.

☞ கரட் சாறும் தேனும் பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாந்தி மட்டுப்படும். எலுமிச்சை பழச்சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும். கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்துவிடும்.

☞ நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சிச் சாற்றைச் சேர்த்துக் குடித்துவந்தால் நல்ல பலன் கிடைக்கும். எள்ளில் இருந்து வரும் நல்லெண்ணெய்யைக் கொடுக்க உடல் இளைத்துக் காணப்படுபவர்கள் தேறி, உடல் எடை அதிகரிக்கும்.

# சமையல் குறிப்பு

## தக்காளி சோஸ்



### தேவையானவை:

தக்காளி - ஒரு கிலோ
மிளகாய்த்தூள் - ஒரு தேற்கரண்டி
சர்க்கரை - 2 மேசைக்கரண்டி
உப்பு - அரை தேற்கரண்டி
இஞ்சி - சிறு துண்டு
பூண்டு - 3 பல்
பட்டை - சிறிதளவு
கிராம்பு - சிறிதளவு
எலுமிச்சைப்பழச்சாறு - 2 மேசைக்கரண்டி



### செய்முறை :

தக்காளியைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். நல்ல கெட்டியான தக்காளியாக வாங்கிக்கொள்ளவும். அப்போதுதான் சாஸ் கெட்டியாக நன்றாக இருக்கும்.

பூண்டு, இஞ்சியைத் தோல் நீக்கி நறுக்கிக்கொள்ளவும். குக்கரில் தக்காளி, மிளகாய்த்தூள், உப்பு, சர்க்கரை, ஒரு டேபிள் ஸ்பூன், இஞ்சி, பூண்டு, பட்டை, கிராம்பு சேர்த்து குக்கரை மூடி 2 விசில் சத்தம் வரை வேகவிடவும்.

வெந்தவுடன் குக்கரை திறந்து தக்காளியை ஒரு கரண்டியால் நன்றாக மசித்துவிடவும், இதை ஒரு பெரிய கண் உள்ள வடிகட்டியில் ஊற்றி வடிகட்டிக் கொள்ளவும். வடிகட்டிய தக்காளி விழுதை ஒரு பாத்திரத்தில் ஊற்றி மீதமுள்ள சர்க்கரையைச் சேர்த்து அடுப்பில் வைத்து நன்றாகக் கைவிடாமல் கிளறவும்.

சாஸை ஒரு தட்டில் சிறிது ஊற்றினால், அது ஒட்டாமல் கெட்டியாக இருக்க வேண்டும். அதாவது நீர்க்க இருக்கக் கூடாது. இதுவே பதம், இந்தப் பதம் வந்தவுடன் பிறகு அடுப்பிலிருந்து இறக்கி எலுமிச்சைப்பழச்சாறு சேர்த்து நன்றாகக் கலக்கி ஆறியவுடன் சுத்தமான பாட்டிலில் ஊற்றி மூடிவைக்கவும்.



# மனநலம் காப்போம் !

தேன்மொழி நிரோஷன் எழுதும்

சமூக உளவியல் தொடர் - 3

## மனநலம் காக்க மன அமைதி பேணுவோம்.....!

கடிகார முள்ளின் வேகத்திற்கு நம்மையும் மாற்றிக்கொண்டு ஓடவேண்டிய இக்காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் எண்ணற்ற சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும் மன அமைதியை இழக்கின்ற தன்மைகளுக்கும் ஆளாகவேண்டி இருக்கின்றோம். எமது உளநலம் என்பது நாம் எந்த அளவுக்கு எமது மனத்தை ஒருநிலையில் அமைதிநிலையில் வைத்திருக்க முடிகிறது என்பதைவைத்தே அளவிடமுடியும்.

அலைபாயும் நிலையில்லா மனத்தோடு காலை எழுந்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும்வரை பம்பரமாய் சுழலவேண்டி உள்ளது. பணம், பட்டம், பேர், புகழ், சொத்து, சுகம், பதவி போன்ற எல்லாம் இருக்கின்றன. ஆனால் அமைதிதான் இல்லை என்று மனஅமைதியை இன்று பெரும்பாலும் வெளியில் தேடிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் அது நம் மனதின் உள்ளேதான் இருக்கின்றது என்பதை யாரும் உணருவதில்லை. எம் மனதின் இயல்பே அமைதிதான். எல்லா உயிருள்ள ஜீவராசிகளும் தமது உடலியல் தேவைகளைப்பூர்த்தி செய்யவே அலைகின்றன. ஆனால் சமூகப்பிராணியான மனிதன் மட்டும் சமூகத் தேவைகளுக்கு முதலிடம் கொடுத்து வருகின்றான். நாளுக்குநாள் தேவைகளை விரித்துக்கொண்டு செல்கின்றான்.

ஆசைகள் தேவைகளாக வடிவெடுத்து மனிதனை இருக்கவிடாமல் செய்கின்றன. தேவைகளைப் பூர்த்திசெய்ய ஓடி ஓடி அலைந்தும் இறுதியில் அதை அனுபவிக்கக்கூட முடியாமல் நோயாளியாகி காலமும் முடிந்துபோகின்றது. தேவைகளை சுருக்கிக்கொண்டால் மட்டுமே மனம் அமைதிநிலைக்கு வரும். அன்றேல் எல்லையில்லா ஆசைகளும், தேவைகளும் மனதை அலைபாய வைக்கும்.

நாம் எல்லோரும் கடந்த காலத்தைப் பற்றியும், எதிர்காலத்தைப் பற்றியும் அதிகம் சிந்திக்கப் பழகிவிட்டோம். அனால் இப்பொழுது நடக்கும் நிகழ்காலத்தைப்பற்றிச் சிந்திக்க, அந்த நிகழ்காலத்திலேயே வாழ, நம் மனங்கள் மறுக்கின்றன. ஆனால் வாழ்வில் நிகழ்காலம் மட்டும்தான் நிச்சயம் என்பதை மறந்துபோகின்றோம். கடந்த காலம் கடந்துவிடும்; எதிர்காலம் நிச்சயமில்லை. இன்றைய நிகழ்காலம் நாளைக்குக் கடந்தகாலமாக மாறுகின்றது. இன்றைய நிகழ்காலம்தான் வருங்காலத்தை நிர்ணயம் செய்யப்போகின்றது.

எனவே முக்காலத்திலும் மனஅமைதியோடு வாழ்வை சுமூகமாகக் கொண்டுசெல்ல வேண்டுமானால் நிகழ்காலத்தில் வாழப் பழகவேண்டும். மனம் ஒரு குரங்கு என்று சொல்வது மிக மிக உண்மை. குரங்குகளைப் பார்த்தால் அவை ஒரு இடத்தில் ஒரு நேரம் நிலைத்து நிற்காது. ஓடும், குதிக்கும், பாயும், கிளைக்குக் கிளை தாவிச் செல்லும். எதையாவது சப்பும், துப்பும். இவ்வாறு எதையோ இடைவிடாது செய்துகொண்டே இருக்கும். அதேபோலதான் நமது மனங்களும்! ஒரு பிரச்சினை தீர்ந்தால் அடுத்த பிரச்சினை.....! தேவையற்ற அளவில்லாத ஆசைகள் .... தேவைகள் .... ! தமது வேலையைத் தவிர மற்றவரின் விடயங்கள் என்று மாறி மாறி எதையோ அசை போட்டுக்கொண்டேதான் இருக்கும். இவ்வாறு இருப்பின் எவ்வாறு மனம் அமைதி நிலைக்குச் செல்லமுடியும். தூங்கினாலும் நிம்மதி இல்லை. தூக்கத்தில் கெட்ட கனவுகளின் தொல்லை. நிம்மதியே இல்லை.

### மன அமைதிக்கு ஆப்பு வைக்கும் காரணிகள்

இன்று ''வேல வேல வேல வேல வேல ஆம்பளைக்கும் வேல, பொம்பளைக்கும் வேல எத்தனையோ வேல எப்பவுமே வேல'' என்று, இருக்க எழும்ப நேரமில்லாமல் அலைகின்றோம். சிறுசு முதல் பெருசு வரை எல்லாருமே பிசி! யாரிடமும் எந்த விடயத்தையும் அமைதியாகக் கேட்டுப் பெறமுடியாது. இந்நாளில் அமைதியாகப் பேசுவோரைக்காட்டிலும் ஆக்ரோசமாக அவதி அவதியாக ஆலாய்ப்பறந்துகொண்டு அங்க கொஞ்சம் இங்க கொஞ்சம் மிச்சம் பிடித்து அரைகுறையாகப் பேசுவோரே அதிகம். அந்த அளவுக்கு இந்த உலக உருண்டை எம்மை உருட்டிப் போட்டுவிட்டது. நாமும் அஞ்சுக்கும் பத்துக்கும் (ஐந்து பத்து ரூபா அல்ல ஐந்து பத்து லட்சம் கோடி) அடிபட்டுக்கொண்டு இருக்கின்றோம். பேருக்கும், புகழுக்கும் நாய் படாப்பாடெல்லாம் பட்டு, நஞ்சு பிஞ்சு தொஞ்சு கடைசியில் மிஞ்சிய மனஅழுத்தத்தை தோளில் சுமந்துகொண்டு, அந்தச் சுமை தோளையும் ஆளையுமே அழுத்தும் நிலை ஏற்படுகின்றது. கடைசியில் அமைதி தேடி அலையும் நெஞ்சங்களாக, ''நிம்மதி என்ன விலை சொன்னால் லட்சம் என்ன கோடி கொடுத்தாலும் வாங்குவேன்'' என்று பாடிக்கொண்டு திரிகின்றோம்.

அடுத்த காரணி ரீ.வி. எங்கள் மூளையை இறுக்கும் சாவி. அந்தச் சாவிகொண்டு சீரில்லா சீரியல்களையும், உறவுகளைச் சீரழிக்கும் உதவாத காட்சிகளையும், நிஜ வாழ்க்கைக்கு ஒவ்வாத கற்பனை வாழ்க்கை முறைகளையும் பார்த்துக்கொண்டும் எங்களது மனங்களில் நாங்களே நஞ்சை விதைத்துக்கொண்டும் எம் வாழ்விலும் பல நாடகங்களை நடாத்திக்கொண்டும் மந்திர தந்திரங்களை சர்வசாதாரணமாய் ஏற்றுக்கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இன்னும் நாம் நம்மிலும் பிறரிலும் தேவையற்ற எதிர்பார்ப்புக்களைக் கொண்டு வாழ்கின்றோம். அதை அடைய முடியுமா என்ற சந்தேகமும், அதை அடையும் தகுதி என்னிடம்



உள்ளதா என்ற பயமும், இந்த எதிர்பார்ப்பை அடைந்துகொள்ள நான் எவ்வாறான தந்துரோபாயங்களை கைக்கொள்ளப் போகின்றேன்? என்பனபற்றி யோசித்து யோசித்தே எமது மன நிம்மதியை இழந்து விடுகின்றோம். இன்று மாணவர்களை எடுத்துக்கொண்டால் அதிகம் படிக்க வேண்டும், ஆயிரம் ரீயூசனுக்குப் போக வேண்டும், நல்ல பெறுபேறு பெற வேண்டும், பல்கலைக்கழகம் போக வேண்டும் என்ற ஆதங்கம். அலுவலர்களை எடுத்துக்கொண்டால் அதிக சம்பளம் வாங்க வேண்டும், பதவி உயர்வு கிடைக்க வேண்டும், வீட்டுக்குப் பக்கத்தில் வேலைசெய்ய இடமாற்றம் வேண்டும், மேலதிகாரிகளிடம் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்ற ஆதங்கம். வீட்டில் இருக்கும் பெண்களை எடுத்துக்கொண்டால் வீட்டுவேலைகள் செய்ய வேண்டும், பிள்ளைகளை ஏற்றி இறக்க வேண்டும், ரி.வி. பார்க்க வேண்டும், சமையலில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்ற ஆதங்கம். வயதானவர்களை எடுத்துக்கொண்டால் அடுத்த தலைமுறையினரின் போக்கு சரியில்லை என்ற முறைப்பாடு, வீட்டில் என்னை யாரும் மதிப்பாரில்லை, சாப்பாடு சரியில்லை இருப்பதைவிட போய் சேர்ந்திடலாம் என்ற ஆதங்கம்.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் பற்பல விடையங்களோடு போராடிக்கொண்டே வாழ்க்கையை நகர்த்திச்செல்கின்றனர். இன்னும் பலர் பல நோய்களைச் சுமந்துகொண்டு மரண பயத்தோடு நிம்மதியிழந்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பரிமாறப்பட்ட சாப்பாட்டைத் தைரியமாக எடுத்துச் சாப்பிட முடியவில்லை. காரணம் அது சாப்பிட்டால் இது வரும், இது சாப்பிட்டால் அது வரும்... இவ்வாறு பயந்துகொண்டு வாழ்கின்றோம். இவற்றால் எமது மன அமைதியும் பாதிப்படைகின்றது.

### மன அமைதியை இழந்தால்...........

மனதை அமைதியாக வைத்திருக்க முடியாவிட்டால் பல உளவியல், உடலியல் பிரச்சினைகள், இயலாமைகள் ஏற்படக்கூடும். சளி, காய்ச்சல்போல இன்று அனைவரிலும் காணக்கூடிய ஒரு உளப்பிரச்சினையாக இன்று மனஅழுத்தம் காணப்படுகின்றது. இது நாம் மனஅமைதியை இழக்கும் பட்சத்தில் மனதை ஒருநிலைப்படுத்த முடியாத சூழலில் ஒரு குறித்த சூழ்நிலையைச் சமாளிக்க முடியாவிட்டால் ஏற்படும் ஒரு இறுக்கமான மனநிலையாகக் காணப்படுகின்றது. இந்த மன அழுத்தமானது தொடர்ச்சியாக இருக்கும் இடத்தில் இது பாரிய உடல் உள நோய்களுக்கு இட்டுச்செல்லும்.

இலங்கையில் மனஅழுத்த நோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார நிறுவனம் கடந்த ஆண்டு சுகாதார தினத்தின்போது குறிப்பிட்டுள்ளது. இலங்கையில் நூறு பேரில் எட்டுப் பேர் மன அழுத்த நோயாளிகளாக இனம்காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த மன அழுத்தமானது எவ்வாறான பிரச்சினைகளுக்கு இட்டுச்செல்கின்றது என்று நோக்குமிடத்து;

- மன அழுத்தமானது மாரடைப்பு வரக் காரணமாக உள்ளதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதாவது மனஅழுத்தமானது நோய் எதிர்ப்பு சக்தியை செயலிழக்கச் செய்கின்றது. இதனால் குருதியில் வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் அளவு அதிகரித்து நாடி நாளங்களில் மோசமான வீக்கம் ஏற்படுவதாகவும் அவற்றில் சேதம் ஏற்படும்போது மாரடைப்பு, பாரிசவாதம் (ஸ்ரோக்) போன்ற நோய்கள் ஏற்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
- இதய நோய்கள் ஏற்படும். திடீர் மனஅழுத்தத்தின்போது எமது இதயத் துடிப்பு அதிகரிக்கின்றது. இது அடிக்கடி ஏற்படும்போது இதயம் பலவீனம் அடைந்து இதயத்துடிப்பு ஒழுங்கீனமும் ஏற்படும். மேலும் இரத்த அழுத்தமும் அதிகரிக்கும்.
- நோய்கள் தீவிரமடையும். குடற்புண், ஆஸ்துமா, தலைவலி போன்ற நோய்கள் இருப்பின் அவற்றைத் தீவிரப்படுத்தும் காரணியாக இந்த மனஅழுத்தம் அமையும்.
- வயிற்றுச் சமிபாட்டுக் கோளாறுகள் ஏற்பட இது காரணமாக அமைகின்றது. உடலில் சமிபாட்டுத்திறனை இழக்கச் செய்கின்றது.
- ஆஸ்துமா, தூக்கமின்மை, தோல் சம்மந்தமான நோய்களான முடி கொட்டுதல், சருமம் வரட்சி அடைதல், முகப்பருக்கள் தோன்றுதல், உடலில் வலி தோன்றுதல், தலையிடி, முதுகு வலி, தசைப்பிடிப்பு போன்ற பிரச்சினைகளும் ஏற்படும்.

### மன அமைதிக்கு என்ன வழி?

மன அமைதியைப் பெற்றுக்கொள்ள நாம் பின்பற்றவேண்டிய சில நடைமுறைகளையும் தவிர்க்கவேண்டிய சில நடை முறைகளையும் பார்க்கும்போது;• மற்றவர் விடயத்தில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்காதிருப்போம். ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள், ஒவ்வொருவருக்கும் சிந்திக்கும் திறன் உண்டு. எனவே அவரவர் வேலையை அவரவர் பார்க்கட்டும். உதவி தேவைப்படும் பட்சத்தில் அன்றி தேவையற்ற தலையீடுகள் வேண்டாம்.

- பொறாமையை விட்டொழிப்போம். மற்றவர் உயர்வுகண்டு பொறாமை கொள்ளாதிருப்போம். நமது உயர்வுக்கான வழியில் மட்டும் கவனம் செலுத்துவோம்.
- மன்னிக்கவும் மறக்கவும் கற்றுக்கொள்வோம். எமக்குத் தீமை செய்தவர்கள், அவமானப்படுத்தியவர்கள்பற்றி எண்ணிக்கொண்டு நேரத்தையும் தூக்கத்தையும் வீணாக்காமல் 'மன்னிப்பு' என்ற ஒன்றின் மூலம் அதை மறந்து வாழ்ந்தால் மனஅமைதி நமக்கு இலாபம்.
- மற்றவர் பாராட்டை எதிர்பார்ப்பதைத் தவிர்ப்போம், மற்றவர்களின் அங்கீகாரத்தை, பாராட்டை எதிர்பார்த்து அது கிடைக்காதபட்சத்தில் மனமுறிவு அடையாமல் நம்மை நாமே பாராட்டப் பழகிக்கொள்வோம்.
- சூழலுக்கேற்ப நம்மை மாற்றிக்கொள்வோம். காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொள்வோம். தன்னந்தனியாக சூழ்நிலைகளை மாற்றி அமைக்க முயன்று, இறுதியில் உளநெருக்கீட்டிற்கு உள்ளாவதைத் தவிர்த்து மாற்றங்களுக்கேற்ப மாறுவோம்.
- மனதை மந்தமடையச் செய்யாமல் செயற்றிறன் அடையச் செய்வோம். மனதை எதிலும் ஈடுபடுத்தாது மந்தமாக விடாமல் பொது விடயங்கள், சமூக விடயங்களில் மனதை ஈடுபடுத்துவோம். அதுவே மனஅமைதிக்கு வழிவகுக்கும்.
- ''அப்புறம்'' ''பிறகு'' என்ற வார்த்தைகளை அகராதியில் இருந்து தூக்கி விடுவோம். எதையும் பிற்போடும் பழக்கத்தை அறவே ஒழிப்போம். உடனுக்குடன் செய்யவேண்டியவற்றை அந்த நேரமே செய்வோம். அழுத்தங்கள் அழிந்துவிடும்.
- முடியுமா? முயற்சியுங்கள், செய்யுங்கள். அறவே முடியாதா? விட்டுவிடுங்கள்.... மற்றவர்களுக்காக, அங்கீகாரத்துக்காக முடியாததைச் செய்து மூக்குடைபடாதீர்கள். முடியாததை முடியாது என்று தெளிவாகக் கூறிவிடுங்கள்.

இவ்வாறன விடயங்களோடு மனதைச் சாந்தப்படுத்தும் முக்கிய வழிமுறையாகத் **தியானம் செய்தல்** இன்று பிரபலமான முறையாகக் காணப்படுகின்றது. தியானமானது எமது கவலை, பயங்கள், கோபம், மன அழுத்தம் போன்றவைகளிலிருந்து விடுதலை தருகின்றது. இதனை மேற்கொள்ளும்போது அமைதியான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து சம்மாணமிட்டு அமர முடியுமானால் அமரலாம். அல்லது நாற்காலியில் அமர்ந்துகொண்டு முதுகுத்தண்டை நேராக நிமிர்த்திக்கொண்டு அமர்ந்தபடி தியானிக்கலாம். இதனைப் பலவழிகளிலும் மேற்கொள்ளலாம். அதாவது;


- மூச்சுப் பயிற்சி. எமது சுவாசத்தை ஆழப்படுத்தும் செயற்பாடாக இது அமையும். அதாவது ஆழமான உட்சுவாசத்தை உள்ளெடுத்து, அதனைச் சில நொடிகள் தக்கவைத்து, நீண்ட வெளிச்சுவாசத்தை வெளிவிடுதல் ஆகும். இதனைப் பல தடவை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.
- மந்திர உச்சாடனம். இதில் ஒரு மந்திரத்தையோ அதாவது ஆன்மீகம்சார் ஒரு வசனத்தையோ தொடர்ச்சியாக பலதடவை உச்சரித்துத் தியானித்தல் ஆகும். இந்துக்கள் 'ஓம்' என்ற நாமத்தை உச்சரிப்பார்கள். அதேபோல கத்தோலிக்கர்கள் 'ஆமென்' அல்லது 'இயேசுவே போற்றி' போன்றவற்றை உச்சரிக்கலாம்.
- மெல்லிய இசையுடன்கூடிய தியானம். இதமான மெல்லிய இசையைக் கேட்டபடி கண்களை மூடித் தியானித்தல். இசையின் ஏற்ற இறக்கங்கள், சுருதி லயங்கள் என்பவற்றை ஆழமாக உன்னிப்பாக உணர்தல். அதில் மட்டுமே எமது முழுக் கவனத்தையும் செலுத்தி தியானிக்கலாம்.
- ஒளி தியானம். தீப ஒளியை முன்னிறுத்தி அதனை இரண்டு நிமிடங்கள் தொடர்ச்சியாகப் பார்த்தபடியே கண்களை மூடிகொண்டு அந்த ஒளியை மட்டுமே மனக்கண்களில் வைத்து சுவாசப் பயிற்சியோடு தியானிக்கலாம்.

இவ்வாறன பலமுறைகள் இன்று நாம் எமது மனதை சாந்தப்படுத்தும் வழிவகைகளாகக் கையாளலாம். அத்தோடு யோகாசனம் மற்றும் உடற்பயிற்சி என்பனவும், உடலையும் உள்ளத்தையும் நலமாக்கும் வழிகளாகும்.

எனவே வாழ்வில் பொருள் தேடி, புகழ் தேடித்திரியும் எம் அலைபாயும் மனங்களை நிலையாக்கி அமைதிப்படுத்த, எமது வாழ்வை அர்த்தமுள்ள வாழ்வாக்க மன நலம் காக்க மன அமைதி பேணுவோம். **(மனநலம் தொடரும்)**


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.



தரம்கண்டு பிரசுரிப்போம்

*- மன்னா நிர்வாகம் -*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.187

**மத்தேயு (அதிகாரம் 1 முதல் 28 முடிய)**

உங்கள் விடைகளை மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | | | | | | | 03 |
| | 04 | | 05 | | 06 | | 07 | | |
| | | | 08 | 09 | | 10 | | | |
| | 11 | 12 | | | 13 | | 14 | | |
| | | | 15 | 16 | | | | | 17 |
| 18 | | | ❖ | 19 | 20 | ❖ | 21 | | |
| | 22 | | 23 | | 24 | 25 | | | |
| | 26 | | | | 27 | | 28 | | |
| 29 | | | | 30 | | | 31 | | 32 |
| | | 33 | 34 | | | | 35 | | |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### வலமிருந்து இடம்

1. உடனே மிகுந்த ............................ உண்டாயிற்று.
2. நெறிதவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் .....................
5. கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் ......................... எனப் பதிலளித்தார்.
7. ஏனெனில் நாளையக் கவலையைப் போக்க ............. வழிபிறக்கும்.
10. ஆக, உங்களுக்கு ஒளிதரவேண்டியது இருளாயிருந்தால்...................... எப்படியிருக்கும்?
11. இறந்தோரைப்பற்றிக் ......................... வேண்டாம்.
14. எனவே நீ போய்க் கடலில் தூண்டில் .....................
16. ஒருவர் ............ விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார்.
21. ஏற்கெனவே மரங்களின் வேரருகே ........... வைத்தாயிற்று.
24. எனவே நான் உனக்குக் கூறுகிறேன், உன் பெயர் ...............
25. அங்கே பூச்சியோ ............. அழிப்பதில்லை.
26. உங்களுக்கு விருப்பமிருந்தால் வரவேண்டிய ............... இவரே என ஏற்றுக்கொள்வீர்கள்.
28. அந்நேரமே ................. குணமடைந்தான்.
29. ......................... தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?
33. காலையில் நகரத்திற்குத் திரும்பி வந்தபொழுது அவருக்குப் ................. உண்டாயிற்று.
35. ......................... சீயோனிடம் சொல்லுங்கள்.

### இடமிருந்து வலம்

3. நான் ...................... மனத்தாழ்மையும் உடையவன்.
6. ஏனெனில் ..................யின்மீது அதன் அடித்தளம் இடப்பட்டிருந்தது.
13. .....................யை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள்.
17. கண்தான் உடலுக்கு ........................
23. கொராசின் நகரே .............. உனக்குக் கேடு.
31. ஆனால் நீங்கள் ..................... என அழைக்கப்பட வேண்டாம்.
32. உடனே வானம் திறந்ததையும் கடவுளின் ............ புறா இறங்குவதுபோலத் தம்மீது வருவதையும் அவர் கண்டார்.
33. கடைசியானோர் ............. முதன்மையாவர் என்று அவர்களிடம் கூறினார்.
35. உன் தலைவனாகிய என் .................... யில் நீரும் வந்து பங்குகொள்ளும் என்றார்.

### மேலிருந்து கீழ்

1. அவர் ....................... என்னிடம் இங்கே கொண்டுவாருங்கள் என்றார்.
3. உடனே அவர்களின் ............. திறந்தன.
4. சிறையில் இருந்தேன், என்னைத் .......... வந்தீர்கள் என்பார்.
8. ................. செய்யாதே.
10. இதோ உங்கள் ............. இல்லம் கைவிடப்பட்டுப் பாழடையும்.
12. அவர் என்னைவிட ........... மிக்கவர்.
17. பரிசேயர், சதுசேயருள் பலர் ---- நோக்கி "..................... பாம்புக் குட்டிகளே வரப்போகும் சினத்திலிருந்து --- சொன்னவர் யார்?"
18. ஏனெனில் உங்கள் .............. எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது.
23. அவர் மறுமொழியாக நான் போகிறேன் .............. என்றார்.
25. அவர்மேல் .................. அக்கோலை எடுத்து அவருடைய தலையில் அடித்தனர்.
27. அவர்கள் .................ப் பாடல் பாடிவிட்டு ஒலிவமலைக்குச் சென்றார்கள்.
32. ................ பார்த்துச் செயல்படாதவர் என்பது எங்களுக்குத் தெரியும்.

### கீழிருந்து மேல்

9. ஏனெனில் அவர்கள் ................... பெறுவர்.
10. நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே ...........................
12. இந்நாள்வரை இந்த ................ யூதரிடையே பரவியிருக்கிறது.
13. அந்நாளில் ............. என்னும் பேர்போன கைதி ஒருவன் இருந்தான்.
15. அதற்கு அவர், இது பகைவனுடைய ..................... என்றார்.
18. எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் யோர்தான் .................... அடுத்துள்ள ----- சென்றார்கள்.
19. இல்லையெனில் நீங்கள் விண்ணரசில் ............. முடியாது என உங்களுக்குச் சொல்லுகிறேன்.
20. ஐயோ! பாவத்தில் விழச் செய்யும் உலகுக்குக் .......................
22. இயேசு தமது கையை நீட்டி அவரைத்தொட்டு நான் விரும்புகிறேன். உமது நோய் .............. என்று சொன்னார்.
30. இயேசு மறுமொழியாக ............. உமது நம்பிக்கைப் பெரிது.
33. ............. பாவமில்லாதவரைக் காட்டிக்கொடுத்துப் பாவம் செய்தேன் என்றான்.
34. அவரைப்பற்றிய பேச்சு .................. நாடு முழுவதும் பரவியது.
35. உம் சீடர் மூதாதையரின் .............. மீறுவதேன்?


## றோசேரியன் கன்னியர் சபை உன்னை அழைக்கின்றது!

**அன்பின் தங்கையரே இளம் நங்கையரே!**

இன்று உலகம் சிறப்பாக எமது நாடு பல்வேறு கலாசாரங்களுக்கு அடிமையாகி, எமது பண்பாடுகளைக் கைவிட்டு மிக மோசமான அழிவுக்குரிய நிலைக்கு மாறிக்கொண்டு போவதையும், பாவம் பெருமளவில் பெருகி வருவதையும் நாம் அறிகின்றோம்.

"பாவம் பெருகிய இடத்தில் அருள் அணைகடந்து பெருக்கெடுத்தது" என்னும் அருள்வாக்கிற்கு ஏற்ப, இந்தப் பாவக்குழிக்குள் விழுந்துகொண்டிருக்கும் எம் சகோதர சகோதரிகளை மீட்க, அன்னை மரியா கேட்டுக்கொண்டபடி செபம் தபம் செய்து செபமாலை செபிப்பதன் மூலம் இவர்களை மனம் மாற்றி இறைவனிடம் கொண்டுவந்து இறையருளைப் பெற்றுக் கொடுக்கலாம். இதற்குச் செயலுருக்கொடுக்கவும், செபதபம் செய்து இரவுபகலாக நற்கருணைநாதர்முன் செபமாலை செபிக்கவும் எம் சபை நிறுவினர் வண. தோமஸ் அடிகளார் றோசேரியன் சபையை நிறுவினார்.

நாம் எம் அன்பு அன்னை மரியாவுடன் இணைந்து இரவுபகலாய் நற்கருணைநாதர்முன் மீட்பின் மறை உண்மைகளைத் தியானித்து செபமாலை செபிப்பதன் மூலம் இறைவனின் இரக்கத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும். இன்னும் பலர் தம் தேவைகளில் எல்லாம் எமது செப உதவியை நாடி வருகிறார்கள். அவர்களுக்காக எல்லாம் நாம் இறைவனிடம் பரிந்துபேசி பெற்றுக்கொடுக்கிறோம்.

இந்த மேலான செபஅப்போஸ்தலப் பணியை முன்னெடுக்க உங்களுக்கு விருப்பமானால் எம்முடன் இணைந்துகொள்ள உங்களை அழைக்கின்றோம்.

**எமது முகவரி:**

Rosarian Convent,
Pattim,
Mannar.

Rosarian Generalate,
'Thoma Monastery'
48, Colobuthurai road,
Pandiyanthalvu,
Jaffna.


## புனிதர்களின் பாதையில் .....

**11ஆம் பக்கத் தொடர்ச்சி**

ஆதரவற்றவர்கள் எண்ணிக்கை பெருகியதால் தனியாக ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அங்கே தங்கவைத்தார். தன்னலமில்லா ஈடுபாடுடைய பொதுநிலையினர் சிலரின் உதவியுடன் அவர்களது தேவைகளை நிறைவேற்றினார். குணமாக்கிட முடியாத, நோயுள்ளோருக்கான மருத்துவமனைக்குச் சென்று சேவை செய்தார். வெரோனா மக்களிடம் பேசி மருத்துவமனை கட்ட ஊக்கப்படுத்தினார்.

ஜெரோமின் பணியினால் ஈர்க்கப்பட்டு அருள்தந்தையர்கள் அலெக்சாந்ரோ பெசுசியா மற்றும் அகஸ்டினோ பரிசோ இருவரும் தங்களை அவருடன் இணைத்துக்கொண்டார்கள். பணிக்கான தேவை அதிகரித்ததை உணர்ந்து, 1532இல் புதிய துறவற சபையை நிறுவினார் ஜெரோம். சபைக்கான ஒழுங்குவிதிகளில், "அநாதைகள், ஏழைகள், நோயுற்றோருக்குச் சிறப்பான கவனத்துடன் பணியாற்ற வேண்டும். நாம் நமது உடை, உணவு, உறையுள் அனைத்தின் வழியாகவும் ஏழைகளுக்கு உதவவேண்டும்." என்று குறிப்பிட்டார்.

ஏழைகளின் அன்பு உள்ளமாக வாழ்ந்த ஜெரோம் 1537 பெப்ரவரி 8 அன்று தமது சபையின் தலைமையகத்தில் சொமாஸ்கோ என்னும் இடத்தில் இறையடி சேர்ந்தார். திருத்தந்தை 14ஆம் ஆசிர்வாதப்பர் 1747 செப்ரம்பர் 29 அன்று இவரை அருளாளராக அறிவித்தார். திருத்தந்தை 13ஆம் கிளமண்ட் 1767 ஜீலை 16இல் இவரைப் புனித நிலைக்கு உயர்த்தினார்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம்:** கறுப்பு வெள்ளை 4,500/=, கலர்7,500/=

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 185

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**



**முதலாம் பரிசு:**
G. அனோஜன்,
சாந்திபுரம், மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
T. நிவேதா,
திருக்கேதீஸ்வரம்,
மாந்தை.

**மூன்றாம் பரிசு:**
S. அன்சிகா,
களிமோட்டை,
முருங்கன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 76 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 66 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 185ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. D.P. டக்சன் யோனாஸ், மாவிலங்கேணி, முருங்கன்.
02. ஜேம்ஸ் இலக்கியன், வேதசாட்சிகள் கோவிலடி, தோட்டவெளி
03. இராணி அரசரட்ணம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
04. T. ஜெராட், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
05. இசக்கியேல் ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
06. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, மன்னார்.
07. S. யூலிக்ஷா, இல: 38, வீரபுரம், நேரியகுளம், வவுனியா.
08. D.P. சாறா, மாவிலங்கேணி, முருங்கன்.
09. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
10. டெபேறா மோகன்றாஜ், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
11. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை
12. ம. றொசாணி, நானாட்டான்.
13. ஜெனிற்றா, கற்குளம்-2, சிதம்பரபுரம், ஆசிகுளம்.
14. I. இருதயமேரி, இல: 54, கற்குளம்-2, சிதம்பரபுரம்.
15. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
16. G. வினோ சர்மி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
17. பி. பிரவின், மானிப்பாய், யாழ்ப்பாணம்.
18. க. மடோனா, இல: 54, கற்குளம்-2, சிதம்பரபுரம்.
19. ஞா. ஜெரூஷன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
20. பி. பிரதீபா, பெரிய கோவிலடி, பாசையூர்.
21. G. வினோ தர்ஷி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
22. அ. கிளேயறா, எமில்நகர், மன்னார்.
23. பெ. நிமல்றாஜ், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
24. ஞா. கொலன்றீசா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
25. வி. தாசன் டலிமா, தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
26. பெனடிற் ஜோசப் சிந்துஜா, இல: 27, எழுத்தூர், மன்னார்.
27. ப. நிறோஜன், பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
28. ஞா. செலன்ரீஸ், முதலைகுத்தி, உயிலங்குளம்.
29. க. அசோக்குமார், உயிர்த்தராசன்குளம், முருங்கன்.
30. அ. கௌமிதா, கொக்குப்படையான், சிலாவத்துறை.
31. ப. மதுமிதா, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.
32. பீற்றர் றஜிக்குமார், ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம்.
33. இ. கிசோர், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
34. ம. புஸ்பாகரன், லூக்கா வீதி, தாழ்வுபாடு, மன்னார்.
35. ஆனந்தன், பெரிய பண்டிவிரிச்சான், மடு.
36. பி. அன்ரோ விதுஷன், கொக்குப்படையான், சிலாவத்துறை.
37. அ. அனற் றுக்சனா, சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
38. ஏ. சர்மிலா, கீரி, தாழ்வுபாடு வீதி, மன்னார்
39. அ. அனுசியா, முதலைகுத்தி, உயிலங்குளம்.
40. ஜே. சிந்துஜா, எழுத்தூர், மன்னார்.
41. அ. கெலன், முதலைகுத்தி, உயிலங்குளம்.
42. அ. மேரி பற்றிமா, தாழையடி, யாழ்ப்பாணம்.
43. ஐ. இருதயமேரி, கற்குளம், சிதம்பரபுரம்.
44. அ. பிறாங், கொச்சிக்கடை, கொழும்பு.
45. புஸ்பாகரன், குருநகர், யாழ்ப்பாணம்.
46. அ. சாமினி, கொச்சிக்கடை, கொழும்பு.
47. அ. ஞானப்பிரகாசம், முதலைகுத்தி, உயிலங்குளம்.
48. ம. ஐடா, ஊர்காவற்துறை, யாழ்ப்பாணம்.
49. டெய்சி, பெற்றா, மன்னார்.
50. அலைக்ஸ் நிசாந், சிலாவத்துறை, முருங்கன்.

## மன்னார் மறைமாவட்டம் ....

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

**மறைசாட்சிகளின் கல்லறையில் ஆயர் அவர்கள் முழந்தாட்படியிட்டுச் செபம்:**

மன்னாரில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (1544இல்) கிறிஸ்துவின் விசுவாசிகளானார்கள் என்பதற்காகக் கொலைசெய்யப்பட்ட விசுவாசிகளின் எலும்புகள் புதைக்கப்பட்ட கல்லறைக்குச் சென்ற ஆயர் அவர்கள் சில நிமிடங்கள் அங்கு முழந்தாட்படியிட்டுச் செபித்தார். ஆயரின் இந்தச் செயல் பலருடைய உள்ளத்தையும் தொட்ட ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது.

**புதிய உரோமைத் திருப்பலி நூல் அறிமுகமும் திருப்பலியும்:**

அதன் பின்னர் தோட்டவெளித் தியான மண்டபத்தில் இறைமக்கள், துறவியர், குருக்கள், மற்றும் அரச, அரசசார்பற்ற நிர்வாகக் கட்டமைப்பின் பணியாளர்கள் புடைசூழ திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் ஆயர் புதிய உரோமைத் திருப்பலி நூலை வெளியிட்டு, மன்னார் மறைமாவட்டத்தின் எல்லாப் பங்குகளிலும் இத்திருப்பலிப் புத்தகமே பயன்படுத்தப்படும் என்றும், அத்திருப்பலிப் புத்தகத்திலுள்ளபடியே மாற்றியமைக்கப்பட்ட செபங்களைச் சொல்லவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். திருப்பலியைத் தொடர்ந்து மறைசாட்சியரின் தூய அன்னையின் திருவுருவ ஆசீருடன் விழா இனிதே நிறைவுற்றது.

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 03 1934



உதிர்வு 15 02 2017

### திரு. ம. அந்தோனிப்பிள்ளை நவரட்ணம்

(எழுத்தூர், மன்னார்)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவின் துயரம்
எங்கள்மேல் நீங்கள் கொண்டிருந்த
பாசத்திற்கும், அன்பிற்கும் அடையாளமாய்
என்றும் எங்களோடு நீங்கள் வாழ்கின்றீர்கள்.
கண் கலங்காமல், கஷ்டம் அறியாமல்
எங்களை வாழவைத்த உங்களை
என்றும் நன்றியோடு நினைத்திருப்போம்.
என்றும் உங்கள் ஆன்மா இறை உறவில் வாழ்ந்திட
இறைவனை மன்றாடி வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்;**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 02 1974



உதிர்வு 13 02 2014

### திருமதி. அகஸ்ரா தியோபின் விமல் றோய் (நிரோஷா)

(இறம்பைக்குளம், வவுனியா)

**"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா. 116:15)**

மண்ணில் பிறந்தவர்கள் மடிவது உண்மை என்றாலும்,
என் கண்மணி நிரோஷா இன்னும் சாகவில்லை.
நான்கு ஆண்டுகள் என்ன 40 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்,
என்றும் நீங்காத உன் நினைவுகளோடு
வாழ்கின்றோம் அம்மா.
உன் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்;**
அன்பு அம்மா, கணவர், சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

## 8ம் ஆண்டு, 9 1/2ம் ஆண்டு நினைவஞ்சலி





### திறினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

### ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

**"ஆண்டவர் தம் அடியாரின் மரணம் அவருடைய பார்வையில் மிக மதிப்பிற்குரியது" (தி.பா.115:6)**

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

***பிரிவால் துயருறும்:***
***சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.***
***தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்***

# தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த குருக்கள் குழுவினர் இலங்கைத் தமிழ் மறைமாவட்டங்களைத் தரிசித்தனர்



"உங்களோடு சேர்ந்து பயணிக்க வந்திருக்கின்றோம். பயணத்தை ஆரம்பியுங்கள். நாங்கள் உங்களுக்கு வலுவூட்டுகின்றோம். நாம் அனைவரும் இறைமக்கள். நம்மை யாரும் பிரிக்க முடியாது. நிலைத்த, உறுதியான, நீடித்த, தொடர்ச்சியான, உயிர்த் தொடர்பை நாம் உருவாக்க வந்திருக்கின்றோம்" என்னும் பரிவுள்ளத்தோடு இந்தியா தமிழ்நாடு கத்தோலிக்க அருட்பணியாளர் குழுவொன்று இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களிடம் வலுவிழந்துபோயுள்ள ஆன்மீகப், பொருளாதார, சமூக, கலாசார, அறிவியல் துறைகளில் ஆக்கபூர்வமான வளர்ச்சியை உருவாக்கி, கடந்தகால கசப்பான, சோக வரலாற்றிலிருந்து மக்களை மீட்டெடுத்து, புதிய உத்வேகத்தை உருவாக்கும் நோக்குடன், இன்றைய இலங்கைத் தமிழ் மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அதனைச் சீராக்க இந்தக் குழு பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்தக்குழுவை மதுரை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியார் அந்தோனி பாக்கியம் அடிகளார் தலைமை தாங்கினார். அவரோடு இணைந்து கோயம்புத்தூர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. பாலு அடிகளார், சிவகங்கை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. அமல்றாஜ் அடிகளார், அருட்பணி. கிளமென்ற் அடிகளார் மற்றும் மதுரையைச் சேர்ந்த திரு. றாஜூ ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இவர்கள் தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் மதுரைப் பேராயர் மேதகு அந்தோனி பாப்புசாமி ஆண்டகை மற்றும் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் மேதகு சூசை மாணிக்கம் ஆண்டகை ஆகியோரின் நெறிப்படுத்துதலோடு இப்பணியை முன்னெடுத்துச் செல்கின்றனர். இவர்கள் இலங்கையில் தமிழ் பேசும் மக்களைக்கொண்ட மறைமாவட்டங்களாகிய மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மறைமாவட்டங்களுக்குச் சென்று, தமிழ் பேசும் கத்தோலிக்கராக நாம் இணைந்து நம்முடைய ஆன்மீக வளர்ச்சியில் ஒருவருக்கொருவர் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதையும், தமிழ் கத்தோலிக்க திருச்சபையாகிய நாம் எவ்வாறு பாகுபாடற்ற விதத்திலே எல்லா மக்களுக்கும் பணியாற்ற வேண்டும் என்பது பற்றியும், இன்றைய சூழலில் போருக்குப் பின்னரான நமது மக்களின் அவலங்களுக்கு நாம் எந்தெந்த வகையிலே உறுதியான தீர்வையும், உதவிகளையும் வழங்க முடியும் என்பது பற்றியும் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். அந்தந்த மறைமாவட்டக் குருக்களோடு மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் முன்னோடித்திட்டங்கள் சில வகுக்கப்பட்டுள்ளன.

## மன்னார் மறைமாவட்டத்தில் இக்குழுவினர் :

இதன் அடிப்படையிலேயே மன்னார் மறைமாவட்டத்திற்கு இப்பணியை முன்னெடுத்துச் செல்ல நான்கு நாள் பயணமாக இந்தக் குழுவினர் மன்னார் மறைமாவட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் ஆண், பெண் துறவற சபைகளின் பிரதிநிதிகளை மன்னார் குடும்பப் பொதுநிலையினர் பணி மையத்தில் சந்தித்து உரையாடல்களை நடத்தினர். 17.01.2018 அன்று காலையில், மன்னார் ஆயர் இல்லக் கேட்போர் கூட்டத்தில், மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடிய பின்னர், இப்பணியை முன்னெடுத்துச்செல்ல பணிக்குழு ஒன்றையும் ஏற்படுத்தினர். உடனடியாகச் செயற்படுத்தப்பட வேண்டிய பணிகள் இந்தக் குழுவின் உதவியுடன் முன்னுரிமைப்படுத்தப்பட்டன.

நாம் தமிழ்நாட்டுக் கத்தோலிக்க திருச்சபைக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கின்றோம். சிறப்பாக தமிழ் நாடு கத்தோலிக்க திருச்சபை எம் மக்களுக்குச் செய்த அளப்பெரும் உதவிகளை மறந்துவிட முடியாது. தூய யோசவ்வாஸ் அடிகளார் இலங்கைக்கு வந்தபோது எமது மன்னார் மண்ணிலேதான் முதன் முதலாக பாதம் பதித்தார். உங்களுடைய வருகையும், நல்லெண்ணமும் எமக்கு மகிழ்ச்சியையும், புதிய உற்சாகத்தையும் தருகின்றது. நாம் என்றும் உறவில் நிலைத்திருப்போம். இவ்வாறு 17.01.2018 அன்று காலையில், மன்னார் ஆயர் இல்லக் கேட்போர் கூட்டத்தில் இந்திய தமிழ்நாடு கத்தோலிக்க அருட்பணியாளர் குழுவினர் மன்னார் மறைமாவட்ட அருட்பணியாளர்களைச் சந்தித்தபோது அதனை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெனாண்டே ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

## நானாட்டான் பங்கு ......

1ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைமாவட்டத்தின் பழம்பெரும் பங்குகளில் ஒன்றான நானாட்டான் பங்கு ஆலயமான புனித அடைக்கல அன்னை ஆலயம் பல்லாண்டுகாலப் பழமையான ஆலயமாக விளங்குகிறது. இந்த ஆலயக் கட்டடம் வளர்ந்துவரும் சனத்தொகையை உள்ளடக்கமுடியாத நிலையிலும், பழமையானதாக இருந்த நிலையிலும், கடந்த யுத்த சூழ்நிலையால் அது பல்வேறு தாக்கங்களுக்கும் உள்ளாகி இருந்த நிலையிலும் புதிய ஆலயம் அமைக்கப்படுவதற்கான தேவை எழுந்தது.

புதிய ஆலயக் கட்டுமானப் பணிகள் 10 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு தற்போது நிறைவடைந்துள்ள நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பிரமாண்டமான, அழகிய புதிய ஆலயத்தின் திறப்பு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இப்புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்தார்.

இப்பங்கின் வங்காலைத் திசைப் பக்கமாக அமைந்துள்ள கிளை ஆலயமான ஆவணம் கிராமத்தின் பிரதான வீதியில் இருந்து ஆயர் அவர்கள் உந்துருளி அணிப் பவனியோடும் பொம்மைக் குதிரை அணிவகுப்போடும் அழைத்துவரப்பட்டார். நானாட்டான் பாடசாலைச் சந்தியில் வைத்து குருக்கள், துறவிகள், இறைமக்களால் வரவேற்கப்பட்டு நானாட்டான் மத்திய மகாவித்தியாலயத்தின் மேலைநாட்டு மகிழ்வொலி இசைக்குழுவினரின் அணிவகுப்போடு ஆலயத்தை வந்தடைந்தார்.

இதனைத் தொடர்ந்து திருச்சபையின் திருவழிபாட்டு ஒழுங்குமரபில் குறிக்கப்பட்டபடி உரிய நேரங்களில் ஆலயம் பலிப்பீடம், தூய நற்கருணைப் பேழை ஆகியவற்றை ஆயர் அர்ச்சித்துப் புனிதப்படுத்தினார்.

பெருந்தொகையான குருக்கள் துறவிகள் இறைமக்களோடு அரச, அரச சார்பற்ற பணியாளர்களும் ஏனைய சமயத் தலைவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இப்பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. க. அன்ரனிற்றோ அருள்றாஜ் குரூஸ் அடிகளார் ஆலயத்தின் கட்டிடப் பணியையும், புதிய ஆலயத்தின் திறப்புவிழா நிகழ்வையும் சிறப்பாக நெறிப்படுத்தி ஒழுங்கமைப்புச் செய்திருந்தார்.

## மன்னா சந்தாதாரர் கவனத்திற்கு!



மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவைச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். நன்றி!

**- மன்னா நிர்வாகம்.**

## இல்லற வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளிவிழா வாழ்த்து!



### திரு. திருமதி. மனோகரன் மாலா

(உக்குளாங்குளம், வவுனியா)

**1993.03.03 - 2018.03.03**

“நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன் அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்” (எபி. 13:5)

இல்லறம் என்னும் நல்லறத்தை
இனிதே இவ்வுலகில் ஏற்று
இந்நல்லறத்தில் நெறிபிறழாது வாழ்ந்து
இறைவன் அருளால் ஓர் புதல்வர்
முப்புதல்வியரைப் பெற்று
இல்லற வாழ்வில் இனிய பெற்றோராய்
இறைவன் இயேசுவின் இனிய வழியில்
இருபத்தைந்து ஆண்டுகளை
இனிதாய்க் கடந்தீர்!

இடர்பல கண்டீர் பிள்ளைகள் எமக்காய்
இன்முகத்துடன் வாழ்வினைக் கரைத்தீர்.
இதமாய் பிள்ளைகள்எமை வழிநடத்தினீர்
இறை விசுவாசத்தின் தூண்களாய்
எந்நாளும் நீங்கள் நலமுடன் வாழ
இறையாசீரோடு நீடூழி வாழ்கவென
இனிதுற வாழ்த்துகின்றோம்
அன்புப்பிள்ளைகள் நாம்!

**வாழ்த்துவோர் :**
பிள்ளைகள் : தினுஜா, அன்ரன் மனோஜ், ஜெனிற்றா, ஜென்சி, அம்மம்மா, அம்மப்பா, உறவினர்கள்.




# நீங்காத நினைவுகள்

## 26ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 06 1936 — உதிர்வு 01 02 1992



### அன்ரன் கிங்சிலி தேவதாசன் (அழகக்கோண்)

(எழுத்தூர், மன்னார்)

அன்பு அப்பா...
பதின் பருவங்களின்
பாதியில் நீங்கள் பிரிந்தாலும்
வருடங்கள் பல கடந்த பின்னும்
பாசம் நிறைந்த உங்களுக்குரிய இடம்
எம்மனங்களில் இன்னமும் வெறுமையாய்.....

பிரிவால் நினைந்துருகும் :
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 01 1954 — உதிர்வு 04 02 2015



### திரு. சீமான் ஜோசப் (நானாட்டான்)

பன்னீரைந்து வருடங்கள் இப்புவிதனில்
பாசமுகம் காட்டிப் பழகி வந்தீர்.
பண்புடனே அனைவரையும் சிரிப்பால் மகிழவைத்தீர்.
உம்முக வதனம் கண்டு
மூன்று ஆண்டுகள் உருண்டோடியதோ?
இறைவனின் அழைப்பிற்கு நீர் இணங்கி
எம் ஒவ்வொருவரையும் விட்டுப்பிரிந்து சென்றீர்.
விண்ணில் அமைதியான வாழ்வு வாழ
எம் செபங்களில் உமக்காய் வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் :
மனைவி, பிள்ளைகள், மைத்துனர்கள்,
உற்றார், உறவினர்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 12 1961 — உதிர்வு 19 02 2016



### திரு. ந. சகாயநாதன் (சீசர், ரவி)

(பனங்கட்டுக்கொட்டு, மன்னார்)

மண்ணக வாழ்வை முடித்துக்கொண்டு
எம்மைப் பிரிந்து விண்ணகம் நோக்கிச் சென்ற
எமது அன்புக்குரிய அருமை அப்பாவே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஈடுசெய்ய முடியவில்லை உங்கள் இழப்பை!
உங்கள் அன்பிற்காய் அனுதினமும் ஏங்கித் தவிக்கின்றோம்
இறைதிருவடியில் இன்புற்றிருப்பீர்கள்
என்ற நம்பிக்கையில் அமைதி அடைகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும் :
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 11 06 1920 — உதிர்வு 26 02 2017



### வ. சேவியர் கூஞ்சு (தங்கராசா)

(முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை)

அன்பின் அப்பா! நீங்கள் இறைபதம் அடைந்து
காலங்கள் பல கடந்தபோதும் நீங்கள் எங்களிடம்
தந்துவிட்டுச் சென்ற இனியநல் நினைவுகள்
எம் இதயத்தில் இனிதாய் நிறைந்து நிற்கின்றன.

எமக்குத் துன்பங்கள் வரும்போது தோள்கொடுத்து
எமது துயரம் போக்குகின்றீர்கள்.
எமது மகிழ்வான வேளைகளில் நீங்களும் மகிழ்கின்றீர்கள்.
இறைவன் பாதமலர்களிலிருந்து
எம் விண்ணப்பங்களுக்காய் இனிதாய்ச் செபித்திடுங்கள்!

பிரிவால் நினைந்துருகும் : பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 11 06 1949 — உதிர்வு 07 01 2018



### கயித்தான் பர்ணவாஸ் (பாப்பா)

(பொன்தீவு கண்டல், முருங்கன்)

பாசத்தை உம் வளர்ப்பில் கண்டோம்.
தியாகத்தை உம் செயல்களில் ண்டோம்.
முப்பத்தொரு நாட்கள் மறைந்து போய்விடினும்
ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில் அப்பா!

நீங்கள் தொலைதூரத்தில் அல்ல;
எம் விழிஓரத்தில் இருக்கின்றீர்கள்.
துயர் சுமந்து எமக்காய் திரியாகி ஒளிதந்தீர்
வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்குக் காட்டினீர்.

இன்று ஆயனில்லா ஆடுகள்போல் அந்தரிக்கின்றோம்
நித்தமும் உம் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
நின் ஆன்மா இளைப்பாற இறைவனை வேண்டுகிறோம்.
**பிரிவால் நினைந்துருகும்,** குடும்பத்தினர்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 03 1921 — உதிர்வு 27 02 2017



### திருமதி. டோமினிக் லூர்து மேரி

(பொன்றோஸ் மார்க் – வங்காலை)

எங்களைக் கருவாக உருவாக்கி, உயிரூட்டினீர்.
உதிரத்தை உணவாக ஊட்டி வளர்த்தீர்.
பாசமிகு ஒன்பது உடன்பிறப்புக்களையும் இணையவைத்தீர்.
உற்றார் உறவினர்களைக் காட்டி சிறப்புடன் வாழவைத்தீர்.
துள்ளித்திரிந்த பருவத்தில் எமது துடுக்கு அடக்கி
பள்ளிக்குப் போகவைத்து பல்கலைகள் பயிலவைத்தீர்.
நாடும் ஏடும் போற்றக்கூடியவாறு வாழ்க்கையைக் காட்டினீர்.
தகப்பனை இழந்த பின்னும் கலங்காமல் எங்களை வளர்த்தீர்.
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்வரை கண்டு
களிகூர்ந்து இன்பமுற்றபின்பு இறைவனடி இணைந்தீர்.
எங்கள் இதய தெய்வமே இறைவனில் இளைப்பாறுவீராக!
***பிரிவால் நினைந்துருகும் : அருட்சகோதரி செலன் லெம்பேட் மற்றும் சகோதர சகோதரிகள்.***